# தமிழினத் தாழ்ச்சிநிலை........

# தொடர்ச்சிநிலையாவது ஏன்?

ஆசிரியர்: சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை

[குருபாரம்பரியத் தொகுதிகளிலிருந்து செய்திகளைத் தேர்ந்தெடுத்து உருவாக்கப்பட்ட ஒரு தொகுப்புக்கட்டுரையே இந்நூல்]

**பிருமணர் எனும் வட ஆரியரின் ஊடுருவலால் தமிழர் வீழ்ச்சி**

நாமறிய இந்தக் கலியுகத்தில் பிற மண்ணினரான **பிருமணர் எனும்வட ஆரியர்கள் இந்து மதத்துக்குரிய இந்தியாவுக்குள் நுழைந்த நாள் முதல்; இந்தியா முழுதும் பரவியிருந்த தமிழர்களின் அக வாழ்வுக்கும், புறவாழ்வுக்கும் பல்வேறுவகையான சிதைவுகளும், சிக்கல்களும், சீரழிவுகளும் சிறுகச் சிறுகத் தோன்ற ஆரம்பித்து விட்டன.** ஆனால், இதனைத் தமிழர்கள் அன்றிலிருந்து இன்றுவரை உணர முடியாமலேயே இருந்து வருகிறார்கள். அதற்குக் காரணம், கடல், நிலத்தைச் சிறிது சிறிதாக அரித்து விழுங்குவது திடீரென்று நிகழ்வதில்லை; அதனை, யாரும் எளிதில் கண்டுபிடிக்க முடிவதில்லை. மேலும், எறும்புகள் கடிப்பதை யானை திடீரென்று உணர்ந்து கொள்ளாது. ஆனால், எறும்பு கடித்து உடம்பில் பெரிய புண் உண்டாகி யானை மாள்வதுண்டு. கண்ணுக்கு எளிதில் புலப்படாத ஊசி முனையளவே உள்ள மிகமிக நுட்பமான உடலமைப்புடைய செல்லுப் பூச்சி; எவ்வளவு பெரிய மரத்தையும், சிறுகச் சிறுக அரித்துத் தின்று பட்டுப்போகுமாறு செய்து; முடிவில், அம்மரம் கீழே விழுந்து மண்ணோடு மண்ணாக மக்கிப் போகுமாறு செய்கின்ற ஆற்றலைப் பெற்றிருக்கிறது.

**வட ஆரியர் ஒற்றுமையோடு முயன்றே வெற்றி' பெற்றனர்**

இவற்றைப் போலத்தான், வட **ஆரியர்கள், மிகமிக நுட்பமான; ஆனால் திட்பமான செயல் திட்டங்களை வகுத்துத் தங்களுடைய சிறிய கூட்டத்தோடு ஒற்றுமையோடும், கட்டுப்பாட்டோடும், ஒரே மாதிரியாகவும், தொடர்ந்து அடக்கமாகவும், அமைதியாகவும் செயல்பட்டு; ஆலமரம் போன்றும், மதயானை போன்றும், பெருநிலம் போன்றும் இருந்த தமிழினத்தை வீழ்த்தித் தாழ்த்தி ஆழ்த்திச் சிதைத்துச் சின்னாபின்னப் படுத்தி விட்டார்கள்.** அதாவது, என்றைக்குமே! எவருமே! எளிதில் தமிழினத்தைக் காப்பாற்ற முடியாத அளவிற்கு; அதாவது, தமிழர்களை என்றைக்குமே இன உணர்வோ!, இனப்பற்றோ!, இன ஒற்றுமையோ!; இன ஒருமைப்பாடோ! அடையவே முடியாதபடிச் செய்து விட்டார்கள் வட ஆரியர்கள். இப்படி, **'வட ஆரிய மாயையெனும் இருள்'**, தமிழர்களின் அகவாழ்விலும், புறவாழ்விலும் கவிழ்ந்து நிறைந்துவிட்டதால் தமிழர்கள்

**ஆரிய மாயை**

அனாதைகளாகவும், நாடோடிகளாகவும், கூலிகளாகவும், எடுபிடிகளாகவும், கங்காணிகளாகவும், பிச்சைக்காரர்களாகவும் உலகெங்கும் பரந்து விரிந்து விட்டார்கள். எனவேதான், தமிழர்கள், தங்களுடைய தாய் நாட்டிலேயே சுயமரியாதை உணர்வோ!, தன்னம்பிக்கை உணர்வோ!, தன்மான உணர்வோ!, இன

**அன்னிய ஊடுருவலால் தமிழர் பெற்ற அவல கேவலங்கள்**

ஒற்றுமை உணர்வோ!, இன ஒருமைப்பாட்டு உணர்வோ!, மொழிப்பற்று உணர்வோ!, மொழியுரிமை உணர்வோ!, பாரம்பரியப் பெருமித உணர்வோ!, பண்பாட்டுப் பிடிப்பு உணர்வோ!.... ஏறத்தாழ இல்லவேயில்லை என்ற நிலையில் வாழ ஆரம்பித்து விட்டார்கள். இந்த வாழ்க்கையினால், தமிழர்கள், **தங்களுடைய நாட்டிலேயே அன்னியர்களைப் போல ஒற்றுமையோ, ஒருமைப் பாடோ, பற்றோ, பாசமோ, இல்லாமல்; தனித்தனிக் கும்பல்களாக, கூட்டங்களாக வாழ ஆரம்பித்து விட்டார்கள். இவர்களுக்கு மொழியறிவோ, மொழிப்பற்றோ, இலக்கிய விருப்பமோ ஏற்படவே முடியாத அளவுக்கு உலகெங்குமுள்ள அன்னியர்கள் இவர்களிடையே ஊடுருவல் செய்து விட்டார்கள்.** எனவே, இந்தத் தமிழர்கள், தங்களுக்கு வழிகாட்டிகளாக, வழித்துணைவர்களாக, ஆசான்களாக, தத்துவ மேதைகளாக, குருமார்களாக, முதலாளிகளாக, அன்னியர்களையே விரும்பியேற்றுப் போற்றிடுபவர்களாகிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால்;

**அன்னியர்களே தமிழரின் வழிகாட்டிகளானார்கள்**

இவர்கள், அன்னிய மொழிகளையும், அன்னிய நாகரீகக் கூறுபாடுகளையும் விரும்பியேற்றுக் கடைப்பிடிப்பவர்களாகி விட்டார்கள். இதனால், தமிழர்கள் என்னும் கடலிலே இனவுணர்வும், மொழியுணர்வும், நாட்டுணர்வும், உடையவர்கள்; சிறு சிறு திட்டுக்களாகவும், தீவுகளாகவும் மாறி விட்டார்கள். தமிழினம் என்னும் பெருங்கடல் திட்டுக்களும், தீவுகளும் நிறைந்த ஆழமற்ற மீன் பிடிக்கும் கடலாகி விட்டது. அனைத்து வகையான அன்னியர்களும்; இந்தக் கடலிலே மீன்பிடித்து வாழ ஆரம்பித்து விட்டார்கள். இதுவே தமிழினத்தின் மெய்யான நிலை, இதனை உணராமலும், உணர்த்தாமலும் கடந்த சில நூற்றாண்டுகளாக தமிழ் வாழ்க! தமிழினம் வெல்க! என்ற கூக்குரல்கள் எழுப்பப்பட்டு வருகின்றன.

**தமிழினத் தலைவர்களின் தோல்வி**

கடந்த இரு நூற்றாண்டுகளாகத் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும், செழிச்சிக்கும் தெய்வீக சத்தி நிலைக்கும் பல தொண்டர்கள், தலைவர்கள், அருளாளர்கள் தோன்றி செயல்பட்டு உள்ளார்கள். ஆனால் உரிய பயன்கள் விளையவேயில்லை. இதுபோலவே பல சமயத் தலைவர்களும், சமுதாயத் தலைவர்களும் தோன்றித் தமிழினச் சமய உணர்வையும், சமுதாய உணர்வையும் விழிச்சியும், எழிச்சியும், கிளர்ச்சியும், அடையச் செய்தார்கள். ஆனால், இவையனைத்துமே, உரிய வளர்ச்சியினை அடைய முடியாமல் தளர்ச்சியினை அடைந்து, வளர்க்கப்பட்ட வேகத்தில் வீழ்ந்தும், தாழ்ந்தும், சிதைந்தும் தேய்ந்தும், மாய்ந்து போயின. இவற்றிற்குக் காரணம், **'தமிழின மறுமலர்ச்சிக்குச் சமய உணர்வும், சமுதாய உணர்வும் இரு கைகள்போல் இணைந்து செயல்பட்டிட்டால்தான் உரிய பயன் விளையும்'** என்ற மாபெரும் தத்துவத்தைத் தமிழ்ச் சமுதாயத் தலைவர்களும், சமயத்தலைவர்களும், ஒப்புக் கொள்ளத்தவறி விட்டார்கள், உணரத் தவறி விட்டார்கள்.

இதனைச் சற்று நேரடியாகக் கூற வேண்டுமென்றால்; தமிழ்ச் சமுதாயத் தலைவர்கள் அனைவருமே, ஏறத்தாழச் சமய வெறுப்பாளர்களாக, கடவுள் மறுப்பாளர்களாக, ஆன்மீக உலகை அறியாதவர்களாக, நாத்திகர்களாக, பகுத்தறிவு பேசும் சீர்த்திருத்த வாதிகளாக, ஆழமான ஆராய்ச்சி அறிவு இல்லாதவர்களாக, பொறுமையான பொறுப்புணர்வு இல்லாதவர்களாக, உலகியல் படி பணம், பதவி, புகழ் முதலியவற்றில் வேகமான மோகம் உடையவர்களாக வாழ்ந்திடுபவர்களாகவே இருந்து வந்திடுகின்றார்கள். இவர்கள். சமய இலக்கியங்களையும், வாழ்வியல் இலக்கணங்களையும், சமுதாயஉணர்வைப்பேணுகின்ற சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளையும், சட்டதிட்டக் கட்டுப்பாட்டு முறைகளையும் புரிந்து கொள்ளத் தயாராக இல்லாதவர்களாகவே வாழ்ந்து வந்திட்டார்கள். இதனால், 'சமய உணர்வு எனும் பேராற்றல் மிக்க அரிய சத்தியைச் சமுதாயத் தலைவர்கள் பெறமுடியாமலும், பயன்படுத்த முடியாமலுமே போய் விட்டது.' இதனைப் பச்சையாகவும், கொச்சையாகவும் சொல்ல வேண்டு மென்றால்: 'சமுதாயத் தலைவர்கள் என்று தோன்றிய அனைவருமே; ஏறத்தாழப் போலி மதவாதிகளாகவும், வெறி பிடித்த நாத்திகர்களாகவுமே இருந்து வந்திட்டார்கள்'; என்பது தான் உண்மை

**தமிழினச் சமுதாயத் தலைவர்களாலேயே தமிழின வீழ்ச்சியும் தாழ்ச்சியும் விளைந்தன**

இதனால்தான், சமுதாயத் தலைவர்களுக்குச் சமயத் தலைவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கவில்லை. சமய உணர்வு உடைய மக்களின் ஆதரவுக்குப் பதிலாக; கடுமையான வெறுப்பும், மறுப்பும், எதிர்ப்பும், கடிய பகையுமே சமுதாயத் தலைவர்களுக்குக் கிடைத்தது. இவற்றால், சமுதாயத் தலைவர்களுக்குத் தேவையான அளவு ஆதரவோ உதவியோ கூடக் கிடைக்கவில்லை. ஆனால் நாட்டு நடப்பில் எவ்வித ஒழுங்கையோ, மரபையோ, கட்டுப்பாட்டையோ, பழக்க வழக்கத்தையோ, தத்துவ முறையையோ சித்தாந்த நெறியையோ கடைப்பிடிக்க விரும்பாமல்; தங்கள் தங்களின் விருப்பு வெறுப்புகளுக்கேற்பக் கட்டுப்பாடில்லாது வாழ விரும்பிய தான்தோன்றிப் போக்குடையவர்களே பெரும்பாலும் சமுதாயத் தலைவர்களை ஆதரித்தார்கள். மேலும், சீர்திருத்தம், புதுமை, புரட்சி, பழமை மறுப்பு, சமய எதிர்ப்பு.........முதலியவற்றின் பெயரால் தான்தோன்றித் தனமான வாழ்வு வாழ விரும்பிய இளைஞர்களும், சில பெரியவர்களும் சமுதாய இயக்கங்களையும், சமுதாயத் தலைவர்களையும் கண் மூடித் தனமாக ஆதரித்து வெறியாட்டம் ஆடினார்கள். இவற்றால், சமுதாயத் தலைவர்களின் பின்னால் ஊருக்குச் சிலர் என்ற சிறுசிறு கூட்டங்களே உருவாகின. இவற்றால், சமுதாயத் தலைவர்களின் கொள்கைகளும், குறிக்கோள்களும், சிந்திப்பாரற்று அனாதை நிலையையே பெற்றிட்டன எனவேதான், தமிழினத்தைத் தட்டியெழுப்பவோ!, ஒற்றுமைப்படுத்தவோ! அன்றி ஒருமைப் படுத்தவோ! இயலாதவர்களாகி விட்டார்கள் சமுதாயத் தலைவர்கள். இவர்களுடைய கழகங்களும், கட்சிகளும், மன்றங்களும், பேரவைகளும், இயக்கங்களும் பெருவாரியான மக்களால் விரும்பப் படாதவைகளாகவும், புரிந்து கொள்ளப் படாதவைகளாகவும் ஆகிவிட்டன. ஆனால், சமுதாயத் தலைவர்கள், தங்களின் வாழ்வியல்களால் வரலாற்றுத் துறையில் நிலையான **நினைவுக் கூறுபாடுகளை** அல்லது அடிச் சுவடுகளை, அல்லது சின்னங்களை உருவாக்கி விட்டுச் சென்றிருக்கிறார்கள். இதனால், சமய உணர்வுடைய அனைவருமே சமுதாயச் சிந்தனையாளர்களையும் சீர்திருத்த வாதிகளையும். புதுமை விரும்பிகளையும். புரட்சியாளர்களையும், என்றென்றும் மறுக்கவும், வெறுக்கவும், எதிர்க்கவும், பகைக்கவுமே தயாராகி விட்டார்கள்.

'இதனல், தமிழினத்தின் மறு வாழ்வு முயற்சிகள், எண்ணங்கள்; '**கானல் நீராக**', 'குதிரைக் கொம்பாக', 'பாலைவனத்தில் பெய்த மழையாக', '**காட்டில் காய்ந்த நிலவாக**'. மாறிவிட்டன! மாறிவிட்டன! மாறிவிட்டன! இந்த நிலை, 'சமுதாய உணர்ச்சியால் (The social thinking, The social feeling. The social Affection) தமிழினத்திற்கு நன்மையை விளைவிக்கவே முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது', என்ற ஓர் இக்கட்டான நிலை உருவாகி விட்டது தமிழகத்தில்.

**சமயத்துக்கும் சமுதாயத்துக்கும் போர்! போர்! போர்!**

சமுதாயத் தலைவர்களாலும், சமுதாயத் தொண்டர்களாலும், சமுதாய நிறுவனங்களாலும், நிர்வாகங்களாலும், பெரும்பாலான சமயவாதிகளின் மனம் வெறிநாய் கிழித்த பழைய கந்தைத் துணி போலாகி விட்டது.' இதனல், சமய வாதிகள். என்றென்றைக்கும் சமுதாய வாதிகளை ஏற்றுக்கொள்ளவே முடியாத அவல மான, ஆபத்தான நிலை உருவாகிவிட்டது. இன்னும் சொல்லப் போனால்; தமிழினச் சமயவாதிகளில் பெரும் பாலானவர்கள் புதுமை, புரட்சி, சீர்திருத்தம், பகுத்தறிவு, சிந்தனை, மறுமலர்ச்சி... முதலிய சொற்களைக் கேட்டாலேயே மருண்டு வெருண்டோடுபவர்களாகவும்; அல்லது மறுத்து வெறுத்து எதிர்ப்பவர்களாகவுமே இருக்கிறர்கள். இந்த மாபெரும் அழிநிலை தமிழினத்திற்கு ஏற்பட்டதற்குக் காரணமே சமுதாயத் தலைவர்கள்தான். எனவே, 'சமுதாய உணர்ச்சி என்ற ஒன்றே போலியானது, கேலியானது, பயனற்றது, ஏமாற்றுனது, ஒழுக்கக் கேடானது' தவருனது......' என்ற கருத்துத் தமிழர்களுக் கிடையிலே பெரிய அளவில் நன்கு பரவி வேருன்றி விட்டது. இதனை மாற்றக் கூடிய பேராற்றல் மிக்க சமுதாயத் தலைவர் தோன்ற முடியுமா? என்ற வினவிற்கு விடை கிடைத்தால்தான்; தமிழினத்திற்கு விடுதலை வாழ்வு. உரிமை வாழ்வு, பெருமை வாழ்வு, சுயமரியாதை வாழ்வு தன்மான வாழ்வு, ஒற்றுமை வாழ்வு......முதலியவை கிடைக்கும்! கிடைக்கும்! கிடைக்கும்! இல்லாவிட்டால், தமிழர்கள், தமிழகத்துக்குள் ளேயே அன்னியர்களின் அடிமைகளாகவும், வேட்டைப் பொருள்களாகவுமே ஆகிவிடு வார்கள். இன்னும் சொல்லப் போனல், தமிழர்களுக்குள்ளேயே சுயநல வெறிபிடித்த பேராசைக்காரர்களும், பண வெறியர்களும், பதவி வெறியர்களும், புகழ் வெறியர் களும்......... தங்களுடைய தாய்மொழியையும், இனத்தையும், நாட்டையும், காட்டிக் கொடுத்து; பிறருக்கு அடிமைப் படுத்தி வேட்டைப் பொருளாக்கி வாழ்ந்திடக் கூடிய அவலக் கேவல நிலைகளே மிகுதியாக வளர்ந்திடும் நிலைதான் தமிழினத்திற்குக் கிடைத்திருக்கிறது. அதாவது, தமிழர்களில் கணிசமான அளவு அன்னியர்களுக்குக் கால் பிடிப்பவர்களாகவும், வால் பிடிப்பவர்களாகவும், காவடி தூக்குபவர்களாகவும், பாதுகை தாங்குபவர்களாகவும், கங்காணிகளாகவும், எடுபிடிகளாகவும், கூலிகளாக வும் வாழுபவர்களாகவே இருந்திடக் கூடிய ஆபத்தான நிலை உருவாகி விட்டது! உருவாகி விட்டது! உருவாகி விட்டது!

இவற்றையெல்லாம், முறையாகவும், நிறையாகவும் எண்ணிப் பார்த்துச் சிந்தித்துக் கொள்கைகளையும், செயல் திட்டங்களையும் உருவாக்கிச் செயல்படக்கூடிய தலைவர்களே தோன்ற முடியாத அரசியல் நிலை (The Political Conditions are not in favour of the Welfare of the Tamils No Politicion wants the Unity and Uniformity of the Tamils. Every Political party attempts to divide and subdivide

the society of the Tamils to get popularity or strength of their own party. It is ridiculous and sarcastic that the Tamils are ready to sacrifice their languages literature racial heriditary rights, Culture and civilisation for the uplift of their political parties So, it is not easy to cultivate the unity and uniformity within the Tamils since the politicians are dead against these......... taken from the writings of Mr. M Palanisamy Pillai His Holiness Siddhar Kakkaiyar) உருவாகி விட்டது. அதாவது, ' தமிழகத்தின் அரசியல்நிலைகள்;

**தமிழர்களின் அரசியல்நிலையின் கேவலங்கள்**

தமிழர்களின் நல்வாழ்வுக்கு உகந்ததாகவோ, உதவுவதாகவோ இல்லை! ஓர்அரசியல்வாதி கூடத் தமிழர்கள் ஒற்றுமையுடன் இருக்க வேண்டுமென்றோ, ஒருமைப்பாட்டுடன் இருக்க வேண்டுமென்றோ உண்மையில் விரும்பவில்லை. எல்லா அரசியல் கட்சிகளுமே (கழகங்கள், இயக்கங்கள்) தமிழ் மக்களைப் பெரும்பிரிவுகளாகவும், சிறு சிறு பிரிவுகளாகவும் பிரித்து; எப்படியாவது, தங்கள் தங்களுடைய கட்சியின் செல்வாக்கையும், வலிமையையும் வளர்த்துக் கொள்ளவே போட்டி போடுகின்றன. ஆனால், தமிழர்கள் கேலிக்கும், கிண்டலுக்கும், வியப்புக்கும் விளங்காமைக்கும் உரிய வண்ணம் பல்வேறு அரசியல் கட்சிகளில் பிரிந்து; தங்கள் தங்களின் கட்சிகளை வளர்க்க வேண்டுமென்பதற்காக ஒருவரோடு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு தங்களுடைய மொழி, இலக்கியம், இன உரிமை, பண்பாடு, நாகரீகம்...... முதலியவைகளையெல்லாம் தியாகம் செய்ய, பலியாகக்கொடுக்க விலையாகத் தரத் தயாராயிருக்கிறார்கள்,'' என்ற கருத்தினை இந்து மறுமலர்ச்சி இயக்-கத்தின் இரண்டாவது தலைவராக இருந்த காக்கா வழியன், பண்ணையாடி, சித்தர் காகபுசுண்டர்,அருள்மிகு சித்தர் காக்கையர், ம. பழனிசாமிபிள்ளை அவர்கள் வழங்கியுள்ளார். அதாவது, இவர், ஓர் உலக அரசியல்வாதி என்பதால் மேலே கூறிய, கருத்தின் இறுதியில்,''......தமிழக அரசியல்வாதிகள் பணம், பதவி, பட்டம், புகழ் என்ற குறுகிய பேராசை வெறியிலேயே பெரும்பாலும் செயல்படுகின்ற காரணத்தினால்: இவர்கள், தங்கள் தங்களுடைய தனிப்பட்ட செல்வாக்கை வளர்த்துக் கொள்ளுவதற்காகவும். தாங்கள் சேர்ந்துள்ள அரசியல் கட்சிகளை வளர்ப்பதற்காகவும் தமிழர்கள் இன உணர்வுடன் ஒற்றுமைப்படுவதையும், ஒருமைப்பாடு பெறுவதையும் எதிர்ப்பவர்களாக, வெறுப்பவர்களாக, மறுப்பவர்களாக, பகைத்துச் சிதைத்துச் சீரழிப்பவர்களாக இருக்கிறார்கள். அதாவது, தமிழர்களிலே பெரும்பாலான அரசியல் வாதிகள் தமிழர்களுக்கு இன உணர்வோ, மொழி உணர்வோ, சமய உணர்வோ, பண்பாட்டு உணர்வோ, ஏற்பட்டுத் தனித்த ஒற்றுமையும், ஒருமைப்பாடும் உருவாகிவிடக் கூடாது என்ற அக்கறை உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

இதற்காகவே, சாதி வெறிகள், மதவெறிகள்,வட்டார வெறிகள், தொழிலாளர் போராட்டங்கள், ஊர்ச் சண்டைகள், கட்சிச் சண்டைகள்......முதலிய பலவகையான கலவரங்களையும், குழப்பங்களையும், மோதுதல்களையும் தீனி போட்டு வளர்க்கிறார்கள் அதாவது, தமிழ்நாட்டில் அமைதியோ, நிம்மதியோ நிறைவோ, ஒற்றுமையோ, ஒருமைப்பாடோ உருவாகாமல் தடுத்துக் கெடுப்பதிலேயே பெரும்பாலான அரசியல் வாதிகள் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள், இதை விளக்கமாகச் 'சொல்ல வேண்டுமென்றால்; குட்டையைக் குழப்பித்தான் மீன் பிடிக்க வேண்டும் என்ற சித்தாந்தத்தின் அடிப்படையில்தான் தமிழக அரசியல்வாதிகளில் பெரும்பாலானவர்-கள் தமிழ்ச் சமுதாயத்தில் எல்லாவிதமான கலக்கங்களையும், குழப்பங்களையும்,

**அரசியல் மோசடிகளை வெல்லக் கூடிய தத்துவத்தலைமை தேவை**

போட்டிபொருமைகளையும், போராட்டங்களையும்,சண்டை சச்சரவுகளையும் வளர்த்துத் தமிழர்கள் தனித்தனியாகவும் சிறிய சிறிய கும்பல்களாகவும், பெரிய பெரிய கூட்டங் களாகவும், பல சமய சமுதாய அரசியல் கட்சிகளாகவும், பிரிந்தே கிடக்கும்படிசெய்துவிடுகிருர்கள். இந்தமாபெரும் சூழ்ச்சிமிகு வீழ்ச்சிநிலைகளை யாரால் புரிந்தும், புரியவைக்கப்பட்டும், தமிழின நல்வாழ்வுப் பணி துவக்கப்படுகிறதோ; அவரால் தான், உண்மையிலேயே என்ருவது ஒரு நாள் தமிழினத்திற்கு நல்வாழ்வு கிடைக்கும்! கிடைக்கும்!! கிடைக்கும்!!! அப்படியல்லாமல், பதவி ஆசை, பண ஆசை, புகழ் ஆசை முதலியவைகளால் ஆட்டி அலைக்கழிக்கப்படும் அரசியல்வாதிகள் அல்லது சமுதாயவாதிகளின் 'வாழ்க!' 'ஒழிக!' 'ஒன்றுபடுக', 'ஒற்றுமைப்பட்டிடுக', 'மொழியுரிமை காப்போம்' 'இன விடுதலை வளர்ப்போம்', 'பண்பாட்டுப் பெருமையைப் பாதுகாப்போம்!' 'இலக்கிய வளவளர்ச் சியை உருவாக்குவோம்!', 'ஏற்றத் தாழ்வுகளை அகற்றுவோம்', 'வறுமையை ஒழிப் போம்', 'வேலையில்லாத் திண்டாட்டத்தை முறியடிப்போம்',......... என்பனபோன்ற முழக்கங்களால் எள் முனையளவு கூடப் பயன் விளையாது! பயன் விளையாது! பயன் விளையாது! பயன் விளையவே விளையாது!''-என்றும் இவரே தமிழில் எழுதியுள்ளார்.

தமிழினம் தனது உயர்ச்சி நிலைகளிலிருந்து எப்பொழுது? எவரெவரால்? எப்படி யெப்படிப் படிப்படியாக வீழ்ச்சியுற்றது?; என்ற வினுவிற்கு விளக்கமான, விரிவான, தெளிவான, முறையான, நேரடியான விடைகளைத் தொடர்ந்து பல துறைகளில் பல கண்ணேட்டங்களில் தயாரித்திடல் வேண்டும். அப்பொழுதுதான், தமிழினத்தை வீழ்ச்சி நிலைகளிலிருந்தும், ஆழ்ச்சி நிலைகளிலிருந்தும், தாழ்ச்சி நிலைகளிலிருந்தும், விடுவிக்க முடியும். அதுவரைத் தமிழினத்தின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையில்தான் இருக்கும். இதனைப் புரிந்தும், புரியவைத்தும் செயல்படக்கூடிய வல்லமை உடையவர் கள் சமுதாய வாதிகளிலிருந்து தோன்றுவார்களா? அல்லது அரசியல்வாதிகளிலிருந்து தோன்றுவார்களா? என்ற வினுவிற்கு விடை தேவை. இந்த விடையை வழங்கும் வண்ணம்தான் இதுகாறும் தமிழகத்துச் சமுதாயவாதிகளைப் பற்றியும், அரசியல் வாதிகளைப் பற்றியும் ஒரு மின்னல் வேகக் கண்ணேட்டமும், கருத்தோட்டமும் வழங் கப்பட்டது. அதாவது, தமிழினத்தைத் தாழ்ச்சி நிலைகளிலிருந்து மீட்கும் பணியில் ஈடுபட்டிட்ட சமுதாயவாதிகளும் அரசியல்வாதிகளும் என்னவானுர்கள்?; அவர்களின் செயல்கள் என்னவாயின? என்ற விளக்கம்; இதுகாறும் எழுதியவற்ருல் இக் கட்டுரையை வாசிப்பவர்களுக்குத் தெளிவாக விளங்கிடும்.

இந்தக்கட்டுரையில் சமுதாயவாதிகளையும் அரசியல்வாதிகளையும், குறைகூறிக் குற்றம் சாட்டியிருக்கிருேம் என்று யாரும் கருதிவிடக் கூடாது. ஏனெனில், எமது முயற்சியெல்லாம் உண்மையில் தமிழகத்தில் சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் வெற்றி பெற்ருர்களா? அல்லது தோல்வி பெற்ருர்களா? என்பதை விளக்குவதுதான், எமது நோக்கம். மேலும், தமிழர்களுக்கிடையில் 'சமுதாய உணர்ச்சி' என்பதும், 'அரசியல் உணர்ச்சி என்பதும், எந்த அளவு விழிப்படைந்திருக்கின்றன? மலர்ச்சிய டைந்திருக்கின்றன? வளர்ச்சியடைந்திருக்கின்றன? வலிமைச் செழிச்சியடைந்திருக் -கின்றன? என்பதையெல்லாம் பகுத்தறிவுப் பூர்வமாகவும், விஞ்ஞானப் பூர்வமாகவும் ஆராய்ந்து விளக்கியுரைக்க வேண்டும் என்பதுதான் எமது நோக்கம். இந்த நோக்கம் ஊசி முனையளவாவது இந்தக்கட்டுரையில் நிறைவேறியிருக்குமேயானுல்; அதுவே எமக்குப்போதும். ஏனெனில், இன்றைய, பொதுமேடைகளையும், கலைத்துறைமேடை

-களையும், பத்திரிக்கை உலகையும் பெரும்பாலான சமய, சமுதாய, தனிமனித விழாக்களையும், இந்த நாட்டில் சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளுமே முழுக்க முழுக்கக் கைப்பற்றிக் கொண்டிருக்கிருர்கள்! அதாவது, நமது தாய்நாட்டில் அல்லது தமிழகத்தில் ஏறத்தாழ எந்த நிகழ்ச்சிகள் நடந்தாலும் அதில் தலைவர்களாகவும், பேச்சாளர்களாகவும் சிறப்பு அழைப்பாளர்களாகவும், விளங்குபவர்கள் சமுதாயவாதிகளாகவும், அரசியல் வாதிகளாகவுமே இருக்கிருர்கள். அத்தாவது, ''சமய வாதிகள், ஞானிகள், மகான்கள், தவசிகள், வேள்வியாளர் கள், சாத்திர விற்பன்னர்கள், தத்துவப் பேரறிஞர்கள், சமய இலக்கியக் கலைஞர்கள், அருளாளர்கள்......முதலிய -வர்களில் யாருமே தமிழகத்தின் பெரும்பாலான பொது நிகழ்ச்சிகளிலும், விழாக் -களிலும் இடம் பெறுவதே இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! என்ற நிலை வலிமையாக இருக்கின்றது. இது சரிதானு? அல்லது முறைதானு? பயனுடையது தானு? நாட்டுக்கு நன்மை பயப்பது தானு? என்றெல்லாம் ஆராய வேண்டும் என் பதற்காகத்தான்; முதலில் சமுதாய வாதிகளையும், அரசியல் வாதிகளையும் பற்றிய ஆய்வுக் கண்ணேட்ட கருத்துக்கள் வழங்கப்பட்டன. இனிமேல், மிகத் தெளிவாகவும், நேரிடையாகவும் 'தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பதற்குரிய காரணம் 'சமயவாதிகள் புறக்கணிக்கப்பட்டும், மறுக்கப்பட்டும், வெறுக்கப்பட்டும் இழிவு படுத்தப்படுவதுதான்', என்ற கண்ணேட்டத்தில் ஒரு சில ஆய்வுக் கருத்துக் -களை வழங்க முற்படுகிருேம் யாம். இதில் தமிழர்களின் மெய்யான சமயம், போலி யான சமய வாதிகள், உண்மையான சமயவாதிகள், சமயம் சார்ந்த கலைகள், அறிவியல்கள், சமயக்கலைஞர்கள், சமய உணர்ச்சியின் வளர்ச்சி, ஆட்சி மீட்சி...... முதலியவைகள் பற்றிய நேரடி விளக்கங்களும், புதிய செயல்திட்டங்களும், புரட்சிக் கண்ணேட்டங்களும் வழங்க முற்படுகிருேம். இவற்றைப் பொறுப்பாகவும், பொறுமை யாகவும் படித்துச் சிந்திப்பவர்களின் எண்ணிக்கை அதிகமாகுவதைப் பொறுத்துத் தான் தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பதை மாற்றும் பணி அமையும்.

**தமிழினத் தாழ்ச்சியைப் போக்கக் கூடியது சமுதாய உணர்ச்சியா? அரசியல் உணர்ச்சியா?**

'சமய உணர்ச்சி' என்பது தான்; சமுதாய உணர்ச்சிக்கும் அரசியல் உணர்ச்சிக்கும் தாய் போன்றது, உயிர் போன்றது. அதாவது, சமயத்தின் மூலம் தான் சமுதாயம் என்ற கட்டமைப்பு உருவாகியது. அரசாங்கம் என்ற செயல்திட்டம் வளர்ச்சி பெற்றது. இதனைப் புரியாதவர்கள் தான்; சமுதாய உணர்ச்சியின் வளர்ச்சி நிலைகளும், ஆட்சி நிலைகளும் அரசியல் உணர்ச்சியின் வளர்ச்சி நிலைகளும், ஆட்சி நிலைகளும், தமிழினத்தில் செழிச்சி மிகு எழிச்சி பெறுததற்குக் காரணம் சமய உணர்ச்சியே என்ற தவருன கருத்து பிறந்து விட்டது. இது தொடர்ந்து வாழுமேயானல் சமய மறுமலர்ச்சிக்கும், சமய ஆட்சி மீட்சிக்கும் வழியே இல்லாமல் போய்விடும். எனவேதான், சமயவாதிகளாக வாழு கின்ற பொதுமக்களும்; சமயத் தலைவர்களான மடாதிபதிகள், பீடாதிபதிகள், பண்டார சன்னதிகள், தம்பிரான்கள், சித்துவிளையாடல்காரர்கள், சமய இலக்கியக் கலைஞர்கள் .......முதலியவர்களும் ஒருங்கிணைந்து சமய வரலாறு, சமய இலக்கியம், சமயத் தத்துவம், சமயக்கலைகள், சமய அறிவியல்கள்,.........முதலியனவற்றை இன்றைய விஞ்ஞான வளர்ச்சிப் பின்னணியில், பகுத்தறிவுப் போக்கில் ஆராய்ச்சிக் கண்ணேட்டத் -துடன் விளக்கியுரைக்க முற்பட வேண்டும். அப்பொழுதுதான், சமயத்துறைக்கு

வருங்காலம் உண்டு. சமயம் புதிதாக கிளைவிட்டுச் செழித்து வளர முடியும். மேலும், தமிழர்களின் மெய்யான சமயம், சமயத் தூய்மை, சமய வாய்மை, சமயத் தத்துவம், சமயச் சித்தாந்தம், சமய வரலாறு, சமய இலக்கியம், சமயக்கலை, சமய அறிவியல்.....முதலியவைகளைக் காலக்கணக்கீட்டு அடிப்படையில் நன்கு தெளிவாக வகுத்தும், பகுத்தும், தொகுத்தும் விளக்கியுரைத்தல் வேண்டும்; விளக்கமான நூல்கள் எழுதுதல் வேண்டும். அப்பொழுதுதான், தமிழினத்தின் சமய உணர்ச்சி நேர்மையானதாக, தேவையானதாக, பயனுடையதாக, சமுதாயவாதிகளாலும், அரசியல் வாதிகளாலும், ஒப்புக் கொள்ளப்படும். அப்படித் தமிழினத்தின் சமுதாய வாதிகளும், அரசியல் வாதிகளும் தமிழரின் சமயத்திற்கு ஒப்புதல் வழங்கினால்தான் தமிழினச் சமயத்திற்கு வருங்காலம் உண்டு [If only the Politicians and the soical thinkers recognise the religion; their can be a fertile future for the religion ......... taken from the writings of his Holiness Siddhar Kakkapusunder Mr M Palanisamy Pillai] எனவே தான் எவ்விதமான சார்புப் போக்கும் இல்லாமல் நடுநிலையிலிருந்து தமிழனச் சமய உணர்ச்சி, சமய வளர்ச்சி, சமய ஆட்சி மீட்சி ... என்பவை பற்றிய கண்ணோட்டத்தையும், கருத்தோட்டத்தையும் வழங்குகிறோம் யாம். எனவே இக்கட்டுரை பற்றி எல்லாத் துறையினரும் தங்களுடைய கருத்தை நேரடியாகவும், தெளிவாகவும் வழங்கவேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துக் கொள்கிறோம்.

**சமயத்துக்கென இலக்கிய வளம் புதுப்பிக்கப்படல் வேண்டும்.**

'கடந்த இரண்டாயிரம் [2000] ஆண்டுகளாகத் தமிழர்கள் தங்களுடைய சமயம், வட ஆரியர்களின் வேத மதத்திலிருந்துதான் பிறந்தது' என்று நம்புகிறார்கள். இதன் அடிப்படையிலேயே தமிழர்கள் தங்களுக்கு முற்றிலும் அன்னியமான வட ஆரியர்களையும், அவர்களின் சமசுக்கிருத மொழியையும் தங்களுடைய சமய வாழ்வின் வழி காட்டிகளாகவும், வழியாகவும் ஏற்றுள்ளார்கள். அதாவது தமிழர்கள் தமிழரல்லாத வட ஆரியர்களைத் தங்களது ஆச்சாரியார்களாகவும், மடாதிபதிகளாகவும், பீடாதிபதிகளாகவும், சாத்திரிகளாகவும், பூசாரிகளாகவும், குருக்கள்களாகவும் ஏற்றுக் கொண்டிட்டார்கள் என்கின்ற காரணத்தினால் தான்; கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக தமிழர் சமயத் துறையில் கணக்கற்ற அருளாளர்கள் தோன்றியும் மலர்ச்சியில்லை, வளர்ச்சியில்லை, ஆட்சி மீட்சியில்லை. இப் பேருண்மையினை நடுநிலையிலிருந்து வரலாற்றுப் போக்கில் ஆராய்ந்து செயல்படக் கூடிய சமுதாய வாதிகளோ, அரசியல் வாதிகளோ, சமயவாதிகளோ ஏறத்தாழ தமிழ் இனத்தில் தோன்றவில்லை, தோன்றவில்லை! தோன்றவில்லை! தோன்றவேயில்லை! எனவேதான் மேம்போக்காக சமயத்தைப் பற்றி யார், எப்படி விமர்சனம் செய்த போதிலும்; அதற்குரிய பதிலோ, பயனோ கிடைப்பதேயில்லை அதாவது தமிழினச் சமயத்துறை ஏக்க நிலையையும், தேக்க நிலையையும், முடக்க நிலையையும், அடக்க ஒடுக்க நிலையையும், அடிமை நிலையையும், அறியாமை நிலையையுமே கடந்த இரண்டாயிரமாண்டுகளாகப் பெற்றிருக்கிறது. இத்தகைய காரிருளைச் சமயத்துறையிலிருந்து அகற்றக் கூடிய கதிரவன் உதிக்காவலேயே போய்விட்டது தான் எல்லையற்ற கவலையைத் தருகின்றது.

தமிழர்களிலே கண்மூடித்தனமாக, வட ஆரியர்களே உண்மையான சமய வாதிகள் என்றும்; அவர்களுக்கே ஆன்மீக உலகுக்குரிய அறிவும் ஆற்றலும் அதிகமிருக்கின்றது என்றும்; அவர்களுக்கே பூசா விதிகள், பூசையின் இரகசியங்கள்,

பூசையின் பயன்கள் நன்கு தெரியும் என்று; அவர்களுடைய தாய் மொழி -யான சமசுக்கிருதமே வேதமொழி, அருளுலக மொழி, பூசைக்குரிய மொழி, அனைத்து வகையான அருட்பயன்களையும் தரக் கூடிய மொழி, என்றும்...... நம்புகிறவர்கள் அதிகமாகிவிட்டார்கள். அதனுல் தமிழர்களில் பெரும்பாலானவர் -களுக்கு மெய்யான சமய அறிவும், ஆற்றலும், பயனும் கிடைக்காமல் போய்விட்டன இவை பற்றி எண்ணிப் பார்க்கத் தெரியாத அப்பாவி -களாகிவிட்டார்கள் பெரும்பாலான தமிழர்கள். எனவே தான் தமிழர்களிலே, மெய்யான சமய உணர்வு உள்ள -வர்கள் என்பவர்களெல்லாம்; வடஆரியர்களின் அடிமை -களாகவும், சமசுக்கிருத மொழியின் பத்தர்களாகவும், வட ஆரிய வேதமதத்தின் எடுபிடிகளாகவும் கங்காணிகளாகவும் ஆகிவிட்டார்கள்.

**மத இருளே தமிழின அடிமை நிலைக்குக் காரணம்**

இதனுல் தமிழினத்தில் தோன்றிய பத்தியாளர்களும், சத்தியாளர்களும், சித்தியாளர் -களும், முத்தியாளர்களும் பல்வேறு வகைப்பட்ட சித்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும், அருட்சித்து விளையாடல்காரர்களும், அருளர்ளிகளும், அருளாடு நாயகங்களும், மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடுநாயகங்களும் எவ்வளவோ முயன்றும் கூட தமிழர்களை வட ஆரிய மாயைகளிலிருந்தும், வட ஆரிய அடிமை நிலைகளிடமிருந்தும் மீட்கமுடியவில்லை! மீட்கமுடியவில்லை! மீட்கமுடியவில்லை! மீட்க -வேமுடியவில்லை! இது பற்றி அக்கறைகாட்டுவார் இல்லை, ஆர்வம் கொள்வார் இல்லை என்ற நிலை கடந்த இரண்டாயிரம் ஆண்டுகளாக நீடித்து வருகிறது. இந்த நிலை இனியும் நீடிக்க வேண்டுமா? வேண்டாமா? என்ற வினுவிற்கு விடையாகத்தான்; இந்து மறுமலர்ச்சி இயக்கமும், அதன் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட அமைப்புக் -களும் செயலாற்றுகின்றன.

நமக்கு, யார் மீதும் மறுப்போ, வெறுப்போ, எதிர்ப்போ, பகையோ இல்லை! இல்லை!! இல்லை!!! இல்லவேயில்லை! நாம், கூற முற்படுவதெல்லாம், இம்மண்ணுலகின் மூலமதமும் முதல்மதமுமான இந்து மதத்தின் வரலாறும், தத்துவமும், சித்தாந்தமும் சாத்திறத் தோத்திறங்களும், அருட்கலைகளும் அருளுலக அறிவியல்களும்; அருளுலகச் சான்றோர்களும் ஆன்றோர்களு ...... பற்றிய முழுமையான செய்திகளும் முறையாகக் காலக் கணக்கீட்டு அடிப்படையில் வெளியிடப்பட்டேயாக வேண்டும் என்பது தான். ஏனென்றல் அதன் அடிப்படையில் தான், ‘தமிழர்களுக்குத் தங்களின் முன்னேர் களெல்லாம் முட்டாள்களல்ல’, என்ற பேருண்மை விளங்கிடும், மேலும், ‘தங்களு -டைய தாய்மொழியான தமிழ்மொழி தான் அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் சித்தர்நெறியெனும் இந்துமதத்தின் மெய்யான ஆட்சி மொழி; என்ற பேருண்மையும் விளங்கிடும். இப்படித் தமிழர்களுக்குத் தங்களின் மதமான இந்து மதம்தான் இம்மண்ணுலகின் முதல் மதம், மூலமதம் என்ற பேருண்மையும், தங்களுடைய தாய் மொழியான தமிழ் மொழி தான் இம்மண்ணுலகின் முதல்மொழி, மூலமொழி, அருள்மொழி, அண்டபேரண்ட அருளுலக ஆட்சி மொழி, என்ற பேருண் -மையும் தெளிவாக விளங்கினுல் தாள; தன்னம்பிக்கையும், தன்மானப் பிடிப்பும், இன உணர்வும், இன பற்றும், இன ஒற்றுமையும். மொழிப்பற்றும, மொழி உணர்வும், மொழி உரிமை உணர்வும், மொழி விடுதலை உணர்வும், இன விடுதலை உணர்வும்... முளைத்துக் கிளைத்துச்செழித்து வளர்ந்திடும். அப்பொழுதுதான், அவர்கள்எந்த அன்னி -யரையும், அன்னிய மொழியையும், உயர்ந்ததாகவோ, சிறந்ததாகவோ பயன்மிக்கதாகவோ, அரியதாகவோ, பெரியதாகவோ நினைக்கமாட்டார்கள்!

நினைக்கமாட்டார்கள்! நினைக்கவேமாட்டார்கள்! இப்படிப்பட்ட நினைப்பைத் தமிழர்-களுக்கு உருவாக்குவதன் மூலம் தான், அவர்களின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சி நிலையாக இருந்துவருவதை மாற்றமுடியும்! மாற்றமுடியும்! மாற்றமுடியும்! தமிழர்கள். தங்களுடைய சமயம்தான் இந்துமதம் என்பதை மறந்தும், துறந்துமே செயல்படுகிறார்கள். அவர்கள், வட ஆரியர்களின் தோற்றத்தையும், பூசை-முறைகளையும், சமசுக்கிருதப் பூசாமொழிகளையும் சாத்திறச்சம்பிறதாயச் சடங்குகளையுமே மெய்யான இந்து மதத்திற்குரியன என்று தவறாக எண்ணி மயங்கு-கிறார்கள். இந்த மயக்கத்தால் தான், வடஆரியச் சூழ்ச்சிகளுக்கு இரையாகித் தாழ்ச்சியுற்றே கிடந்து வருகிறார்கள். இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. கி. பி. 785 க்குப் பிறகு தோன்றிய கருணீக்கச் சைவ வேளாள குலத்தில் தோன்றிய, காலடி ஆதிசங்கராச்சாரியார் தமிழராகப் பிறந்திருந்தும், ஒரு வடஆரியராக விளம்பரப் படுத்தப்பட்டார். அவர், சித்தர் நெறிப்படி வெள்ளாடை மேனியராகவும், உச்சிக் குடுமியாராகவும் வாழ்ந்திட்ட போதும் அவரை வட ஆரிய நெறிக்குட்பட்ட காவி உடைமேனியராகவும் மொட்-டைத் தலையராகவும் சித்தரித்து விட்டார்கள். இதனால் தமிழினத்தில் தோன்றிய மாபெரும் ஆச்சாரியார்களில்ஒருவர்வடஆரியரால்தங்களுக்குரியவராகத் தத்தெடுக்கப் பட்டுவிட்டார். இதனால் தமிழினத்திற்கும், மதத்திற்கும், மொழிக்கும் பண்பாட்டிற்-கும்.........மிகப் பெரிய நலிவையும். மெலிவையும், நோய் நிலையையும், தேய் நிலையையுமே விளைவித்துக் கொடுத்திட்டார்கள், வட ஆரியர்கள். ஏனெனில் கருவூர்த் தேவர் தமது குருபாரம்பரிய வாசகத்தில் மிகத் தெளிவாக‘‘......முப்பத்திரண்டாவது பீடமாகத் தோன்றிய காலடி ஆதிசங்கராச்சாரியாரோடு கலியுகத்திற்கு ஐந்துசமயாச்சாரியார்கள் கிடைத்திட்டார்கள். இதில் மாணிக்க வாசகர், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தரர் எனும் நால்வரும் இந்து மதத்தின் மூலமொழியான தமிழ் மொழியிலேயே அனைத்து வகையான தத்துவ, தத்துவாந்த, சித்த, சித்தாந்த, நாத, நாதாந்த, போத, போதாந்த, ஓத, ஓதாந்த, மறை, மறையாந்த முறை, முறையாந்த, நெறி, நெறியாந்தக் கருத்துக்களையெல்லாம் அருளுலக அனுபவங்களோடு விளக்கினார்கள். இந்த நான்கு சமயாச்சாரியார்களின் கருத்துக்களின் சாரத்தை, சாத்திறத் தோத்திறங்களாக, இம் மண்ணின் அன்னியர்களான வட ஆரியர்களுக்கு விளக்கியுரைத்தவரே, காலடி ஆதிசங்கராச்சாரியார். ஏனெனில் பிற மண்ணினரான பிரமணர் எனும் வட ஆரியர்கள் இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் பெரியபெரிய நகரம் முதல் குக்கிராமம் வரை பரவியிருந்த பிரமணர் மூலம் தான் எளிதாக இந்துமதக் கருத்துக்களைப் பரப்பி இந்து மத மறுமலர்ச்சிப் பணிகளை நிறைவேற்ற முடியும் என்று காலடி ஆதிசங்கராச்சாரியாரை சமசுக்கிருத மொழி வழியாகச் செயல்படச் செய்தார் பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.

**மதம், மொழி இரண்டு பற்றிய மெய்யான செய்திகள் தான் தமிழரின் தாழ்ச்சி, வீழ்ச்சி, அகற்றும்**

இவர் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தேவகுமாரனைத் தோன்றிய, இசுர வேல் நாட்டில் தோன்றிய, ஈசாவை [ஈசுவரனை—> ஈசாவை] ப் பதினெட்டாண்டுகள் அருளுலகப் பயிற்சிகளிலும் முயற்சிகளிலும் தயாரித்தது போல்; தம் காலத்தில்

தோன்றிய முப்பத்திரெண்டாவது பீடமான ஆதிசங்கராச்சாரியாரை அருளுலக மறுமலர்ச்சிக்காகத் தயாரித்தார். இந்த இருவருமே [ஈசாவும், ஆதிசங்கராச்சாரியாரும்] முப்பத்துமூன்று ஆண்டுகளே வாழ்ந்தபோதிலும் அருளுலகில் நிலையான பெருஞ்சுடர்களாக விளங்கிவருகிறார்கள். இருந்த போதிலும் இந்த இரண்டு பேர்களுமே பதினெண்சித்தர் பீடாதிபதிகளால் உருவாக்கப்பட்டவர்கள் என்ற மாபெரும் உண்மை மறைக்கப்பட்டும், மறக்கப்பட்டும் விட்டதால் சித்தர் நெறியெனும் இந்து மதம் தமிழர்களுக்கு விருந்தாகவோ அல்லது மருந்தாகவோ பயன்பட முடியாத இரண்டும் கெட்டான் நிலை உருவாகிவிட்டது, உருவாகிவிட்டது, உருவாகி விட்டது, இதுவே தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாவதற்குக் கருவாகவும் அமைந்துவிட்டது.

ஈசாவின் வாசகங்களிலும், காலடி ஆதிசங்கராச்சாரியாரின் வாசகங்களிலும் பதினெண்சித்தர்களின் தெய்வத் தீந்தமிழ்ச் சொற்களும், எழுத்தொலிகளும் கருத்தின் பிரதிபலிப்புக்களும், செயல் திட்டங்களின் எதிரொலிகளும்...மிகுதியாக இருப்பதை என்றைக்குத் தமிழர்கள் கண்டுபிடிக்கின்றார்களோ அன்றைக்குத் தான் தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பது தடுக்கப்பட்டிடும்; அகற்றப்பட்டிடும்'' என்று குறிக்கிறார். இப்படிக் கருவூர்த்தேவர் தனது குருபாரம்பரிய வாசகங்கள் மூலம் தனது தந்தையான தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரரின் கனவுகளை நனவாக்குகிறார்.

‘‘......**தமிழர்கள் தங்களுடையமதம்சமசுக்கிருத மொழியில்தான் இருக்கிறது என்று என்றைக்கு நம்ப ஆரம்பித்தார்களோ அன்றைக்கே அவர்களுக்கு வீழ்ச்சி ஆரம்பித்துவிட்டது.** அடுத்துத் தமிழர்களே சமசுக்கிருத வாசகங்களையும் சொற்களையும் பயன்படுத்தித் தங்களுடைய மத வாழ்வை நிகழ்த்த ஆரம்பித்த நாளிலிருந்து அவர்களுக்கு ஏற்பட்ட தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாகிவிட்டது.

**தமிழர்கள், பிருமணர்களை ஏற்று ஏமாளிகளான நிலை**

இவற்றிற்கும் மேலாக, அவர்கள் பிறமண்ணினரான பிருமணர்களைத் தங்களது மதகுருமார்களாகவும், ஆச்சாரியார்களாகவும், பூசாறிகளாகவும், சாத்திரிகளாகவும், மத இலக்கிய விரிவுரையாளர்களாகவும்.........ஏற்றுப் போற்றிப் பணிந்து செயல்பட்டு வருவதால்தான் என்றே ஏற்பட்ட வீழ்ச்சி நிலையும், ஆழ்ச்சி நிலையும், இகழ்ச்சி நிலையும் தாழ்ச்சி நிலைக்கு அடிப்படையாக அமைந்துவிட்டன

பிறமண்ணினரான பிருமணர்களை ‘பூதேவர்,’ [பூலோக தேவர்கள்—> பூமியின் தேவர்கள்], ‘சாமி’, ‘ஐயர்’,.... என்று அளவுக்கதிகமாக மதித்து மரியாதை கொடுத்துப் போற்றிப் பணிந்து வாழவாரம்பித்ததால்தான்; தமிழர்கள் சூத்திரர், பஞ்சமர், இழிகுலத்தவர், தாழ்ந்த சாதியர், தீண்டத்தகாதவர்,...என்ற பழிநிலைகளை, இழிநிலைகளை அடைந்தனர். அது மட்டுமல்ல பிருமணர்கள் மற்ற இனத்தவர்கள் அனைவரையுமே ஏழையென்றே, பணக்காரரென்றே, சிறியவர் பெரியவர் என்றே, படித்தவர் படிக்காதவர் என்றே......எந்தவிதவேறுபாடும் பார்க்காமல் அனைவரையும் ‘வாடா, போடா,’ என்று ஏகவசனத்தில் அழைக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொண்டு விட்டார்கள். இதனால் அவர்கள் தாங்கள் தான் மற்றவர்களைவிட உயர்ந்தவர்கள். பெரியவர்கள், அறிவாளிகள், ஆன்மீக வாதிகள், அருளாளர்கள், தெய்வ

சத்தியுடையவர்கள், மேட்டுக் குடியினர்... என்ற கருத்தோட்டத்தை அனைவரின் உணர்விலும் ஆழமாக பதித்திட்டார்கள். அதாவது, பிருமணர்கள் தமிழர்களுடைய மதமான இந்துமதத்தை சிதைத்துச் சீரழித்துத் தங்களுக்கெனத் தங்களுடைய வேத மதத்தின் அடிப்படையில்; ஒரு கலப்படமான, மாயாவாத சுரண்டல் போக்குடைய முதலாளித்துவப் போக்குடைய, சர்வதிகாரப் போக்குடைய. '**பொய்யான ஹிந்து மதம்**' என்றவொன்றை உருவாக்கிக் கொண்டிட்ட காரணத்தினால் வெற்றிகளைப் பெற்றுவிட்டார்கள்.

இந்த வெற்றியைத் தொடர்ந்து காப்பாற்றிக் கொள்வதற்காக மத இலக்கி-யங்கள் அனைத்தும் சமசுக்கிருத மொழியில் தான் இருக்கின்றன என்ற மாபெரும் பொய்யை மெய்யாக்கினார்கள். மேலும் பிருமணரல்லாதார் சமசுக்கிருத மொழியைக் கற்றுக் கொள்ளக்கூடாது என்றும்;சமசுக்கிருதத்திலுள்ளஎந்தஇலக்கியத்தையும் தெரிந்து கொள்ளவோ, ஆராய்ச்சிசெய்யவோ அல்லது பிறர் சமசுக்கிருதஇலக்கியங்களைப் பற்றிப்பேசும் போது கேட்கவோ கூடாது! கூடாது! கூடாது! கூடவே கூடாது! என்றும் தடைவிதித்தார்கள். இந்த தடையுத்தரவை, தமிழகத்து வேளிர்கள், அரசர்கள், வேந்தர்கள், முதலியவர்களின் மூலம் அமுலாக்கும் படிச் செய்தார்கள்

தமிழகத்தின் சமய, சமுதாய, அரசியல் தலைவர்கள் அனைவருமே கண்மூடித் தனமாக பிறமண்ணினரான பிருமணர்களுக்கும், அவர்களுடைய வேதமதத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்துமதத்துக்கும். அதனுடையஆட்சி மொழியான சமசுக்கிருத மொழிக்கும் வெறிபிடித்த அடிமைகளானார்கள். அதாவது, படிப்படியாகப் பிருமணர்கள் இயற்கையாகத் தங்களுக்குக் கிடைத்திருந்த எல்லாவிதமான அழகுகளையும், நளினங்களையும், இனிமைகளையும். திறமைகளையும், முழுமையாகப் பயன்படுத்தி இமயம் முதல் குமரி வரையிருந்த சமய, சமுதாய, அரசியல் தலைவர்கள் அனைவரையும் தங்களுடைய மதத்தையும், மத இலக்கியங்களையும், சமசுக்கிருத மொழியையும் உண்மையானவைகளாக, உயர்ந்த-வைகளாக, சிறந்தவைகளாக, அரிய பயன் நல்கக் கூடியவைகளாக, மெய்யான தெய்வீகத்தன்மையுடையவைகளாக நம்பி ஏற்றுக் கொள்ளும்படிச் செய்தார்கள். இதன் விளைவாக பிருமணர்களுக்கு எதிராகவோ, மறுப்பாகவோ, தீங்காகவோ பேசுபவர்களும், செயல் படுகிறவர்களும் கடுமையான தண்டனைகளைப் பெறநேரிடும் என்ற அச்சமான சர்வாதிகாரச் சூழ்நிலையை உண்டாக்கினார்கள்.

குறிப்பாக பிருமணர்களைத் திட்டுபவர்களின் நாக்கு அறுக்கப்படவும், பிரு-மணர்களுக்குத் தீங்குசெய்பவர்களின் கைகால்கள் வெட்டப்படவும், பிருமணர்கள் ஓதும் சமசுக் கிருத இலக்கியங்களைக் கேட்பவர்களின் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவும், சமசுகிருத மொழியைத் திருட்டுத்தனமாக கற்றுக் கொள்ள முற்படுபவர்-களின் கண்கள் பழுக்கக் காய்ச்சிய இரும்புக்கம்பிகளால் குத்தப்படவும், பிருமணர்-களின் உடைமைகளைத் தவறாகப் பயன்படுத்துபவர்களுக்குக் கொலைத் தண்டனை வழங்கப்படும் எனவும், அரசியல் சட்டமே உருவாகுமாறு செய்திட்டார்கள். இதனால் அவர்கள், பொதுமக்கள் கண்டு அஞ்சி நடுநடுங்கிப் பணிந்து வணங்கும் மிகப் பெரிய தெய்வீக நிலையைப்பெற்றிட்டார்கள்.

இன்னும் சொல்லப்போனால் செல்வர்களும், பெருநிலக்கிழார்களும், வணிகர்களும், பெரிய தளபதிகளும், சிற்றரசர்களும், பிருமணர்களுக்கு அடிமைகளாகவும்,

அச்சமும் பணிவுமுள்ள பணியாட்களாகவும் மாறினார்கள். இவற்றால், வீழ்ச்சியுற்ற தமிழர்கள் தங்களுடைய தாழ்ச்சி பற்றி எண்ணிப்பார்க்க முடியாமல் அஞ்சி நடு நடுங்கி ஒடுங்கிக் கிடக்கவாரம்பித்தனர். எனவே தான், தமிழர்களின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருக்கிறது''......என்று கண்டப்பக்கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியார் அவர்கள் தமது **''இந்து மறுமலர்ச்சி இயக்க வளர்ச்சி விழாக் கட்டுரைகள்''** என்ற தொகுப்பில் **''பிறமண்ணினரான பிருமணரால் தான் தமிழர்களின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருக்கிறது''** என்று குறிக்கிறார். இந்தக் கருத்துக்களைத் தமிழகச் சுயமரியாதை இயக்கத் தலைவர் தந்தை பெரியார் அவர்கள் நீதிகட்சி இயங்கிய காலத்தில் பொதுமேடைகளில் படித்துக் காட்டியிருக்கிறார்; பலரையும் படித்துப் பார்க்கும்படி துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து வெளியிட்டிருக்கிறார். கரூர் பெரும்புலவர் மருதையாபிள்ளையவர்கள் இவை போன்ற பல வாசகங்களைத் தொகுத்து சிறுசிறு புத்தகங்களாகவும் அறிக்கைகளாகவும் அச்சிட்டு வெளியிட்டுருக்கிறார் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்பட்ட காலத்திலிருந்து இவை போன்ற வாசகங்கள் நிறைய அச்சிடப்பட்டு வழங்கப்பட்டிருக்கின்றன.

ஆனால் இந்துமறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது தலைவராகப் பொறுப்பேற்ற காக்கா வழியன், பண்ணையாடி, சித்தர் காகபுசுண்டர் எனப்படும் **காக்கையர்** ம. பழனிச்சாமிபிள்ளையவர்கள்; ''இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்பது பிருமண மறுப்பையோ, வெறுப்பையோ, எதிர்ப்பையோ கண்மூடித்தனமாக வளர்ப்பதாக, இருந்துவிடக் கூடாது. இன்றுள்ள பிருமணர்களில் எண்ணற்றோர் தங்களுடைய முன்னோர்களின் தவறுகளுக்காக வெட்கப்படுபவர்களாகவும் வருந்துபவர்களாகவும் கூட இருக்கிறார்கள். எனவே, இந்தத் திருத்தம் பெற்ற பிருமணர்களை முழுமனதோடு ஏற்று ஆதரித்துத் தம்மோடு இணைத்துக் கொள்ளுகின்ற ஒரு புதுமை இயக்கமாக, புரட்சி இயக்கமாகத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம இருக்க வேண்டும்'' என்ற கருத்தை வலியுறுத்திச் சித்தர் ஏளனம்பட்டியாரின் பிருமணக் கண்டிப்பு வாசகங்களை அச்சடிப்பதைக் குறைத்திட்டார். ஆனால், சித்தர் ஏளனம் பட்டியார் பிருமணர்களைப் பற்றிக் கூறிய வாசகங்களை ஆங்கிலக் கட்டுரைகளிலும் [டைப் அடிக்கப்பட்டவை, அச்சிடப்பட்டவை] தமது அஞ்சல் வடிவக் கட்டுரைகளிலும், செயல் விளக்கக் குறிப்புகளிலும். வாழ்க்கைக் குறிப்பேடுகளிலும், உரையாடல்களிலும், அப்படியே முழுக்க முழுக்க கையாண்டிட்டார். தமது கடைசி காலத்தில் இவரே தமது கைப்பட, **''கண்டப்பக் கோட்டைச் சித்தர் ஏளனம்பட்டியாரின் பிருமண வெறுப்புக் கருத்துக்கள்''** என்ற தலைப்பில் ஏழெட்டுத் தொகுதிகளைக் கையெழுத்துப் பிறதியாக எழுதிவைத்தார்.

**பிருமணர்களைத் திருத்துதலும் இயக்கத்தின் கடமையாகும்.**

இருந்த போதிலும் இவர் கடைசி வரை; ''பிருமணர்களை ஒதுக்கி விட்டோ அல்லது புறக்கணித்து விட்டோ இந்து மதத்தில் எந்தச் சீர்திருத்தம் செய்யப் பட்டாலும்; அது, காலப்போக்கில் மீண்டும் பிருமணர்களால் சிதைத்துச் சீரழிக்கப்பட்டுவிடும். எனவே பிருமணர்களையும் தமிழர்களோடு சேர்த்துத் தான் இந்து மதச்சீர்திருத்தத்தைப் புரிந்து விரும்பி ஏற்குமாறு, செய்யவேண்டும். அதாவது இன்றுள்ள பிருமணர்களே தங்களுடைய முன்னோர்கள் உண்டாக்கிய பொய்யான ஹிந்து மதத்தை எதிர்த்தும் மறுத்தும் விளக்கங்கள் வழங்குமாறு செய்ய வேண்டும்.

மேலும் இன்றுள்ள பிருமணர்களே சமசுகிருத மொழி தமிழ் மொழியிலிருந்து தான் உருவாக்கப்பட்டது என்ற பேருண்மையினையும், சமசுக்கிருதத்தில் உள்ள பெரும்பாலான கருத்துக்களும் இலக்சியங்களும் தமிழ் மொழியிலிருந்துதான் எடுக்கப்பட்டவை என்பதனையும், இன்றுள்ள ஹிந்துமதம் பதினெண் சித்தர்களின் மெய்யான இந்துமதத்திலிருந்து தான் உண்டாக்கப்பட்டது என்பதனையும், சமசுக் கிருத மொழிக்கென்று எந்த விதமான தனிப்பட்ட தெய்வீகத் தன்மை இல்லை -யென்பதையும், சித்தர்களுடைய அருளுலகக் கருத்துகளிலிருந்து பிறந்தது தான் இன்றுள்ள சமசுக்கிருத மொழியின் அருளுலகக் கருத்துக்கள் என்பதனையும், இனியும் தமிழர்கள் சாதிமத வெறிகளாலும், வேற்றுமைகளாலும் பிரிந்திருக்கத் தேவையில்லை என்பதையும், தமிழர்களே இம் மண்ணுலகத்தின் முதல் குடிகள் என்பதனையும், தமிழ் மொழியே இம் மண்ணுலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழி என்பதனையும்,...........விளக்கியுரைக்கச் செய்ய வேண்டும். செய்ய வேண்டும். செய்ய வேண்டும்

அப்பொழுது தான் இந்து மதத்திற்குரிய இந்தியத் துணைக்கண்டத்திற்குள்ளே -யாவது பதினெண் சித்தர்களின் மெய்யான இந்து மதம் மறுமலர்ச்சியடையும்! வளவளர்ச்சி பெற்றிடும்! ஆட்சி மீட்சியடைந்திடும் ''அதன் மூலமாவது இந்து மதத்தின் மூலவர்களாகவும், காவலர்களாகவும் இருக்கின்ற தமிழர்களின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருந்து வரும் அவலகேவலங்கள் அகற்றப்பட்டிடும், அல்லது அகன்றிடும் அதாவது இந்துமதம் என்ற சமய உணர்ச்சி தான் தமிழர் -களின் சமுதாய அளவிலும், அரசியல் அளவிலும் மறுமலர்ச்சியடைந்திட, வள வளர்ச்சியடைந்திட, ஆட்சி மீட்சியடைந்திட, வழிவகை செய்திடும் எனவே, தமிழர்களின் சமய உணர்ச்சியை இழித்தும், பழித்தும், பகைத்தும், நகைத்தும் மறுத்தும்; வெறுத்தும் செயல்படும் சமுதாயவாதிகளும், அரசியல்வாதிகளும் திருந்த வேண்டும், திருந்த வேண்டும், திருந்த வேண்டும். இவர்கள் திருந்தா விட்டால், வருங்காலத்தில் தமிழினத்தின் சமுதாயவாதிகளிலும், அரசியல்வாதிகளி -லும் பெரும்பாலானவர்கள் சுயநல வெறிபிடித்த தமிழின நல விரோதிகளாகவும், துரோகிகளாகவுமே செயல்பட்டிட்டார்கள் என்ற பழிச்சொல் பெறநேரிடும். இது தமிழின வரலாற்றில் சேற்றைப் பூசிடும் செயலாகிடும்.

ஏனெனில், தமிழினச் சமுதாய வாதிகளிலும் அரசியல்வாதிகளிலும் மிகமிகச் சிலரே பொறுப்பும் பொறுமையும் கடமையுணர்வும் இனப்பற்றும், மொழிப்பற்றும் இல்லாத காலிகளாகவும், கூலிகளாகவும், போலிகளாகவும் செயல்பட்டுவருகிறார்கள் என்பது அனைவருமறிந்த ஒன்றாகும். எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் கண்மூடித்தனமாக அனைத்துச் சமுதாய வாதிகளையும், அரசியல் வாதிகளையும் கண்டிப்பதாகவோ, குறைவறிக் குற்றம் சாட்டுவதாகவோ என்றைக்கும் எவரும் எண்ணிவிடக் கூடாது. ஆனால் 'தமிழ் நாட்டில் சமுதாய உணர்ச்சியும், அரசியல் உணர்ச்சியுமதான் தமிழரின்சமய உணர்ச்சிக்கு மாபெரும் அழிவையும், இழிவையும் வழங்கி வருகிறது என்பதையாரும் மறைக்கவோ. மறுக்கவோ முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது' ஏனெனில் தமிழர்களுடைய சமய உணர்ச்சி புண்படுத்தப்பட்டும், சிதைத்தழிக்கப்பட்டும், சிறுமைப்படுத்தப்பட்டும், கேலிக்கும் கிண்டலுக்கும் உரியதாக ஆக்கப்பட்டும் மிகப்பெரிய பாதிப்புக்களை அடைய நேரிட்டு விட்ட காரணத்தால் தான் கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் எத்தனையோ பெரிய

பெரிய அருளாளர்களும் ஆற்றல் மிகு மறவர்களும், பேராற்றல் மிக்க சான்றோர் -களும் அடுத்தடுத்துத் தொடர்ந்து முயன்றும் கூடத் தமிழரின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாகவே இருந்துவருகிறது. இருந்துவருகிறது. இருந்துவருகிறது.

**சமய உணர்வுதான் தமிழினத்தை மீட்கும்.**

எனவே தமிழினத்திற்கும், தமிழ் நாகரீகத்துக்கும், தமிழ்ப்பண்பாட்டிற்கும், தமிழ்ச் சமயத்திற்கும் நன்மை விளையமுடியாதபடி கேடுசெய்துவருவது, தமிழகத்தில் வளர்க்கப்பட்டுவரும் தவறான சமுதாய உணர்ச்சியும் அரசியல் உணர்ச்சியும்தான். அதாவது, சமய உணர்ச்சியால்தான் (மத உணர்வால்தான், மதத்தால்தான்) தமிழரை, தமிழினத்தை, தமிழ் மொழியை, தமிழ் நாட்டை, தமிழர்ப்பண்பாட்டை, தமிழின உரிமையை, தமிழ் மொழியின் பெருமையை, தமிழர் உரிமை வாழ்வை, மீட்டுத்தரமுடியும். மீட்டுத்தரமுடியும். மீட்டுத்தரமுடியும். இவற்றைப் புரிந்தும், புரிய வைத்தும் செயல்படக் கூடிய தலைவன்தான் தமிழினத்தின் தலைவனாக, தமிழர் மதத்தின் தலைவனாக, தமிழ் மொழியின் தலைவனாக, விளங்கிட முடியும், விளங்கிட முடியும், விளங்கிட முடியும்'' என்று குறிப்பிடுகிறார்.

தமிழினத்தின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருந்து வருவதற்குக் காரணமே தமிழர்களின் மதத்துறையில் அன்னியர்களின் மொழியான சமசுக்கிருத மொழி ஆட்சி செய்து வருவதுதான். அதாவது, தமிழர்களின் சமயம் சமசுக்கிருத மொழிக்கு அடிமைப்பட்டுக் கிடக்கின்ற காரணத்தினால்தான்; தமிழரின் சமய உணர்ச்சியால் தமிழரின் சமுதாய உணர்ச்சியும், அரசியல் உணர்ச்சியும் விழிச்சி பெற்று மொழியும், இனமும், பண்பாடும், கலையும், இலக்கியமும், விடுதலை பெற்றிட, உரிமை பெற்றிட, ஒற்றுமை பெற்றிட உழைத்திடக் கூடிய நற்காலம் உருவாகும். உருவாகும். உருவாகும். இல்லாவிட்டால் 'தமிழரின் சமய உணர்ச்சி -யில்லாத சமுதாய உணர்ச்சியும், அரசியல் உணர்ச்சியும் தமிழ் இன நல விரோதங்களையும், துரோகங்களையுமே செய்திடும்' இதைத் தெளிவாகச் சொல்ல வேண்டுமென்றால் சமய உணர்வில்லாத சமுதாயவாதிகளும் அரசியல்வாதிகளும் இன ஒற்றுமை இன ஒருமைப்பாடு, இனப்பற்று, மொழிப்பற்று, மொழியுரிமை, மொழி விடுதலை, இன விடுதலை, என்பவைகளையெல்லாம் கொலை செய்பவர்களாக அல்லது சிதைத்துச் சீரழிப்பவர்களாக அல்லது இவைகளை அன்னியர்களுக்கு விலைக்கு விற்பவர்களாகத் தான் செயல்பட முடியும்.

இதனால்தான், இந்து மறுமலர்ச்சி இயக்கம் சமசுக்கிருதமொழியின் கடுமை -யான, கொடுமையான பிடியிலிருந்து தமிழர்களை விடுவிக்கும் மாபெரும் பணியில் ஈடுபட்டிருக்கிறது.

இந்தப் பணியில் அவசரமோ, ஆத்திரமோ காட்டப்பட்டுவிடக் கூடாது. அதாவது, இந்தப் பணியில் மிகுந்த நிதானமும், பொறுமையும், கட்டுப்பாடும், அமைதியும், உண்மை காணும் உயரியப் போக்கும், நடுநிலைப் பண்பும், ஆக்க நோக்கும் மிகுதியாக இருக்க வேண்டும். எக்காரணம் பற்றியும் எதன் மீதும் கண்மூடித்தனமான வெறுப்புணர்வோ, மறுப்புணர்வோ, எதிர்ப்புணர்வோ வளர்ந்திடாமல் அறிவு விழித்த நிலையில், அன்பு செழித்த நிலையில் செயல்படுபவர்

-களாகவே இருப்பவர்களால்தான்; சமசுக்கிருத மொழியிலிருந்து தமிழரின் மதத்தையும், மொழியையும், இனத்தையும் விடுவிக்க முடியும்' விடுவிக்க முடியும் விடுவிக்க முடியும்.

தமிழர்களிலேயே கணிசமான அளவினர் சமசுக்கிருதமொழியில்தான் மதத் -திற்குரிய அனைத்துச் சடங்குகளையும், பூசைகளையும் செய்ய வேண்டும்; அப்பொழுது தான் அருட்பயன் கிடைக்கும்என்று நம்புகிறவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் நான்கு யுகங்களாக இருக்கின்ற தமிழ்மொழியின் தொன்மையையும், மேன்மை -யையும், திண்மையையும் ஆராய்ந்தறியவும், புரிந்துணரவும் தயாராகவே இல்லை! இல்லை! இல்லை! இல்லை! இல்லவேயில்லை!

அதாவது, எப்படிப் பார்த்தாலும் நான்காவது யுகமான கலியுகம் பிறந்து ஏறத்தாழ மூவாயிரம் (3000) ஆண்டுகள் கழித்துத்தான் இந்தச் சமசுக்கிருதம் என்ற மொழி தோற்றுவிக்கப்பட்டது என்பதையும்; சித்தர்கள்தான் இந்தச் சமசுக்கிருத மொழியை வட ஆரியரின் வேண்டுகோளுக்கிணங்க அவர்களுடைய எழுத்தில்லாத பேச்சு மொழியான ஆரிய மொழிக்குத் தமிழ் மொழியின் அடிப்படையில் எழுத்துக் -களையும், சொற்களையும், இலக்கிய இலக்கணங்களையும் உருவாக்கிக் கொடுத்தார்கள் என்பதனையும்........... எவ்வளவுதான் எடுத்துக் கூறினாலும் நம்பத்தயாராய் இல்லாதவர்களாகவும், ஒப்புக் கொள்ளத் தயாராய் இல்லாதவர்களாகவும் இருக் -கிறார்கள்.

இதில், வெட்கக்கேடானதான, கேலிக்குரியதான, அப்பாவித்தனமானதான, ஏமாளித்தனமானதான, கோமாளித்தனமானதான, பைத்தியகாரத்தனமானதான, வறட்டுப் பிடிவாதமானதான, முறட்டுப்போக்கு ஒன்று கண்மூடித்தனமாக இருந்து வருகின்றது. இவர்களுக்கிடையில், அதாவது, இவர்கள் ஏறத்தாழ இரண்டாயிர -மாண்டுக்குள் வளர்ச்சி பெற்ற சமசுக்கிருத மொழியைவிட; 43 இலட்சம் ஆண்டுகளுக்குமேல் நல்ல வளர்ச்சி பெற்ற நிலையில் ஆட்சி புரிந்துவரும் தமிழ் மொழியைத் தாழ்வானதாகவும், பயனற்றதாகவும், வளமற்றதாகவும், அருளற்ற -தாகவும்,...... எண்ணுகிறார்கள். இன்னும் சொல்லப்போனால், இரண்டாயிரமாண்டு வயதை உடைய சமசுக்கிருத மொழிதான் 43 இலட்சம் ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து வரும் தமிழ் மொழிக்கு மூலமானதாகவும், தாயானதாகவும் பைத்தியக் காரத்தனமாக எண்ணுகிறார்கள். இப்படி எண்ணுவதற்கு, வட ஆரியர்களே பயப்படும்போது வட ஆரியர்களின் அடிமைகளாக, பத்தர்களாக, ஆதரவாளர்களாக வாழ்கின்ற அப்பாவித் தமிழர்கள் தங்களுடைய தாய் மொழியான தமிழ்மொழியையே அன்னிய மொழியான வட ஆரியச் சமசுக்கிருத மொழிக்கு அடிமையாக்க முயல்கின்றார்கள். இப்படிப்பட்ட இவர்களைத் திருத்துவதென்பது எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல! எனவே, இவர்களும், என்றாவது ஒரு நாள் **'தங்களுடைய தாய் மொழியான தமிழ் மொழிதான் இம் மண்ணுலகிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் தாயாக, மூலமாக இருக்கின்றது'** என்ற பேருண்மையைத் தெரிந்து கொள்ளும் வண்ணம் தேவையான சான்றுகளையும், ஊன்றுகளையும் தெளிவாக வழங்கிட முற்படுவதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கடமையாக இருக்க வேண்டும்.

மேலும், இந்து மறுமலர்ச்சி இயக்கத்தால் தான்; இதனுடைய பன்னிரண்டு -க்கும் மேற்பட்ட கிளைகள் மூலம், 'தமிழ்மொழிதான் அண்ட பேரண்டமாளும் அருளுலக ஆட்சிமொழி' என்பதையும், 'தமிழ் மொழிதான் அருளை அனுபவப் பொருளாக வாரிவாரி வழங்கக்கூடிய மொழி' என்பதையும், 'தமிழ்மொழியின் மூலம்தான் அருள் ஊற்றுக்களாக மாறிட முடியும்' என்பதையும். 'தமிழ்மொழியில் தான் பதினெண்சித்தர்கள், நாற்பத்தெட்டுவகைச் சித்தர்கள், 48 வகை வழிபடு நிலையினர்கள், 48 வகை அருளாளர்கள், அருளாளிகள், அருளாடு நாயகங்கள், 48 வகைப் பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்கள், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்கள், 48 வகை மருளாளர்கள், மருளாளிகள், மருளாடுநாயகங்கள், 63 நாயன்மார்கள், 12 ஆழ்வார்கள், எண்ணற்ற எண்வகைச் சித்தியாளர்கள் தோன்றியிருக்கிறார்கள்' என்பதையும், தெரிந்து, அறிந்து, ஆராய் -ந்து, புரிந்து, தெளிந்து, உணர்ந்து, நம்பி ஒப்புக்கொள்ளச் செய்யமுடியும்.

எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கத்தவர்கள் பொறுப்பாகவும், பொறுமை யாகவும் தமிழ்மொழியின் அருமை பெருமைகளை விளக்கிடும் பணியில் ஈடுபட வேண்டும். அத்துடன் தமிழரின் மதமான சித்தர் நெறி எனும் இந்துமதம்தான் இம்மண்ணுலக மதங்களனைத்துக்கும் மூலமானது; முதலாவதானது; தாயானது — என்ற பேருண்மையினை மிகமிகத் தெளிவாக விளக்கியுரைத்தல் வேண்டும்.

மேலும், இம்மண்ணுலகின் முதல் மூலப்பகுதியான கடலுள் மறைந்த குமரிக் -கண்டம் எனப்படும் இளமுறியாக் கண்டத்தில்தான் தமிழர்களின் மதமான இந்து மதம் பிறந்தது என்பதையும்; இந்த இந்து மதம்தான் விலங்குகளோடு விலங்குக -ளாக வாழ்ந்து கொண்டிருந்த மண்சர்களைப் (மண் + ஈசர்கள் —> மணிசர்கள் = மண்ணின் தலைவர்கள்) பண்படுத்தி மனதையுடைய மனிதர்களாக மாற்றியது என்பதையும்; மிகத் தெளிவாக வட ஆரிய மாயையில் மூழ்கிக் கிடக்கும் அப்பாவித் தமிழர்களுக்கு விளக்கியுரைத்தேயாக வேண்டும்.

## தமிழ் மொழியே மூலமொழி, முதல்மொழி

ஏனெனில், 'இவர்கள் தான் தமிழ் மொழியில் மந்திரங்களைச் சொன்னால் அல்லது பூசைகளைச் செய்தால் ஒரு பயனும் ஏற்படாது' என்றும்; தமிழ்மொழியில் பூசைகளைச் செய்வது பெரிய பாவம் என்றும்; தமிழ்மொழி -யில் பூசைகளைச் செய்தால் கடவுள் எல்லாம் கோபித்துக் கொள்ளும் என்றும்;சமசுக்கிருத மொழி தான் கடவுள்களுக்குப் புரியக் கூடிய மொழி என்றும், நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட இவர் களை முழுமையாகத் திருத்தினால்தான் பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்கள் திருந்துவார்கள். இல்லா விட்டால் வட ஆரியர்கள் திருந்தத் தயாராக இருந்தாலும் இந்த வட ஆரிய அடிமைகள், பத்தர்கள், ஆதரவாளர்கள எப்பாடுபட்டாவது அவர் கள் திருந்துவதைத் தடுத்து நிறுத்தி விடுவார்கள். எனவே 'வட ஆரியர்களைச் சந்திப்பதற்கு முன்னால இந்த வட ஆரிய அடிமைகளை, பத்தர்களை, ஆதரவாளர்களைச் சந்தித்தேயாக வேண்டும். இதற்குரிய சிந்தனைகளிலும் செயல்களிலும் முழுமூச்சாக ஈடுபட்டால்தான் தமிழர்களின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சி நிலையாக

சமசுக்கிருதம்

பிருமணர்

இருந்து வருதை ஓரளவாவது தடுத்து நிறுத்தித் தேவையான மாற்றங்களை விளை -விக்க முடியும்! விளைவிக்க முடியும்! விளைவிக்க முடியும்! இதனை, இந்து மறுமலர்ச்சி இயக்கம் மட்டுமல்லாமல் உண்மையான பரம்பரைத் தமிழர்கள் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்! புரிந்து கொள்ள வேண்டும்! அப் பொழுது தான், தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பதை மாற்று வதற்காக எடுத்துக் கொள்ளக் கூடிய முயற்சிகள் காட்டுத்தீ போல் விரைந்து விரிந்து பரவிடும்! பரவிடும்! பரவிடும்!

தமிழர்களில் ஒரு கணிசமான அளவினர்கள்; தங்களுடைய தாய்மொழி அல்லாத அன்னிய மொழியான சமசுக்கிருத மொழியில்தான் அனைத்து வகையான மதச் சடங்குகளையும் பூசைகளையும் செய்யவேண்டுமென்று விரும்புகிறார்கள். இவர் களுடைய நம்பிக்கையைச் சாதாரணமானதாகவோ, அற்பமானதாகவோ, ஒதுக்கி விடமுடியாது; புறக்கணித்துவிட முடியாது; மூடி மறைத்திட முடியாது. எனவே, இவர்களுக்கு உலக வரலாற்றின் அடிப்படையில் தக்க விளக்கங்களைக் கொடுத்தே -யாக வேண்டும். அப்பொழுதுதான் இவர்கள், காலப்போக்கில் சிறிது சிறிதாகவா -வது மாற்றமடைவார்கள். இல்லாவிட்டால், இந்தக் கணிசமான மக்கள் என் -றென்றைக்கும் சுமசுக்கிருத மொழிக்கு ஆதரவு தருவதோடு; என்றென்றைக்கும் தங் களுடைய தாய்மொழியான தமிழ்மொழிக்கே எதிரிகளாகவும் ஆகிவிடுவார்கள். எனவே மிகமிக மென்மையாகவும். தன்மையாகவும், உண்மையாகவும், இவர்களிடையே கருத்து விளக்கம் வழங்கி எண்ணப் புரட்சி, சிந்தனைப் புரட்சி, தத்துவப் புரட்சி, சித்தாந்தப் புரட்சி......முதலியவைகளைப் படிப்படியாக விளைவிக்க வேண்டும். அப்படியல்லாமல் மொழிச் சீர்திருத்தம், சமயச் சீர்திருத்தம், சமுதாயச் சீர்திருத்தம் ......முதலியவற்றின் பெயரால் மிகப் பெரிய அரிய கருத்துக்களையும் செயல்களையும் வெளியிட்டிட்டால் அது நேர்மாறான பயன்களையே வழங்கிடும்.

இந்த இருபதாம் நூற்றாண்டில் உலக அளவில் மிகப்பெரிய சிந்தனையாளராக, சீர்திருத்த மேதையாக, பகுத்தறிவுப் பகலவனாக, அறிவு ஊற்றாக, சிறைக்கஞ்சாச் சிங்கமாக, தன்னலமில்லாத தலைவனாக. இன விடுதலைப் போரின் பெருந்தளபதியாக, மடமைகளை எதிர்த்துத் தனியொருவராகப் போரிட்ட மாவீரராக, தமிழினத் தன் மான போர்ப்பரணியின் நாயகராக, தமிழினத்தின் தந்தையாக விளங்கிய வெண் தாடி வேந்தர், பெரியார் ஈ. வெ. ரா. அவர்கள் மேலே கூறியது போலத்தான் சமய சமுதாய அரசியல் சீர்திருத்தப் பணிகளில் மிகுந்த வேகமும் விரைவும் விரிவும் முழுமுச்சாகக் காட்டிய காரணத்தால் பொதுமக்களின் பேராதரவைப் பெறமுடியாமல் போய்விட்டது. ஆனால், அவரின் கீழ்க் கணிசமான அளவு தீரமும் வீரமும் மிக்க செயல்வீரர்கள் நிலையாகச் செயலாற்றுகிறார்கள்; இருந்த போதிலும், அவருடைய தத்துவங்களும் சித்தாந்தங்களும் செயல் திட்டங்களும் பெருவாரியான மக்களால் எண்ணிப் பார்க்கக் கூட முடியாமல் தனிமைப் பட்டு விட்டன. அவரை அவருடைய எதிரிகள் மிகமிக எளிதாக 'நாத்திகர்', 'கடவுள் மறுப்பாளர்', 'மதத் -தின் எதிரி', 'பழமைக்குப் பகைவர்' 'வறட்டு வேதாந்தி', 'முரட்டுப் பிடிவாதக் காரர்'......என்றெல்லாம் குறைகூறிக் குற்றம் சாட்டிப் பொதுமக்களிடையில் முழுமையாக செல்வாக்குப் பெற முடியாமல் செய்து விட்டார்கள். இதனை இந்த நூற்றாண்டு மக்கள் எண்ணிப் பார்க்கவே மாட்டார்கள். ஆனால், அவர் எவ்வளவு காலம் வாழ்ந்து இப்பணிகளைத் தொடர்ந்து ஆற்றினாலும் கூட அவருக்கு

பெருவெற்றி கிடைக்கப் போவதில்லை. இருந்தாலும், இவருடைய பெயரால் சமுதாய வாதிகளும், அரசியல்வாதிகளும், நெடுநாட்களுக்கு சுயலாபம் அடைந்திடுவார்கள். இதைத் தவிர வேறொன்றும் உருப்படியாக விளையப் போவதில்லை ஏனெனில் சமுதாய உணர்ச்சி, அரசியல் உணர்ச்சி என்ற இரண்டுமே பொதுநல நோக்குடைய தத்துவவாதிகளின் கையில் அடங்குவனவல்ல. இவையிரண்டும் தன்னல வெறியும் பேராசையும் முறைகேடும் ஒழுக்கக் குறைவும் நீதியற்ற போக்கும், நேர்மையற்ற நோக்கும் உடைய குறுகிய மனம் படைத்த வெறியர்களின் கையிலே அடங்குவனவாகத்தான் பெரும்பாலும் இருந்து வருகின்றன.

அதாவது சமுதாயவாதிகளிலும், அரசியல்வாதிகளிலும் மிகமிகச் சிலரே உண்மையான, நேர்மையான, நீதியான, ஆக்கப்பணிகளைச் செய்யும் நோக்கும் போக்கும் பெற்றவர்களாக இருக்கிறார்கள். இதனை எண்ணிப் பார்த்தால் எத்தனை நூற்றாண்டுகள் ஆனாலும்,சமுதாயவாதிகளிலும், அரசியல்வாதிகளிலும் தேவையான அளவு உண்மையிலேயே பொதுமக்களின் நலத்துக்காகப் பாடுபடக் கூடியவர்கள் தோன்றக் கூடிய காலம் எப்பொழுது? என்று கணித்துக்கூறவே முடியாது. எனவே, சமுதாயவாதிகளாலும், அரசியல்வாதிகளாலும் பொதுமக்களுக்கு நன்மையேற்படுவது என்பது குதிரைக் கொம்பாகவே இருக்கிறது. அதாவது, நமது நாட்டின் [தமிழர்களின்] சமுதாய உணர்ச்சியும், அரசியல் உணர்ச்சியும் எவ்விதமான பயனையும் விளைவிக்காத பாலைவனத்து மழையாக. கானல் நீராகத்தான் இருக்கின்றன என்பதை இனியாவது நமது பொதுமக்களும் தலைவர்களும் உணர்ந்தும் உணர்த்தியும் செயல்படவேண்டும். அதாவது; மேற்படி சமுதாய உணர்ச்சியும். அரசியல் உணர்ச்சியும் நம் மக்களுக்குத் தேவையான இன்றியமையாத பணிகளைச் செய்ய முடியாதவைகளாகத் தோல்வியுற்றுவிட்டன, தோல்வியுற்றுவிட்டன. **எனவே சமய உணர்ச்சியால்தான்**

[All the redeems and the rescues can be rendered to the Tamils only by the religious feelings and approaches. And it is not easy to do any reformation and renaissances to the Tamils by the social and the political altitudes and approaches These facts must be felt atleast by the leaders of the Tamils. But no leader is generous and scientific to come forward to discuss and rethink about the failures, disappointments, disabilities and uselessness of the social and political movements. Most of them are cowards, culprits and corruptives. So, only by the sacred, holy, innocent, straight—forward, strong, pious and true religious people, all the ills and evils can be eradicated'' —taken from the writings of His Holiness Siddhar kakkaiyar M. P Pillai]

**தமிழர்களுக்கு எல்லாவிதமான விடிவுகளும், பாதுகாப்பு உதவிகளும் கிடைக்கும். அதாவது, சமுதாய அரசியல் நோக்குகளாலும் போக்குகளாலும் தமிழர்களுக்கு எந்தச் சீர்திருத்தமோ, மறுமலர்ச்சியோ ஏற்படுத்தப்பட்டுவிட முடியாது. இந்தப் பேருண்மையைத் தமிழர்களுத் தலைவர்களாக இருப்பவர்களாவது உணர வேண்டும்.**

ஆனால், தமிழர்களுக்கிடையே உள்ள தலைவர்களில் ஏறத்தாழ யாருமே பெருந்தன்மையோடும் விஞ்ஞானப் போக்கோடும் தங்களுக்கு ஏற்பட்டிட்ட தோல்விகளையும், ஏமாற்றங்களையும், இயலாமைகளையும், பயனற்றவைகளையும் பற்றிச் சிந்திக்கவோ அல்லது மற்றவர்களோடு கலந்து மறுசிந்தனை செய்யவோ தயாராக

இல்லை! தயாராக இல்லை! தயாராக இல்லை! தயாராகவே இல்லை! ஏனென்றால். பெரும்பாலான [குறிப்பிட்ட சிலரைத் தவிர] சமுதாய அரசியல் தலைவர்கள் கோழை -களாகவும். குற்றவாளிகளாகவும், கையூட்டு பெறும் ஊழல் பேர்வழிகளாகவுமே இருக்கிறார்கள். ஆகையால், புனிதத்தன்மையும், தெய்வீகத்தன்மையும். கள்ளங்கப -டற்ற தன்மையும் நேர்மைத்தன்மையும், உறுதியும் உடைய உண்மையான சமய உணர்வு உள்ள சமயவாதிகளால்தான் [மதவாதிகளால்தான்] தமிழர்களிடையே உள்ள எல்லாவிதமான நோய் நிலைகளும், தேய் நிலைகளும், மாய் நிலைகளும், ஓய் நிலைகளும் முழுமையாக அகற்றப்பட்டிடும், அகற்றப்பட்டிடும், அகற்றப்பட்டிடும்...'' —என்று தமிழர்களின் தாழ்ச்சி நிலைகளைப் பற்றிய தமது ஆராய்ச்சிக் கட்டுரைகளில் மிகமிகத் தெளிவாகக் கூறுகிறார் இ ம.இ.யின் காலஞ்சென்ற இரண்டாவது தலைவர் அருள்மிகு சித்தர் காக்கையர் ம பழனிச்சாமி பிள்ளை அவர்கள்.

**சமய வளர்ச்சியின் மூலமே சமுதாயம் விழிச்சியும் எழிச்சியும் செழிச்சியும் பெற்றிடும்**

இவ்வாறு சமய வளர்ச்சியின் மூலம்தான் தமிழ்ச் சமுதாயத்திற்கும், அரசிய -லிற்கும், இனத்திற்கும்,மொழிக்கும், பண்பாட்டிற்கும், நாகரீகத்திற்கும், கலைக்கும் விடுதலை வாழ்வினையும், பெருமைமிகு உரிமை நிலையி -னையும் பெற்றுத் தர முடியும் என்ற கருத்து ஆணித்தர மாகவும், ஆதாரப் பூர்வமாகவும் நிலைநாட்டப்படுகிறது. எனவே, இந்தச் சமயத்துறையும், சமய உணர்ச்சியும் The Religion and the Religious feeling must be regularised, systematised, puri fied, perfected, rectified, Strengthened and modern sed; such that, easy to be applicable to the Present society. And, that too, the religion must beana -ysed and explained rationalistically and scientifically. Then only the religion ean be useful for the uplift and betterment of the Tamils in all respects. There should not be any blind, and vehement, superstitious and fanatic means and approaches in building or cultivating the religion and religious feelings .....taken from the writings of His Holiness Siddhar Kakkaiyar Mr. M. Palanisamy Pillai.] ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்; சரியான செயல் நிலைகளைப் பெறுமாறு செய்யவேண்டும்; முழுமையாகத் தூய்மைப்படுத்தப் படவேண்டும்; இன்றைய நிலைக்கு முழுமையாகப் பொருத்தமுள்ளதாக்கப்பட வேண்டும்; அனைத்துவிதமான இல்லாமைகளும், இயலாமைகளும், இருள் நிலைகளும் இடர்நிலைகளும் சரிசெய்யப்படவேண்டும்; நல்ல வலிமையும், பொலிவும், சத்தியும், திறமும், தரமும் உடையதாக்கப்பட வேண்டும்.

இன்றைய புதிய தலைமுறைகளும், நடுத்தர வயதினரும் மூத்தோர்களும் அச்சமோ அருவருப்போ இல்லாமல் முழுமையாக அனைத்தையும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் புதிய கண்ணோட்டத்திலும், புரட்சிக் கருத்துப் போக்கிலும் நல்ல விளக் -கங்கள் வழங்கப்பட வேண்டும். இவற்றால் தான் இன்றுள்ள தமிழர்கள் அனைவரி டமும் சமயத்தையும் சமய உணர்ச்சியையும் பற்றிய எண்ணங்களையும், சிந்தனைக ளையும், வளர்க்க வேண்டும். இதற்கு, தமது சமயமும், சமய உணர்ச்சியும் பற்றிய 'செய்திகளும், கருத்துக்களும்' [informatoins and Ideas], 'நெறியும், கொள்கையும்' [Principles and Policies], 'அணுகுமுறைகளும், குறிக்கோள்களும்' (Approaches and aims], 'தத்துவமும், சித்தாந்தமும்' [The Philosophy and the theology], நம்பிக்கையும் பழக்க வழக்கங்களும்' [The faiths, the customs and the manners], 'மரபுகளும் சட்டங்களும்' [The traditions and

the laws],......முழுக்க முழுக்கப் பகுத்தறிவுப் போக்கிலும், விஞ்ஞானநோக்கிலும் விளக்கப்பட்டிடல் வேண்டும். அப்பொழுதுதான், சமயமும், சமய உணர்ச்சியும் தமிழர்களை எல்லாத் துறைகளிலும், எல்லாவகைகளிலும், எல்லா நிலைகளிலும் பயனுள்ள முறையில் உயர்த்தவும், மேம்படுத்தவும் பயன்பட்டிடும் [இல்லாவிட்டால் சமுதாய உணர்ச்சியையும், அரசியல் உணர்ச்சியையும் போல் சமய உணர்ச்சியும் தோற்றுப் போக நேரிடும். ஏமாற்றத்தையே அளிப்பதாகிடும் எச்சரிக்கை]

எனவே சமயத்தையும், சமயஉணர்ச்சியையும் மறுமலர்ச்சி பெறச் செய்வதிலும் வளவளர்ச்சி பெறச் செய்வதிலும் மிகமிக எச்சரிக்கையாகச் செயல்பட வேண்டும்.

**தமிழர்களின் சமய உணர்ச்சியும்-சமுதாய உணர்ச்சியும்**

அதாவது, சமயத்தையும், சமய உணர்ச்சியையும் சாதனங்களாக, கருவிகளாக, ஆயுதங்களாகப் பயன் படுத்த விரும்புகிறவர்கள் எந்த விதமான குருட்டுத் தனமான போக்கையோ! அல்லது முரட்டுத்தனமான போக்கையோ! அல்லது மூடநம்பிக்கைக்குரிய போக்கை யோ! அல்லது வறட்டுத்தனமான வெறிப் போக்கையோ!.........கையாண்டு விடக் கூடாது! கையாண்டு விடக்கூடாது! கையாண்டுவிடக் கூடாது! கையாண்டுவிடவே கூடாது! எச்சரிக்கை எச்சரிக்கை, எச்சரிக்கை ஏனெனில் தமிழர்களின் சமயமும், சமுதாய உணர்ச்சியும் மிகமிகத் தொன்மையானது, மேன்மையானது, தண்மை யானது, முதன்மையானது, திண்மையானது, நளின மெலினத் தன்மையுடையது...'' என்று இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் காலஞ்சென்ற இரண்டாவது தலைவர் அருள்மிகு சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமி பிள்ளை அவர்கள் குறிப்பிடுகிறார்.

''பிற மண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் தங்களுடைய வேதமதக் கோட்பாடுகளையும் புராண இதிகாசங்களையும், கடவுள்களையும், மிகமிகத் திறமை யாக தமிழர்களுடைய மதமான சித்தர் நெறி எனும் இந்து மதத்தோடு இரண்டறக் கலந்து இரண்டும் ஒன்று என்றாக்கி விட்டார்கள். அதாவது, சமசுக்கிருத மொழியை ஆட்சிமொழியாக உடைய பொய்யான ஹிந்து மதத்தைத் தோற்றுவித்திட்டார்கள், இதனுடன் போராடுவதற்காகவே 63 நாயன்மார்களும், 12 ஆழ்வார்களும் தோன்றிச் சமசுக்கிருத மொழியைப் புறக்கணித்து தமிழ்மொழி வழியாகவே பத்தி செலுத்திச் சத்தி, சித்தி பெற்று இறைவனை நேரில் கண்டு முத்தியடைந்து காட்டினர். ஆனால், அப்பாவித் தமிழர்கள், ஏமாளித்தமிழர்கள் சமசுக்கிருத மொழிதான் தெய் வீக மொழி, தேவமொழி, பூசைக்குரிய மொழி என்று தொடர்ந்து நம்பலானார்கள். இதனால், தஞ்சைப்பெரிய கோயிலைக் கட்டிய பதினோராவது பதினெண் சித்தர் பீடாதி பதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள் தக்காரைக் கொண்டு பெருமுயற்சிகள் செய்து ஆழ்வார்களின் பாடல்களை நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் எனத் தொகுக்கச் செய்தார். இதே போல், நாயன் மார்களின் பாடல்களை திருமுறைகளாகத் தொகுக்கும் பணியைத் துவக்கினார். அப் பணி இவரது மகன் கருவூர்த் தேவரால் நிறைவு செய்யப்பட்டது. இப்படித் தமிழரின் மதமான இந்துமதம் என்னும் சித்தர் நெறிக்கு இருகண்களாக உள்ள சிவபெருமான், மாயோன் (திருமால், பெருமால்) முதலியோர்களைப் பற்றிய பாடல்களை தோத்திரங் -களாகத் தொகுத்தார். இந்தத் தோத்திரங்களையும், இத் தோத்திரங்களுக்குரிய

தெய்வீகச் சித்தி மிக்க அருளாளர்களின் வரலாறுகளையும் அறிந்தும் கூடத் தமிழர் -களில் பெரும்பாலானவர்கள் தொடர்ந்து பிறமண்ணினரான பிருமணர்களையே அருளுலகின் தலைவர்களாகவும், மத வாழ்விற்குரிய ஆச்சாரியார்களாகவும் ஏற்றுப் போற்றி வழிபட்டார்கள். இவற்றிற்கும் மேலாக, தமிழர்களில் பெரும்பாலானவர் -கள் தங்களுக்குத் தெரியாத சமசுக்கிருத புராண இதிகாசங்களையும், உபநிடதங் -களையும், வேதங்களையும், ஆகமங்களையும் சுருதிகளையும், சூத்திரங்களையுமே பெரியனவாக எண்ணிப் போற்றிப் புகழ்ந்து தொடர்ந்து சமசுக்கிருத அடிமைகளா கவே வாழவாரம்பித்தார்கள்.

இதனால் கருவூர்த்தேவரும், அவரது மகன் திருமாளிகைத் தேவரும் உருவாக் -கிய அருளாளர் பரம்பரையில்; தொடர்ந்து சந்தானச்சாரியார்கள் என்பவர்கள் தோன்றிச் சித்தர் நெறியெனும் இந்து மதத்தில் சாத்திரங்களைத் தெளிவாக; சைவ நெறிச் சாத்திரங்கள், சிவ நெறிச் சாத்திரங்கள் என்று பதினான்கு சாத்திரங்களை எழுதி பிறமண்ணினரான பிருமணர்களின் சூழ்ச்சியான போலியான, ஏமாற்றான, பயனற்ற, பொய்யான ஹிந்து மதத்தை எதிர்த்துத் தமிழர்களின் மெய்யான இந்து மதத்தை நிலைநிறுத்தினார்கள். **சித்தாந்தச் சாத்திரம்:** 1. திருவுந்தியார், 2. திருகளிற்றுப்படியார் 3. சிவஞான போதம் 4 சிவஞான சித்தியார் 5. இருபா விருப்து 6. உண்மை நெறி விளக்கம் 7. சிவபிரகாசம் 8 திருவருட்பயன் 9. வினா வெண்பா 10. போற்றிக்கலி வெண்பா, 11. கொடிக்கவி 12 நெஞ்சு விடு தூது 13 உண்மை விளக்கம் 14. சங்கற்ப நிராகரணம் என்று இப்படி; மிகத் தெளிவாக, மெய்யான இந்துமதம் பதினெண் சித்தர்களின் தலைவரான சீவன் எனப்படும் சிவ்னின் வழிவழியாகத் தான் உண்டானது என்று தெளிவாக விளக்கியுரைக்கப் பட்டது.

இருந்த போதிலும், பிருமண மாயையில் சிக்கிக் கிடக்கும் தமிழர்கள், மேற்படி பதினான்கு சாத்திரங்களும் சமசுக்கிருத வேதமதத்தை அடிப்படையாகக் கொண்டது என்று கண் மூடித்தனமாகக் குருட்டுக் போக்கில் கூறி இருட்டுக்குள் தங்களை நிலைநிறுத்திக் கொண்டார்கள். அதாவது. தமிழர்களில் பெரும்பாலானவர் -கள் தொடர்ந்து முரட்டுப்பிடிவாதமாக இருளுக்குள் இருக்கவே ஆரம்பித்ததோடு தங்களுக்குள் இருளையும் வளர்த்துக் கொள்ள ஆரம்பித்திட்டார்கள். எனவேதான், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி விண்ணுயர்ந்த கண்கவர் கோபுரங்களை எழுப்பி வளர்த்த இந்துமத மறுமலர்ச்சிப் பணிகள் மாபெரும் வீழ்ச்சியுற்றுத் தாழ்ச்சி பெற்றன; அதனால், தமிழினத்தின் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாயிற்று. இந்தத் தொடர்ச்சி நிலைக்கு முடிவு கட்ட வேண்டும் என பதினெண் சித்தர்களும் பதினெட் டாம்படிக் கருப்புகளும், 48 வகைச் சித்தர்களும். 48 வகை வழிபடு நிலையினர்களும். 48 வகை பதினெண் சித்தர் பீடாதிபதி வழி ஆச்சாரியார்களும், 13 வகைக் கருவழி ஆச்சாரியார்களும், 13 வகைக் குருவழி ஆச்சாரியார்களும், 48 வகை அருளாளர் -களும், அருளாளிகளும், அருளாடு நாயகங்களும், 48 வகை மருளாளர்களும், மருளாளிகளும், மருளாடுநாயகங்களும் முழுமையாக விரும்பியதால்தான் ஆயிர -மாண்டு இடைவெளிக்குள் பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதி தோன்றி -யிருக்கிறார். இருந்தாலும், தமிழர்களில் பெரும்பாலானவர்கள் அப்பாவிகளாகவும்,

ஏமாளிகளாகவும், கண்மூடிப் போக்குடையவர்களாகவும், பிருமண அடிமைகளாகவும், சமசுக்கிருத அடிமைகளாகவும்... தொடர்ந்து வாழுகின்ற காரணத்தினால்; பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் முயற்சியால் தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாக இருப்பது முடிவுக்கு வருமா?! வராதா?! என்பது கேள்விக்குறியாகவே இருந்து வருகிறது. இவரை முறையாகப் பதினெட்டாண்டு காலப்பயிற்சிக்கும், பதினெட்டாண்டுகால முயற்சிக்கும் உரியவராகச் செய்து வருகிறோம் என்றாலும்; இவருடைய வெற்றி தோல்வி தமிழக மக்களைப் பொறுத்தது தான்...'' —என்று மிகத் தெளிவாக எழுதுகிறார் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் காலஞ்சென்ற இரண்டாவது தலைவர் அருள்மிகு சித்தர் காக்கையர் ம. பழனிசாமி பிள்ளை அவர்கள்.

**தமிழ் மொழி மீட்சிக்குரிய திட்டங்கள்**

எனவேதான், இன்றைக்கு இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கீழ் பன்னிரண்டுக்கும் மேற்பட்ட அமைப்புக்கள் உருவாக்கி; தமிழர்கள் எங்கெங்கு இருக்கிறார்களோ அங்கெல்லாம் மொழி, இன, நாட்டு உணர்வுகளும், கருத்துக்களும் வளவளர்ச்சி பெறத் தேவையான ஏற்பாடுகள் அனைத்தும் செய்யப்பட்டு வருகின்றன இவற்றாலாவது, மற்ற பீடாதிபதிகளுக்கு ஏற்பட்டது போன்ற மிகப் பெரிய தோல்விகள் தனக்கும் ஏற்படாமல் இருக்கட்டும் என்றுதான் தொடர்ந்து முயலுகின்றார் இன்றைய பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் கருவூரார். இவர் எண்ணற்ற தனிமனிதர்களைத் தேர்ந்தெடுத்து அருளுலகப் பயிற்சிகளின் மூலம் பல்வேறு வகையான அருள் நிலைகளையும், கலைகளையும் வழங்கி அருளுலக இருள்களையும், புரியாமைகளையும், அறியாமைகளையும் அகற்றும பணியில் ஈடுபட்டிருக்கிறார். இவருடைய கடலோடிக் காடோடி நாடோடி வாழ்வில் உருவாக்கப்பட்ட சாதனைகளும்; நான்கு யுகங்களாக அனைத்து வகையான சித்தர்களும் வளர்த்து வந்துள்ள போதனைகளும்; பெரும்பாலான தமிழர்களைச் சென்றடைய வேண்டும் என்ற ஆழ்ந்த தொலை நோக்குப் போக்குடனேயே *இன்றைய இந்து மறுமலர்ச்சி இயக்கம் செயல்படுகின்றது இதனை உணர்ந்தும் உணர்த்தியும் இன்றைய தமிழ்ச் சமுதாய இளைய தலைமுறை செயல்பட்டிட்டால்தான் உரிய பயன்கள் தேவையான அளவாவது உருவாக்கப்பட்டிடும்! உருவாக்கப் பட்டிடும்! உருவாக்கப்பட்டிடும்!

''இன்றைய நிலையில், தமிழகத்திலுள்ள படித்த கூட்டத்தினரிடையிலாவது; சமசுக்கிருத மொழியின் பிடியிலிருந்து தமிழ் மொழித் துறையையும், இலக்கியத் துறையையும், கலைத்துறையையும், சமுதாயத்துறையையும், அரசியல் துறையையும் முழுமையாக விடுவிக்க வேண்டும்! விடுவிக்க வேண்டும்!, விடுவிக்க வேண்டும்! என்ற உணர்வையும் நோக்கையும் போக்கையும் உருவாக்கியே தீர வேண்டும்! உருவாக்கியே தீர வேண்டும்! உருவாக்கியே தீரவேண்டும்!. இல்லாவிட்டால், வருங்காலத்தில் இன்றைய மக்களுக்குத் தீராதபழியே ஏற்பட்டிடும். எனவே, இது பற்றி இன்றுள்ள பெரியவர்களும். நடுத்தர வயதுடையவர்களும் சிந்திக்கா விட்டாலும்; இளைய தலைமுறையாவது சிந்தித்தேயாக வேண்டும்!, சிந்தித்தேயாக வேண்டும்!. சிந்தித்தேயாக வேண்டும்!. இதற்காக, எப்படிச் செயலாற்ற வேண்டும் என்பதையும் ஓரளவு கோடிட்டுக் காட்ட வேண்டியது நமது பணியாக இருக்கிறது.

அதாவது, மேலே குறிப்பிட்டுக் காட்டிய அனைத்துத் துறைகளிலுமுள்ள சமசுக்கிருத மொழியின் பிடிப்பை, சமசுக்கிருத மொழியின் இருளை, சமசுக்கிருத மொழியின் மாயையை அசைக்க வேண்டுமென்றால்; அதனுடைய அடிப்படைப் பிடிப்பும், ஆட்சியும் எங்கிருக்கிறது என்பது புரிய வேண்டும். அப்படிப்பார்க்கும் போது, தமிழரின் சமயத்துறையில், மதத்துறையில் சமசுக்கிருத மொழிக்கு மிகுதியான ஆட்சிநிலையும், பிடிப்புநிலையும் இருக்கிறது என்பதைத்தான் சுட்டிக் காட்ட வேண்டும். இதைச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால்; தமிழரின் சமயத் துறையில தமிழுக்கிருந்த அனைத்து விதமான பெருமைகளையும், உரிமைகளையும். ஆட்சி நிலைகளையும முற்றிலு மாக முறியடித்து; ஆழ்த்தித் தாழ்த்தி; அடக்கியொடுக்கிச் சர்வாதிகாரமான, ஏதேச் சதிகார ஆட்சிப் போக்கைப் பெற்றிட்டது சமசுக்கிருதம்தான். இந்த ஆட்சிப்பிடிப்புப் போர்; பேரி முரசு கொட்டாமல். படை அணி திரளாமல, போர்க்களத்தில் வியூகங்கள் அமைக்கப்படாமல், வாளும் வேலும் மோதாமல், குருதி மழை பெய்யா -மல்.....,மிகமிகச் சூழ்ச்சியாகவும், அமைதியாகவும், இருட்டடிப்பு முறையில் நடந்திட்டது என்பது தான் குறிப்பிடத்தக்கது.

அதாவது, பிறமண்ணினரான பிருமணர்கள், தங்களுக்கிருந்த அனைத்து வகையான அழகு, ஆற்றல், கலைத்திறமை, சூழ்ச்சித்திறன், பணிந்துகுனிந்து வளைந்து, கொடுத்துப்போகும் பண்பு முதலியவற்றால்; ஆரவாரமில்லாமல், அரசன் முதல் ஆண்டி வரை; படித்தவர் முதல் படிக்காத பாமரர் வரை; தமிழ் மொழியைத் துறந்து விட்டும். மறந்து விட்டும், மறுத்து விட்டும். வெறுத்து விட்டும் பத்தியோடு சமசுக்கிருத மொழியைத் தேவ மொழியாக, தெய்வ மொழியாக, பூசை மொழியாக அருளுலக, ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ளச் செய்து விட்டார்கள்!, சமசுக்கிருதப்போர் ஏற்றுக் கொள்ள செய்துவிட்டார்கள்!, ஏற்றுக் கொள்ள செய்து விட்டார்கள்! இந்த மாபெரும் சமயத்துறைப்போர் பற்றிய செய்திகள் அனைத்தும் வரலாற்றுத் துறையால் விளக்கப்பட முடியாத ஒன்றாக வே தொடர்ந்து இருந்து வருகின்றது. அதாவது, வரலாற்றுச் சான்றுகளோ, இலக்கியச் சான்றுகளோ, அரசியல் சாசனச் சான்றுகளோ;, மேற்படி சமசுக்கிருத மொழியின் வெற்றிப்போர் பற்றிய செய்திகள் எதையேனும் விளக்குவனவாக இல்லை! இல்லை! இல்லை! இல்லவே இல்லை! அதாவது, வெளிப்படையாகச் சமசுக்கிருதம் எப்பொழுது வந்தது?; அது எப்படியெப்படி தமிழ் மொழியோடு போராட ஆரம்பித்தது?; அந்தப் போராட்டம் பெரும்போராக நிகழ்ந்ததா? அல்லது சிறிய பெரிய பல போராட்டங்களாக நிகழ்ந்ததா? இந்தப் போரில் தமிழுக்கு வெற்றியே கிடைக்கவில்லையா?; தொடர்ந்து சமசுக்கிருதம் தமிழைத் தோற்கடித்துச் சிதைத்துச் சீரழித்ததா?; தமிழுக்காகப் போர் கொடி தூக்க அரியணை -யில் அமர்ந்திருந்தவர்கள் முதல் ஆலயத்தில் மணி ஆட்டியவர் வரை யாருமே முன் வரவில்லையா?, முன்வரவில்லையா? முன்வரவில்லையா?; அல்லது போர்க்கொடி தூக்கியவர்களெல்லாம் ஆங்காங்கே அப்படியப்படியே மடக்கப்பட்டும், முடக்கப் பட்டும், ஒடுக்கப்பட்டும், அடக்கப்பட்டு விட்டார்களா?;......என்ற வினாக்களுக்கு விடையே கிடைக்கவில்லை! கிடைக்கவில்லை! கிடைக்கவில்லை! கிடைக்கவேயில்லை, இதற்காக, எத்தனையெத்தனையோ ஆயிரமாயிரம் பேர்கள் காலமெல்லாம் முயன்றும் கூட தமிழ் எப்படி வீழ்த்தப்பட்டது?; எவரெவரால் வீழ்த்தப்பட்டது?; என்னென்ன காலகட்டங்களில் வீழ்த்தப்பட்டது?; தமிழைத் தனது உயிரினும் மேலாக நினைக்கும்

தமிழர்களில் ஒருவருக்குக் கூட உடல் துடிக்கவில்லையா?; நெஞ்சம் பதறவில்லையா?; சிந்தை சிற்றம் பெறவில்லையா?; அப்படி என்ன மாயா மந்திரம் நடந்தது? என்ற வினாக்களுக்கு விடை கிடைத்தால்தான் சமசுக்கிருதத்தின் பிடியிலிருந்தும், இருளி-லிருந்தும், மாயையிலிருந்தும், மயக்கத்திலிருந்தும் தமிழை விடுவிக்க முடியும். அப்பொழுதுதான் தமிழர்களை மேற்படியான அனைத்து விதமான அறியாமை நிலை-களிலிருந்தும், மிடிமை நிலைகளிலிருந்தும், வறுமை நிலைகளிலிருந்தும், வெறுமை நிலைகளிலிருந்தும், புரியாமை நிலைகளிலிருந்தும், அடிமை நிலைகளிலிருந்தும்........ விடுவிக்க முடியும்! விடுவிக்க முடியும்! விடுவிக்க முடியும்! இதற்காகத் தமிழரின் சமயத்துறையிலிருந்து அன்னிய மொழியான சமசுக்கிருத மொழியை அகற்றுவது பற்றிய முயற்சி உலக வரலாற்றுப் பின்னணியில் எண்ணிப்பார்க்கப்பட்டிடல் வேண்டும். அதுவும், இந்தச் சமய ஆட்சிமொழி மாற்றுத் திட்டம் வெற்றி பெறுமா பெறாதா? என்றும்; அப்படியே வெற்றி பெற்றால், இதனால் நன்மைகள் விளையுமா விளையாதா? என்றும்; நம்மவர்கள் நன்கு சிந்தித்தேயாக வேண்டும்! சிந்தித்தேயாக வேண்டும்! சிந்தித்தேயாக வேண்டும்!''..,.. என்று இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் மூத்த செயல் வீரர்கள்; இ.ம.இ.யின் இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர் ம. பழனிச்சாமிப் பிள்ளை அவர்கள் நிறைவெய்திய போது விடுத்த அறிக்கையில் குறிப்பிட்டிட்டார்கள். அந்த அறிக்கையின் இந்த ஒரு பகுதியை இங்கு நினைவுபடுத்துகிறோம்.

உலகம் முழுவதும் நன்கு பரவிக்கிடக்கக் கூடிய கிருத்துவ மதத்தில் ஒரு காலத்தில் இலத்தீன் (The Latin Language) மொழியிலேதான் அனைத்து வகையான பூசைகளும் நடந்தன. அந்த மதத்திற்குரிய அடிப்படையான, உயிர்நாடியான மூல வேத நூலான விவிலியம் (The Bible) இலத்தீன் மொழியில்தான் இருந்தது. மத குருமார்களாகப் பணிபுரியும் பாதிரியார்களும், மதத்தைப் புரிந்து கொள்ளவும் அல்லது மதத்தின் சடங்குகளையும், பூசைகளையும் செய்து சத்தியும் சித்தியும் பெற விரும்புகிறவர்களும் கட்டாயமாக இலத்தீன் மொழியைக் கற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும். இந்த இலத்தீன் மொழிதான் அருளுலக ஆட்சிமொழி' 'பூசைமொழி', 'தவமொழி', 'தெய்வமொழி.'' 'தேவமொழி',... என்று நம்பப்பட்டது. இந்த இலத்தீன் மொழி-யைத் தவிர வேறு எந்த மொழியும் கடவுள் அருளைத் தெய்வீக சத்தியைப் பெற்றுத்தராது; பெற்றுத்தர முடியாது. இந்த இலத்தீன் மொழிக்கு எதிராக அல்லது மாறாக அல்லது வேறாகச் சிந்திப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் மதவிரோதி-களாவார்கள்; நாத்திகராவார்கள்; கடவுள் மறுப்பாளர்களாவார்கள்; மிகப் பெரிய பாவிகளாவார்கள்; தேவ தண்டனைக்குரியவராவார்கள்... என்ற கருத்து கிருத்துவ மதத்தில் மிகத் தெளிவான ஆணித்தரமான கருத்தாக இருந்தது. எனவே, ஐரோப்பா கண்டத்தில் வாழ்ந்த தாய்மொழிப் பற்றாளர்கள்; தங்களுடைய தாய் மொழியிலேயே தங்களுடைய மத வேத நூலான விவிலியத்தைப் படிக்கவும், பூசைகளைச் செய்யவும், மதச் சடங்குகளைச் செய்யவும் மாறாத வேட்கையோடு ஏங்கித் தவித்தார்கள். அவர்களின் ஏக்கங்களை மதத் தலைமைப் பீடமும், மத குருமார்களும்; இலத்தீன்மொழி வெறியர்-களும் தவறானதாக, மிகப்பெரிய ஆபத்துக்குரியதாக, கொடிய நோயினும் அஞ்சத்

**மேலைய நாட்டில் தாய்மொழிப் பற்று.**

தக்கதாக, மன்னிக்க முடியாத மாபெரும் குற்றமாக,... நினைத்தார்கள்! நினைத்தார் கள்! நினைத்தார்கள்! இதனால், கிருத்துவ மதவாதிகளும், மதத் தலைவர்களும்; தாய் மொழிப் பற்றென்பது மத விரோதமான உணர்வு என்றும் மதத் துரோகமான உணர்வு என்றும், மன்னிக்க முடியாத மாபெரும் குற்ற உணர்வு என்றும் கருதினர் -கள். இம்மட்டின்றி, தாய் மொழிப் பற்றென்பது தேவையற்றது, பயனற்றது, வெறுமையானது. மத வறுமையைத் தரக் கூடியாது, மத ஒற்றுமைக்கும், ஒருமைப் பாட்டிற்கும் எதிரானது. எனவே, மத நம்பிக்கையுள்ள யாரும் தாய்மொழிப்பற்றை வளர்க்கக் கூடாது. தாய் மொழிப்பற்றோடு வாழ்பவர்கள் மத வலிமையை நலிவடையச் செய்பவர்களாவார்கள். இந்தத் தாய்மொழி வெறியர்களால் மதத்தின் வளவளர்ச்சி குன்றும். குறையும்; மதத்தின் பொலிவு மங்கும், மறையும்; மதத்தின் செல்வாக்கும் ஆட்சி நிலையும் பாதிப்பிற்கு உள்ளாகும். எனவே, அனைவரும் தாய்மொழிப்பித்து என்ற பைத்தியக்காரத்தனத்தை, வெறியை, கொடியநோயை... ..எப்பாடுபட்டாவது தடுத்தேயாக வேண்டும்; காலப் போக்கில் முற்றிலும் அகற்றியேயாக வேண்டும் என்ற கருத்தோட்டத்தைப் படாத பாடுபட்டுப் பரப்பினார்கள். இந்தக் கருத்தின் வளர்ச்சிக்காக அருளுலக மொழியாக ஆட்சி புரிந்த இலத்தீன் மொழியைப் பொருளுலக ஆட்சி மொழியாக்குவதற்குரிய முயற்சியாக்கினார்கள், எனவே, தாய் மொழிப் பற்றாளர்கள் மத நிறுவனத்தின் மீதும் நிர்வாகத்தின் மீதும் கசப்புணர்ச்சியை வளர்த்துக் கொள்ள நேரிட்டது. அந்தக் கசப்புணர்ச்சி எரிமலையாக வெடித்தது. அதன் பயனாக, 12 ஆம் நூற்றாண்டில் பீட்டர் வால்டோ (Peter waldo) என்ற ஒரு பெருஞ் செல்வர் முதன் முதலில் விவிலிய நூலை பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்த மொழி பெயர்ப்பு காட்டுத்தீ போல் எங்கும் பரவியது. அது கண்டு கிருத்துவ மதத்தலைவர்கள் பயந் -தார்கள் பிரெஞ்சு மொழிப் பற்றினால் மதத்தின் ஆட்சிமொழியாக இருந்த இலத்தீன் மொழிக்கு ஆபத்து வந்ததென்றும்; அந்த ஆபத்து விரைவில் மதத்திற்கு வந்து விடும் என்றும்; அச்சப்பட்டார்கள். அதனால் மதகுருமார்களும், மதத்தலைவர்களும், மதவாதிகளும், ''மதத்தின் ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டிற்காகவும் மத உலகில் ஒரேஒரு மொழிதான் ஆட்சிமொழியாக இருக்க வேண்டும் என்றும்; அதாவது; மதத்துறையில் ஒரேஒரு மொழி ஆட்சிமொழியாக இருந்தால்தான் மதத்துறையில் ஒற்றுமையும், பற்றும், பாசமும், சமத்துவமும், சகோதரத்தத்துவமும் விளைந்திடும்! விளைந்திடும்! விளைந்திடும்! என்றும்,'' ஒரே குரலில் கூக்குரலிட்டார் கள். இதனால் தாய் மொழிப்பற்றுடையவர்களுக்கும், மதப்பற்றுடையவர்களுக்கு மிடையில் நேரடியான போராட்டங்களும், போர்களும் உண்டாயின அதாவது, மதவாதிகள் அனைவரும் ஒருமித்த கருத்தில், வெறிகொண்ட நிலையில்; ''தாய் மொழிப்பற்றாளர்கள் அனைவரும் மதத்துரோகிகளாவார்கள், விரோதிகளாவார்கள், மாபெரும் துரோகிகளாவார்கள், கொடிய தண்டனைக்குரிய குற்றவாளிகளா -வார்கள் ......'' என்ற கருத்துடையவர்களாகச் செயல்பட்டார்கள். இதனால், மதவாதிகள் தாய் மொழிப்பற்றாளர்களை தங்களுடைய பகைவர்களாகவே நினைத்து வெறுத்து ஒதுக்கினார்கள்.

இப்படித் தாய்மொழிப் பற்றென்பது மத வளர்ச்சியையும், வலிமைமிகு ஆட்சியையும், பற்றுமிகு ஒற்றுமையையும், பத்திமிகு ஒருமைப்பாட்டையும் குலைத்துச்சிதைத்துச் சீரழித்துவிடும் என்ற அச்ச உணர்வு எரிமலை என வெடித்து

நெருப்புக் குழம்பை ஆறாக ஓடவிட்டுக் கொண்டிருந்தது. எண்ணற்ற அப்பாவி மக்கள் ஏமாளித்தனமாகவும், கோமாளித்தனமாகவும் தங்களுடைய தாய்மொழியை வெறுக்கவும், மறுக்கவும் தொடங்கினார்கள். இவர்கள், தாங்களே தங்களுடைய தாய்மொழிக்குத் துரோகிகளாகவும், விரோதிகளாகவும் மாறினார்கள். அதன் பயனாக இலத்தீன் மொழிக்கு வெறிபிடித்த அடிமைகளானார்கள்; இலத்தீன் மொழியைப் பரப்புவதற்காக போர்க் கொடி தூக்கினார்கள்; 'இலத்தீன் மொழியை மறுப்பவர்கள் மதத்துறையில் இருக்கத் தேவையில்லை' என்ற அறிவிப்பை விடுக்கலானார்கள். இப்படி ஐரோப்பா கண்டத்தில் மத ஒற்றுமைக்காவும், ஒருமைப் பாட்டிற்காகவும் தாய்மொழித் துரோகிகளும், விரோதிகளும் புற்றீசல்கள் போல் வெளிப்படலானார்கள். அது மட்டுமல்ல; மதவெறி பிடித்தவர்கள் எல்லோரும் இலத்தீன் மொழியின் அடிமைகளாகவும் கங்காணிகளாகவும், காவடிகளாகவும், பாதுகை ஏந்திகளாகவும், பாதுகாவலர்களாகவும் மாறினார்கள், மாறினார்கள், மாறினார்கள். இதன் விளைவாக ''இலத்தீன் மொழி படிப்பதே மெய்யான மத வாழ்வு''; 'இலத்தீன் மொழிக்குத் தொண்டு செய்வதே மெய்யான மதத் தொண்டு; இலத்தீன் மொழியை விரும்புவதே, இறையனைத் தரும்'; இலத்தீன் மொழியே மதத்தின் உயிர்';...... என்ற கருத்துக்கள் பிறந்தன. ஆனால் 'தாய்மொழி வழியாகத் தான் இன உணர்வும், நாட்டுணர்வும் முளைத்துக் கிளைத்துச் செழித்து வளர்கின்றன'; தாய்மொழி உணர்வில்லாத மனிதன் விழி-யில்லாத மனிதனாவான்'; 'தாய்மொழிக்குத் துரோகம் செய்பவன் எந்த இழிந்த செயலையும் செய்யக் கூடிய நீச்சப்பிறவியாவான்'; 'தாய் மொழியைத் துறந்து மறந்து திரிபவன் கொடிய விலங்கினும் கொடியவன்'; தாய்மொழியை விட்டுக் கொடுப்பவன் துட்டுக்காகத் தாயையும் தாரத்தையும் விலைக்கு விற்பவனை விடக் கேவலமானவன்'; 'தாய்மொழிக்காகப் போராடாதவன் கோழையினும் கேடு கெட்டக் கோழையாவான்'; 'தாய் மொழி வழியாக வாழாதவன் அனாதையினும் கேடுகெட்ட அனாதையாவான்'; தாய்மொழிக்காக வாழுகிறவனே உய்வும் உயர்வும் பெறுபவன்'; 'தாய்மொழியறிவே தூய்மையும், வாய்மையும், தெய்வீகத் தன்மையும் வழங்கும்'; 'தாய் மொழிப் புலமை இல்லாதவன் நோயுற்ற நொண்டியாவான்;'... என்பன போன்ற கருத்து வாசகங்கள் போர் ஆயுதங்களாகப் பயன்பட்டன. இந்த ஆயுதப் போரில் ஐரோப்பா கண்டத்து தாய் மொழி பற்றாளர்களே வெற்றி பெற்றார்கள்! வெற்றி பெற்றார்கள்! வெற்றி பெற்றார்கள்! இதனால், 'தாய் மொழியை மதிக்கத் தெரிந்தவனுக்கே தன்னையீன்ற தாயையும் மதிக்கத் தெரியும்'; 'தாய் மொழி உணர்வுள்ளவனுக்கே மனிதப்பண்பிருக்கும்'; தாய் மொழிப் பாசமில்லாதவனிடம் அன்புணர்வே இருக்காது'; 'தாய்மொழிக்காக வாழாதவன்வாழ்க்கைப் பேய் வாழ்க்கை'; தாய் மொழியைக் காட்டிக் கூட்டிக் கொடுத்து வாழ்பவனை விட காட்டு மிராண்டி வேறு யாருமிலலை'; தாய்மொழியை நினைக்காதவனை விட மானங்கெட்ட-வன் வேறு யாருமில்லை'; 'தாய் மொழிக்காகப் போராடாதவன் வாழ்க்கை பயனற்ற வாழ்க்கையே'; 'தாய்மொழியைப் போற்றிப் பேணாதவனைவிடக் கடைந்தெடுத்த அயோக்கியன் வேறு யாருமில்லை'; 'தாய்மொழித் துரோகியாக வாழ்பவனை விடப் பெரிய சமூக நல விரோதி வேறு யாருமில்லை;'......என்பன போன்ற கருத்து வாசகங்-கள் வெற்றி விழா முழக்கங்களாக வெளிவந்தன. இவற்றின் விளைவாக, பதினன்-

காவது நூற்றாண்டில் ஆக்சுபோர்டு பல்கலைகழகத்தில் (Oxford vniversity) பேராசிரியராக இருந்த சான்வைக்கிலிப்பு (John Wycliff) என்பவர் முதன்முதல் கிருத்துவமதத்தின் வேதநூலான விவிலியத்தைத் தொன்றுதொட்டு வந்த இலத்தீன் மொழியிலிருந்து ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து இங்கிலாந்திலும், செர்மனியிலும், பொகிமியாவிலும் பரப்பினார் இந்த மொழி பெயர்ப்பைப் பொதுமக்கள் கேட்கக் கூடாது என்று மதகுருமார்களும், மதத் தலைவர்களும். மதவாதிகளும் அறிவிப்புக்கு மேல் அறிவிப்பு வெளியிட்டுக் கொண்டேயிருந்தார்கள். இந்தக் கண்மூடித்தனமான மத வெறியர்களுக்கு முன்னால் உண்மையான தாய்மொழிப் பற்று அடங்கி ஒடுங்கிப் போய்விடவில்லை, மக்கள் கூட்டம் கூட்டமாகத் தெருக்களில் கூடி நின்று பேராசிரியர் சான் வைக்கிலிப்பின் விவிலியத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பைப் படிக்கச் சொல்லி கேட்கலானார்கள். அப்பொழுது. மத வெறியர்களின் வற்புறுத்தலினால் அரசாங்கம் தனது காவலர்களை அனுப்பி தெருக்களில் கூடிடும் மேற்படிக் கூட்டத்தைச் சாட்டையால் அடித்து கலைந்து செல்லுமாறு ஆணையிட்டார்கள் ஆனால், தாய் மொழியின் மீது பற்றும், பாசமும் அளவுக்கு மேல் வைத்திருந்த மக்கள் சவுக்கடி பட்டுக் கொண்டே ஆங்கில மொழியிலிருந்த விவிலியத்தைத் தெருக்களில் நின்று உரக்கப் படித்தும். படிக்கக் கேட்டும் மகிழ்ந்தார்கள். இப்படித் தாய்மொழிக்காக அமைதி வழியில் புரட்சி செய்து தெருக்களில் நின்று சவுக்கடி பட்ட மக்களின் வீர வரலாறு உலக வரலாற்றில் நிலையான இடத்தைப் பெற்றது. அதாவது, தாய்மொழிக்காகச் சவுக்கடிபட்டுக் குருதி கொட்டத் தயாராக இருப்பவர்கள் தான் தூய்மையானவர்கள், வாய்மையானவர்கள். தாய் நாட்டுப் பற்று மிக்கவர்கள், உண்மையான மனித பண்புடையவர்கள், -என்ற உண்மை சவுக்கடி பட்ட மக்களின் உடலிலிருந்து கசிந்து சிந்திய குருதியால் எழுதப்பட்டது! எழுதப் பட்டது! எழுதப்பட்டது! இதுகண்டுதான், உலகெங்கும் உள்ள மக்கள் விழிச்சி பெற்று, எழிச்சி பெற்றுத் தங்கள் தங்களின் தாய்மொழியின் வாயிலாகவே அனைத்து வகையான நிகழ்ச்சிகளும், ஆட்சிகளும் நிகழ்ந்தேர வேண்டும் என்று போராடத் துவங்கினார்கள். இதே நிலை தான் இன்று இந்தியத்துணைக் கண்டத்திலிருந்து வருகிறது.

### அன்றைய இலத்தீன் எதிர்ப்பும், இன்றைய இந்தி எதிர்ப்பும்.

வரலாற்றில் என்றைக்குமே 'இந்தியா' என்ற ஒரு நாடு எதிர்பாராமல் உருவாகிவிட்ட காரணத்தை எவருமே எண்ணிப்பார்க்கத் தயாராய் இல்லை, ஏதாவது நூற்றுக்கணக்கான மொழிகள் பேசுகின்ற பல்வேறு வகையான பண்பாடுகளையுடைய மக்களையெல்லாம் இந்திய நாடு என்ற பெயரால் ஒருமைப்படுத்த முயலும்; வெறி நிறைந்த, கண் மூடித்தனமான, காட்டுமிராண்டித்தனமான. பைத்தியக்காரத் தனமான. முயற்சி நடைபெற்று வருகிறது இந்த முயற்சியால் இரண்டு பெரிய செயல் திட்டங்கள் ஒன்றுக்கொன்று கெடுதல் செய்யும் வண்ணம்; அதாவது, ஒன்றை ஒன்றை எதிர்த்து அழிக்கும் வண்ணம் அமைந்திருக்கின்றன. அதாவது. எதிர்பாராமல் உருவான இந்தியா. ஒரே நாடாக என்றென்றும் இருக்கலாம். அது தவறில்லை; ஏனெனில், நூற்றுக்கணக்கான மொழிகளைப் பேசக் கூடிய பல்வேறு இன மக்கள் ஒற்றுமையாக வாழ்ந்தால் தான் பல்லாயிரக்கணக்கான சதுர மைல் பரப்புள்ள இந்திய நாட்டை ஒரு வளமிக்க, ஒரு வலிமை மிக்க, பாதுகாப்பு மிக்கத்

தனிநாடாக வாழச் செய்ய முடியும். ஆனால், இந்தி மொழி பேசும் இனத்தவரைத் தவிர மற்ற மொழி பேசும் இனத்தவரெல்லாம் தங்களுடைய தாய் மொழியை மறந்தும் துறந்தும், மறுத்தும் வெறுத்தும், முடிந்தால் கொலை செய்துப் புதைத்தும், மாபெரும் தியாகம் செய்தும் இந்தி மொழியைக் கற்றுக் கொள்ள வேண்டும். அதாவது, நூற்றுக்கணக்கான மொழியினர்கள், தங்கள் தங்களுடைய தாய்மொழிக்கு விரோதிகளாகவும், துரோகிகளாகவும், கொலைகாரர்களாகவும் மாறவேண்டும். இன்னும் சொல்லப் போனால், 'இந்தி மொழிக்காரர்கள் தங்களுடைய இந்திமொழி -யின் மூலம் மற்ற எல்லா மொழிகளையும் சிறுகச்சிறுகக் கழுத்தை நெரித்துக்கொன்று புதைப்பதற்கு இந்திய நாட்டு மற்ற மொழிக்காரர்கள் அனைவரும் உதவி செய்ய வேண்டும், உதவி செய்ய வேண்டும், உதவி செய்ய வேண்டும்', என்ற கொள்கையை -யே இந்திய தேசியவாதிகள் அல்லது அகில இந்திய அரசியல்வாதிகள் விளக்கு -கிறார்கள், வலியுறுத்துகிறார்கள். அதாவது, புதிதாக உருவாகியுள்ள இந்தியநாடு என்ற அமைப்புச் சிதைந்து விடாமல் இருக்க வேண்டுமேயானால் இந்தியா முழுவதும் இந்தி என்ற ஒரே மொழி தான் பேசப்பட வேண்டும் என்பது தான் அகில இந்திய அரசியல்வாதிகளின் கண்மூடித்தனமான காட்டுமிராண்டிக் கொள்கை. இப்படி. இந்திய நாட்டை இந்தி என்ற மொழியின் மூலம் ஒருமைப்பாடு (Uniformity) பெறச் செய்யும் முயற்சிதான், இந்தியாவின் ஒற்றுமையை (The Unity) ச் சுக்கல் நூறாக உடைத்தெறியப் போகிறது.

அதவாது, இந்திய மக்களிடையிலே ஒற்றுமையை வளர்க்க வேண்டுமென்ற நேர்மையான தத்துவம்; இந்தியாவில் இந்தி மொழியின் மூலம் ஒருமைப்பாட்டை உருவாக்க வேண்டுமென்ற தவறான, தீமையான, பகுத்தறிவற்ற கொள்கையால் மாபெரும் தோல்வியைப் பெறப்போகிறது. ஏனெனில், அரசியல் மாயைகளும், வெறிகளும் காலப்போக்கில் கணிசமான அளவு தணிந்திடும். அப்பொழுது, நூற்றுக் கணக்கான மொழிகளுக்குரிய மக்கள், அகில இந்திய அரசியல்வாதிகளால் தங்கள் தங்களுடைய தாய்மொழி எப்படி எப்படியெல்லாம் வீழ்ச்சியுற்றது?!; என்னென்ன வகைகளில் தாழ்ச்சி பெற்றது?!; எந்தெந்த நிலைகளில் அடக்கி ஒடுக்கப்பட்டது?!; எத்தகைய பெரிய உரிமை இழப்புகளைப் பெற்றது?!......என்றெல்லாம் கணக்குப் போட்டுப்பார்க்க ஆரம்பிப்பார்கள். அந்தக் கணக்கிற்குக் கிடைக்கக் கூடிய விடை -யால், தாய்மொழிப்பற்று எனும் நெருப்பு; அகில இந்திய அரசியல் மாயை அல்லது மயக்கம் என்ற சாம்பல் குவியல்களுக்கு அடியிலிருந்து புகைந்து கனிய வாரம்பித்திடும். அப்பொழுது, அந்தந்த மொழிக்காரர்களின்இனத்துக்கு ஏற்பட்டிட்ட கடுமைகளும், கொடுமைகளும் எண்ணிப்பார்க்கப்பட்டுப் பெருமூச்சு சிறு காற்றாக வீசத் தொடங்கும். அதனால், சாம்பல் மேட்டிலுள்ள சாம்பல் தூள்கள் அடித்துச் செல்லப்பட்டுப் புகைந்து கனியவாரம்பித்த நெருப்பு நன்கு கனிந்து சுடர் விட ஆரம் -பிக்கும். அப்பொழுது, மீண்டும் அந்தந்த இனத்தவர்கள், தங்கள் தங்களின் வரலாற்றுப் பெருமைகளையும், பாரம்பரிய உரிமைகளையும், இலக்கியச் செல்வ வளங்களையும், இயற்கையின் செழுமைகளையும் எண்ணி எண்ணி எடுத்து எடுத்துப் பேசி வட்டார வெறிகளையும், பிரிவினை வாதங்களையும் சாம்பல் மேட்டில் கனிந்து கொண்டிருக்கும் நெருப்புக் கனல்களின் மீது நன்கு காய்ந்து உலர்ந்த குச்சிகளாகவும், சிறியசிறிய துண்டு விறகுக் கட்டைகளாகவும் அடுக்கிடுவார்கள். அதனால், கனிந்து சுடர்விட்டுக் கொண்டிருந்த நெருப்புத் துண்டுகள் மேற்படி விறகுக் கட்டைகளில் பற்றி விண்ணைத் தொடக் கூடிய காட்டுத்தீயாகச் சுடர்விட்டுச் சுழன்று சுழன்று எரிய

வாரம்பித்திடும். அந்தக் காட்டுத்தீயில் இந்தியா என்ற நாட்டமைப்பு என்னவாகும் என்றே சொல்ல முடியாது! சொல்ல முடியாது! சொல்ல முடியாது! அப்பொழுது அகில இந்திய தேசியவாதிகள் எனப்படுபவர்கள் 'தீப்பற்றி எரிகின்ற வீட்டிலிருந்து எடுக்கப்படும் பொருள்கள் தான் இலாபம்' என்ற உணர்வில் எரிகின்ற தீயை அணைக்கும் பணியில் ஈடுபடாமல் எரிந்து கொண்டிருக்கக் கூடிய வீட்டிலிருந்து பொருள்களை எடுத்துக் காப்பாற்றும் பணியில்தான் ஈடுபடுவார்கள். அதாவது, இந்த அகில இந்திய தேசியவாதிகள்; இந்தியா என்ற ஒரு நாடு இருந்ததில்லை என்பதையும், இனிமேல் அப்படியொரு நாடு இருக்கத் தேவையில்லை என்பதையும் எண்ணித் தாய்மொழிப் பற்றுள்ளர்கள் இந்திய நாட்டைத் துண்டாடுவதைத் தவிர்க்கவோ தடுக்கவோ முடியாதவர்களாகி விடுவார்கள். அதாவது, அந்தந்தத் தாய்மொழிப் பற்றுள்ளர்கள் தங்களுடைய தாய்மொழி அடிமைப்படுத்தப்பட்டு விட்டது; வளமிழந்து விட்டது!; இன ஒற்றுமைக்கும், ஒருமைப்பாட்டிற்கும், பற்றுக்கும், பாசத்திற்கும் பயன்படாமல் போய்விட்டது; அன்னிய மொழியின் உயர்ச்சியினால் அம்மொழிக்குரிய அன்னியர்களே உயர்ந்தவர்களாகவும், தலைவர்களாகவும் முதலாளிகளாகவும் என்றென்றும் விளங்கிடக் கூடிய மோசடியான நிலை விளைந்து விட்டது என்பதை நினைத்துக் கொதித்து எழுவார்கள். அப்பொழுது, எந்த அகில இந்திய தேசியவாதி இந்தியை ஆதரித்துப் பேசினாலும் அவர்கள் ஈவுஇரக்கமின்றி இப்புவிப்பரப்பிலிருந்தே அகற்றப்பட்டு விடுவார்கள், தாய்மொழி வெறியர்களால். இன்னும் சொல்லப் போனால், இந்தத் தாய்மொழி வெறியர்கள், ''தங்களுக்கிடையிலே தோன்றிய அகில இந்திய தேசியவாதிகள் என்கின்ற சுயநலவாதிகளால் செய்யப்பட்ட கொடிய துரோகச் செயல்களாலும், விரோதச் செயல்களாலும்தான்; தங்களுடைய மொழியும், மொழிவழியாக இனமும், இனத்துக்குரிய பண்பாடும், நாகரீகமும் நலிந்து மெலிந்து நோயுற்றுத் தேய்ந்து மாயும் நிலையுற்றன'', என்ற மிகத்தெளிவான கருத்துக்களால் கொலை வெறி பிடித்தவர்களாக மாறிவிடுவார்கள். இந்தத் தாய் மொழிப்பற்றுமிக்கக் கொலை வெறியர்கள்; தங்களுடைய இனத்துக்கும், மொழிக்கும் பண்பாட்டுக்கும், நாகரீகத்திற்கும் மீண்டும் உரிமையைப் பெற்றுத்தர!, பெருமையை விளைவித்துத்தர!, மறுமலர்ச்சியை உருவாக்கித்தர! தங்களிடையே உள்ள இந்தி மொழி ஆதரவாளர்களையும், அரசியலின் பெயரால் மொழிக்கும் இனத்துக்கும் துரோகிகளாய் வாழ்பவர்களையும், இந்திய நாட்டாச்சியை தங்களுக்கே உரிமையாக்கிக் கொண்ட இந்திக் காரர்களையும் குருதி ஆற்றில் மிதக்க விடுவார்கள்; அல்லது அறுதைப் பிணங்களாக ஆங்காங்கே குவித்துவிடுவார்கள்.

இதுவே, இந்திய நாட்டில் புரட்சியாக உருவெடுக்கும்; ஏனென்றால், இந்திய நாட்டில் அரசியல் தத்துவ அடிப்படையிலோ, அல்லது பொருளாதாரத் தத்துவ அடிப்படையிலோ, அல்லது வேற்று நாட்டார்களின் சூழ்ச்சியாலோ, புரட்சி உருவாகாது! உருவாகாது! உருவாகாது! இதைச் சற்றுப்

**தமிழ்த் தலைவர்களின் சுயநலப் போக்கு**

பச்சையாகவும், கொச்சையாகவும் சொல்ல வேண்டுமென்றால்; வேற்று நாட்டார்களாலோ, அல்லது அரசியல் அமைப்பில் மாற்றங்களை விளைவிக்கவேண்டும் என்ற எண்ணத்தாலோ; அல்லது பொருளாதாரத் துறையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சிகளையும், தாழ்ச்சிகளையும் சரி செய்ய வேண்டுமென்ற நோக்கத்தாலோ இந்தியாவில் புரட்சியை உருவாக்க முடியாது! உருவாக்க முடியாது! உருவாக்க முடியாது! அதாவது, இந்தியாவில் யாராலும் திட்டமிட்டுப்

புரட்சியை உருவாக்க முடியாது! முடியாது! முடியாது! முடியவே முடியாது! எனவேதான், 'இந்தியாவில் புரட்சி ஏன்? எப்பொழுது? எப்படி?' [Why? How? and When? The Revolution in India] என்று மூன்று பெரிய தொகுதிகளில் (in three volumes) விரிவான நூல் ஒன்று எழுத நேரிட்டது இந்த நூலை ஆங்கிலத்தில் தட்டெழுத்தில் பொறித்து (The Typed Scripts) இந்தியா முழுவதும் அனுப்ப நேரிட்டது; வெளிநாடு -களில் வாழும் இந்தியர்களுக்கும் அனுப்ப நேரிட்டது. காலஞ்சென்ற பாபு இராசேந்திர பிரசாத்து, பாதுகாப்பு அமைச்சர் பந்த், பொருளாதார அமைச்சர் சிந்தாமணி தேசுமுக்கு, கல்வி அமைச்சர் அபுல்கலாம் ஆசாத்து, பண்டிட் சவகர்லால் நேரு முதலான அரசியல் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டது. நாடெங்குமிருந்த பல மாநிலத் தலைவர்களுக்கும், சமுதாய. அரசியல் நிறுவனத்தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டது. ஆனால், ஒரு பயனும் விளையவில்லை. எனவே, இந்த ஆங்கில நூலின் தமிழ் மொழிபெயர்ப்பு ஐந்தாறு முறை அச்சிடப்பட்டுத் தமிழகத்து சமய சமுதாய அரசியல் தலைவர்களுக்கும், வெளிநாடுகளில் உள்ள தமிழர்களின் அமைப்புக் -களுக்கும் அனுப்பப்பட்டது. ஆனால், அனைத்து முயற்சிகளும் கடலில் போட்ட கல் போல் ஆகிவிட்டன. தமிழக மக்களில் பெரும்பாலானவர்கள்; எப்படியாவது தங்கள் தங்களின் வாழ்வியல் போராட்டங்களை அகில இந்திய அரசியல் கண்ணோட்டத்தில் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்ற பேராசையுடை -யவர்களாகவே இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், இந்தியா முழுவதும் பரவியுள்ள தமிழர்கள் அந்தந்த வட்டாரத்தின் மொழியையே தங்களின் புதிய தாய்மொழியாக ஏற்றுச் சகவாழ்வைத் தேடிச் சுகமாக வாழத் துடிதுடிக்கிறார்கள். எனவே தான், எந்த மாநிலத்திலுமே; ஏறத்தாழ, அங்கு வாழும் தமிழர்கள் அடிக்கடி ஒன்றுகூடிக் கலந்துபேசிப் பழகி ஒற்றுமையாக வாழுவதற்காக நிருவாக ஒழுங்கமைப்பையுடைய நிறுவனங்களைத் தோற்றுவிக்க -வேயில்லை. இந்தியாவில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கக் கூடிய தமிழ் மொழிச் சங்கங்களும், மன்றங்களும், கழகங்களும், சபைகளும் தமிழரல்லாத, தமிழினப் பகைவர்களான, தமிழ் மொழிக்கு எதிரிகளான பிருமணர்களின் கைகளிலே -யே இருக்கின்றன. இதைப் பச்சையாகவும், கொச்சையாகவும் சொல்ல வேண்டு மென்றால்; ஏறத்தாழ, இந்தியாவில் உள்ள எந்த மாநிலத்திலும் தமிழ் மொழிப் பற்றும், இனப்பற்றும் உள்ள உண்மையான தமிழர்கள் தங்களுடைய கூட்டு வாழ்வுக் -காக அல்லது ஒற்றுமை வாழ்விற்காக எந்தவொரு நிறுவனத்தையும் தோற்று விக்கவேயில்லை.

**தமிழ்த் தலைவர்களின் சுயநலப் போக்கு**

அதாவது, இந்தியா முழுவதும் வாழுகின்ற தமிழ் நாட்டுப் பிருமணர்கள்; தங்களுக்குள் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்த்துக் கொள்வதற்காக -வே தமிழ்மொழி, தமிழிசை, தமிழ்நாடகம்......முதலியவற்றின் பெயரால் தமிழ்ச் சங்கங்களைத் தோற்றுவித்திருக்கிறார்களே தவிர வேறொன்றும் இல்லை. இந்தப் பேருண்மை, ஏறத்தாழ, தமிழ் வாழ்க! என்று கூறுகின்ற அனைவருக்குமே தெரிந்-திருந்தும் கூட; தன்மான இனமான உணர்வுடைய சமய,சமுதாய, அரசியல், கலை, இலக்கியத்துறைத் தலைவர்களாக விளங்குகின்ற ஆயிரக்கணக்கான தமிழர்களில் யாருமே இந்தியாவில் உள்ள எல்லா மாநிலங்களிலும் தமிழ்ச் சங்கங்களைத் தோற்று வித்துத் தமிழர்களை ஒன்று திரட்டும் பணியினைச் செய்யவில்லை! செய்யவில்லை! செய்யவில்லை! செய்யவேயில்லை!. தமிழ் நாட்டில், முதலில், அனைத்து மாவட்டத்

தலைநகர்களிலும், வட்டத் தலைநகர்களிலும், வளர்ச்சியடைந்த பெரிய கிராமங்களிலும், தமிழ்ச்சங்கம் என்ற பெயரால் தமிழிசை. தமிழ் நாடகம், தமிழிலக்கியம் என்ற மூன்றுக்கும் வளர்ச்சிக்குரிய நிகழ்ச்சிகள் வாராவாரம் அல்லது மாதாமாதம் ஒன்றாவது நடக்கக்கூடிய நிறுவன நிர்வாகம் ஏற்பட வேண்டும்அதுதான்தமிழினத்தாழ்ச்சி நிலையைப்போக்கும் செயல்திட்டம். ஏனென்றால், தமிழகத்தில் உள்ள பெரும் பாலான தமிழர்கள், 'தமிழ்வாழ்க! என்ற முழக்கங்களை எழுப்புவதே தங்களுக்குக் கூட்டத்தையும், செல்வாக்கையும், பதவியையும், பணத்தையும், புகழையும் தேடிக் கொள்வதற்காகத்தானே தவிர; உண்மையிலேயே தமிழ்மொழிக்கும், இனத்துக்கும், நாட்டுக்கும் தொண்டாற்றுவதற்காக அல்ல! அல்ல! அல்ல! அல்லவே அல்ல! இவற்றையெல்லாம் எண்ணிப் பார்த்துத்தான், நான் எழுதிய **'இந்தியாவில் புரட்சிக்குப்பின்'** என்ற ஆங்கில நூலின் நான்கு தொகுதிகளையும் (After Revolution In India - in four volumes), தேர்ந்தெடுத்த நண்பர்களைத் தவிர மற்ற நண்பர்களுக்குத் தராமலும், அச்சிடாமலும் வைத்திருக்கிறேன். ஏனென்றால், நான், எத்தனை நூல்கள் எழுதி வெளியிட்டாலும், எத்தனையெத்தனை மேடைப்பேச்சுகளைப் பேசினாலும் **உடனடியாக** என் முனையளவு கூடப் பயன் கிடையாது. எனவே, இந்தியத் துணைக்கண்ட அளவிற்கு எனது சிந்தனைகளை விரிவாக்கிச் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கியத் தொழில் துறைகளைப் பற்றி விமர்சனங்களை வழங்கிச் செயல்படுவதை நிறுத்திக் கொண்டு விட்டேன். அதே நேரத்தில், வட இந்தியா, தென் இந்தியா என்ற இரண்டு பெரும் பிரிவுகள் இயற்கையாகப் பிரிக்கப்பட்டுக் கிடப்பது போல்; மக்களிடையில் பண்பாட்டிலும் நாகரீகத்திலும் வடக்கு, தெற்கு என்ற வேறுபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன இந்த வேறுபாட்டைத் தென்னிந்தியர்கள் உணர்ந்து எச்சரிக்கையடையா விட்டால்; மிக நெடுங்காலத்திற்குத் தென்னிந்தியர்கள் வட இந்தியர்களிடம் கொத்தடிமைகளாகவும், கூலிகளாகவும், கங்காணிகளாகவும், எடுபிடிகளாகவும், காவடிகளாகவும், பல்லக்குத் தூக்கிகளாகவும், பாதுகை ஏந்திகளாகவும், பல்லிளித்துக் கைகட்டிச் சேவகம் செய்திடத்தான் நேரிடும். இப்படி, இன்றைய தென்னிந்தியர்கள் விழிப்போடும், முன்னெச்சரிக்கையோடும், சுறுசுறுப்போடும் பொறுப்பாகச் செயல்படத் தவறித் தங்களுடைய வருங்காலச் சந்ததியார் அனைவரையும் அடிமைச் சேற்றிலும், அடிமைச் சிறையிலும், அடிமை இருளிலும் மாட்டி வைக்கப் போகிறார்கள் என்பதை எண்ணித்தான் வருந்துகிறேன். என்றாவது ஒரு நாள், தென் அமெரிக்காவிற்கும், வட அமெரிக்காவிற்கும் ஆயுதந்தாங்கி மக்களே மாபெரும் நேரடிப் போரை நிகழ்த்தி; அது. இராணுவப் போராகவே மாறியது போல் தென்னிந்தியாவிற்கும், வட இந்தியாவிற்கும் ஒரு மாபெரும் உள்நாட்டுப்போர் (The Civil war between the South India and the North India is inevitable that can alone solve the dominations, swindlings and the dictatorship of the Hindi-Speaking people over the other language peoples) நிகழ்ந்தே தீரும். அதுதான், இந்திக்காரர்களின் ஏதேச்சதிகாரத்தையும், சுரண்டலையும், சர்வாதிகாரத்தையும் தடுத்திடும். அதனால் தான், நான், தென்னிந்தியாவின் மூலவர்களான தமிழர்களைத் தட்டியெழுப்பியாவது தென்னிந்தியர்களின் வருங்காலம் இருண்டதாகவும், இன்னல்கள் நிறைந்ததாகவும், இடர்ப்பாடுகள் மிகுந்ததாகவும், இல்லாமையும் இயலாமையும் வளர்ந்ததாகவும் மாறப்போவதைத் தடுக்கும் வண்ணம் இந்தத் **'தமிழினத்**

**தமிழினத் தாழ்ச்சி நிலையைப் போக்கும் செயல் திட்டம்**

**வட இந்தியா, தென்னிந்தியா வேறுபாடு**

**தாழ்ச்சி தொடர்வது ஏன்?'** என்ற தலைப்பில் சில நூல்களும், கட்டுரைகளும் எழுதிக் குவிக்கின்றேன்...... ஆனால், **'இவை 'ஊமையன் கண்ட கனவாகவோ குருடன் கையில் கிடைத்த பெருநிதியாகவோ மாறினாலும் மாறலாம்'** என்ற அச்சத்தாலேயே எனது கட்டுரைகளுக்கு எண்ணற்ற நகல்கள் எடுத்துப் பலருக்கும் அனுப்பிவருகின்றேன்.......'' என்று இப்படி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் காலஞ்சென்ற இரண்டாவது தலைவர் சித்தர் காகபுசுண்டர், காக்கையார் ம. பழனிச்சாமி பிள்ளையவர்கள் எழுதிச் சென்றுள்ளதை இங்கு குறிக்-கின்றோம். ஏனென்றால், இந்தத் **'தமிழினத் தாழ்ச்சி தொடர்வது ஏன்?** என்ற கட்டுரை; இன்றைய இளைஞர் சமுதாயத்திடையே புதிய சிந்தனைகளைத் தோற்று விக்கவேண்டும் என்பதற்காகவே வெளியிடப்படுகின்றது. இக் கட்டுரையை இ.ம.இ யின் மூத்த தலைவர்களும், இளைஞர்களும், அ.வி.தி செயல் வீரர்களும் ஒருங்கு கூடிப் பணியாற்றியே தயாரித்துள்ளனர். இந்த கட்டுரை, காலஞ்சென்றவர்களின் கருத்துக் கருவூலங்களிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்டக் கருத்துக்களின் தொகுதி யேயாகும்.

''உலக மார்க்சீய சிந்தனையாளர்களில் இரசியப்புரட்சித்தலைவர் லெனினுக்கும், சீனப்புரட்சித்தலைவர் மாசேதுங்குக்கும் அடுத்தபடியாக எண்ணப்பட்டு அறிஞர் பெரு மக்களால் போற்றிப் புகழ்ந்து பாராட்டப்படுபவரே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் இரண்டாவது தலைவராக வாழ்ந்த சித்தர் காகபுசுண்டர், காக்கையார் ம.பழனிச்சாமி பிள்ளையவர்கள். இவர். தமது வாழ்நாளின் பெரும் பகுதியை மார்க்சீய தத்துவ வித்துக்களை இந்திய மண்ணிலே விளைவிக்க முயன்று தோற்றவர். அதனால், இந்திய மண்ணில் மார்க்சீய வித்துக்கள் விளையாது;

**மார்க்சீயச் சிந்தனையும்**
**மகேசுவரச் சிந்தனையும்**

அப்படியே விளைந்தாலும் அது நல்ல பயனைத் தராது என்று மிகத்தெளிவாகத் தமது முடிவுகளை விளக்கியுரைத்திட்டார். அதனால், இவருக்கு உலக அளவிலும், இந்திய அளவிலும் மார்க்சீயவாதிகளின் வருத்தமும், பகையும் ஏற்பட்டிட்டது. எனவே, இவர் பொதுவாழ்விலிருந்து முழுமையாக விலகித் தன்-னைத் தனிமைப்படுத்திக் கொண்டிட்டார். அதன் பிறகு, தமது மகனை பன்னிர-ண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் அருளுலகப்பயிற்சிகளிலும், முயற்சி-களிலும் பெரும் பங்கு பெற்றிட்டார். இவற்றின் விளைவாகவே, நாத்திகராக இருந்த இவர் ஆத்திகராக மாறினார். எனவே, காரல்மார்க்சைப் பற்றிச் சிந்தித்த இவர் கடவுளைப்பற்றியும் சிந்திக்க வாரம்பித்தார்; சமுதாய உணர்ச்சிகளையும், அரசியல் உணர்ச்சிகளையும் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருந்த இவர் சமய உணர்ச்சிகளைப் பற்றி முழுமையாகச் சிந்திக்கவாரம்பித்தார். இதனால், சமுதாயச் சிந்தனைகளையும், அரசியல் சிந்தனைகளையும் உருவாக்கி வந்த இவர் சமயச் சிந்தனை-களை முறையாக உருவாக்கி 'மதமறுமலர்ச்சிச் சிந்தனைகள்' என்ற தலைப்பில் சில நூல்களும், பல கட்டுரைகளும், எண்ணற்ற அஞ்சல்களும் எழுதிக் குவித்தார். இவற்றை, இவருடைய நண்பர்களில் பெரும்பாலானவர்கள், வயதான காலத்தில் இவருக்கு ஏற்பட்ட மனமாற்றங்களாகவும், சிந்தைத் தடுமாற்றங்களாவும் கருதிட்-டார்கள். எனவே, இவருடைய கடைசிகாலச் சிந்தனைகளும், உணர்வுகளும் முன்புபோலவே பொதுமக்களைச் சென்றடையாமல் போய்விட்டன. இருந்தாலும், இவர், மனம் தளராமல் தன்னுடைய சிந்தனைகளுக்கும், உணர்வுகளுக்கும் வடிவும். வாழ்வும், பயனும் உருவாக்கிடும் பொறுப்பைத் தமது மகனை இந்துமதத்தந்தை,

ஞானாச்சாரியார், குவலய குருபீடம், அருளாட்சிநாயகம், அரசயோகி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, ஞாலகுரு சித்தர் கருவூரூரிடம் ஒப்படைத்தார். தமது கடைசிக் காலத்தில். அவர். மிகத் தெளிவாகத் தமது மகனிடம்,

**அருளுலகத் தலைமை**

''எந்தக் கருத்தையோ (idea), கொள்கையையோ (Policy and Principle), செய்தியையோ (Information and News)... தெரிவிப்பதென்றாலும் அதனைக் கூடுமானவரை காலக் கணக்கீட்டு அடிப்படையில் தான் (with a Chronological approach) வெளியிட வேண்டும்; அத்துடன் கூறப்படுவது எந்த நூலில் இருக்கிறது?, யார் சொல்லியது?, அல்லது யாரால் எந்தக் காலத்தில் சொல்லப்பட்டிருக்கிறது? என்று ஊகமான முறையிலாவது வெளியிடப்படல் வேண்டும்; புகழுக்கு ஆசைப்பட்டோ அல்லது அச்ச கூச்சங்களின் காரணமாகவோ ஒருவர் கூறிய கருத்தை இன்னொருவர் கூறியதாகவோ, அல்லது ஒரு நூலில் இருப்பதை இன்னொரு நூலில் இருப்பதாகவோ. அல்லது ஒரு காலத்தில் நிகழ்ந்ததை வேறொரு காலத்தில் நிகழ்ந்ததாகவோ கூறி விடக் கூடாது,'' என்ற எச்சரிக்கையையும் வழங்கினார். இவற்றிற்கெல்லாம் மேலாக, ''12-வது பதினெண் சித்தர் பீடாதிபதி தாம் வாழுகின்ற இந்த இருபதாம் நூற்றாண்டை நன்கு அறிந்தும், ஆராய்ந்தும், புரிந்தும், நிதானத்தோடும் பொறுப்பாகவும், பொறுமையாகவும் செயல்படவேண்டும்,''-என்று தெளிவாக ஆணையிட்டுச் சென்றுள்ளார். அதாவது, ''ஞானாச்சாரியார், அருளாட்சி நாயகம், இந்துமதத்தந்தை ......என்ற மிகப் பெரிய பொறுப்புக்களில் உள்ள பீடாதிபதி; எதையும் விரைந்து விரிந்து செய்ய வேண்டுமென்றோ! அல்லது தானே தமது காலத்தில் முடித்து விட வேண்டுமென்றோ! வெறியோடோ, வேகத்தோடோ செயல்பட்டுவிடக் கூடாது. ஏனெனில், கடந்த 2000 ஆண்டுகளுக்குள் தோன்றிய இரண்டு பீடாதிபதிகள் ஒவ்வொருவரும் இருநூற்றாண்டுகளுக்கு மேல் வாழ்ந்து செயல்பட்டும் கூட தமிழ்மொழியையோ தமிழினத்தையோ, தமிழ் நாட்டையோ உணர்ச்சிப்பூர்வமான

**12 வது பதினெண் சித்தர் பீடாதிபதியின் செயல் நிலையும் தமிழர் நிலையும்**

விழிச்சியும் எழிச்சியும் பெற்றுச் செழிச்சியடையுமாறு செய்ய முடியவில்லை, எனவே, புத்தர், மகாவீரர் போன்றவர்கள் ஞானத்தையும் அருளையும் தேடியலைந்தது போல் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி பாரம்பரியமாகத் தமக்குக் கிடைத்துள்ள ஞானத்தையும், அருளையும் இன்றுள்ள மக்களுக்கு எப்படி வழங்குவது என்பதைப்பற்றி ஆராய. ஆராய்ந்து அலைந்து திரிந்தாக வேண்டும். இதற்காக, சிறுதுரும்பு புயலிடையே அகப்பட்டது போலவும். கடலின் பேரலைகளிடையே அகப்பட்டது போலவும் அலைந்து திரிந்துதான் ஒரு நிலைப்பட முடியும். இதனை எண்ணிப் பாராமல்; இவர், அவசரப்பட்டு எதனையும் செய்து விடக் கூடாது.'' என்று மிகமிகத் தெளிவாகக் கூறிச் சென்றுள்ளார். எனவேதான், இன்றைய பீடாதிபதி இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் செயல் வீரர்கள் மூலமே அனைத்து வகையான வெளியீடுகளையும் செய்து வருகிறார். ஏறத்தாழ, பெரும்பாலானவற்றைக் கையெழுத்துப் பிறதிகளாகவே நூறு, இருநூறு என்று தயாரித்துத் தமிழ் உணர்வுள்ளவர்களுக்கிடையில் உலாவரச் செய்து வருகிறார். மக்கள், பெரும்பாலும். பிருமணீய முறைப் பூசைகளையும், சமசுக்கிருத மொழிப் பற்றையும், பிருமண ஆச்சாரியர்களின் அறிவுரையையும், பிருமணச் சாத்திரிகளின் சடங்குகளையுமே பெரிதும் விரும்பி ஏற்றுப் போற்றி வருகிறார்கள் என்பதால்;

பீடாதிபதியே நேரடியாக மதமறுமலர்ச்சிப் பணிகளில் ஈடுபடவில்லை. அதாவது, அருளை அநுபவப் பொருளாக வழங்கவல்ல ஆயிரமாயிரம் சித்தரடியான்கள், சித்தரடியாள்கள், சித்தரடியார்கள், விருப்பாளர்கள், ஆதரவாளர்கள், ஏந்தாளர்கள் ........ என்று பலவகையினர்களை உருவாக்கி; இவர்களின் மூலமே பொதுமக்களைச் சந்தித்து மதமறுமலர்ச்சிப் பணிகளைச் செய்துவருகிறார். அதாவது, மக்களிடையில் தமிழ் உணர்ச்சி பற்றியோ, தமிழ் உரிமை பற்றியோ, தமிழ்ப்பெருமை பற்றியோ, தமிழ்ப் பண்பாடு பற்றியோ...ஏறத்தாழ, எந்தவிதமான அக்கறையுமே இல்லைஎன்று கூறத்தக்க நிலைதான் இன்றைய நிலையில் இருக்கிறது. இதற்கிடையில், எப்படியாவது தமிழ் நாட்டில் தங்களுடைய ஆதிக்கங்களை நிலைநாட்டிக் கொள்ள வேண்டுமென்று ஆங்கிலமும் இந்தியும் கடுமையான ஆக்கிரமிப்புப் போரில் ஈடுபட்டுள்ளன. தமிழர்-களில் பெரும்பாலானவர்கள் அரசியல் வாதிகளாக வாழுகின்ற காரணத்தினால் தங்கள் தங்களின் கட்சிகளின் வளர்ச்சிக்காக மட்டுமே தமிழ்மொழி இனம், நாடு, பண்பாடு முதலியனவற்றைப் பற்றி எண்ணிப் பார்ப்பவர்களாகவும், எடுத்துப் பேசி எழுதுபவர்களாகவுமே இருக்கிறார்கள். அதாவது, அவரவர் சுயலாபம் கருதியே தமிழ் மொழிக்காகவோ, இனத்துக்காகவோ, நாட்டுக்காகவோ, பண்பாட்டுக்காகவோ, குரலெழுப்புபவர்களாக மட்டுமே இருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஆபத்தான நிலையில், பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி; பத்தாவது, பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதிகள் போல் செயல்பட டிட்டால் சுயநலவெறியர்களின் துரோகங்-களாலும், விரோதங்களாலும் மிகப்பெரிய ஆபத்துக்கள் ஏற்பட்டிடும். அரசியல் நிலையிலும், சமுதாய நிலையிலும், சமய நிலையிலும் இந்திக்காரர்களுக்கும், சமசுக்கிருத மொழிக்காரர்களுக்கும் தமிழர்களிலேயே ஏராளமான அடிமைகளும், பத்தர்களும், கைக்கூலிகளும், கங்காணிகளும், அப்பாவி ஏமாளி ஆதரவாளர்களும், சுயநல வெறி பிடித்த பேராசைக்காரர்களும் இருக்கிறார்கள் என்கின்ற காரணத்தால்; தமிழ் மொழியின் வளர்ச்சியோ, ஆட்சிமீட்சியோ, தமிழ் இனவிடுதலையோ, இன உரிமையோ, இன ஒற்றுமையோ, இன ஒருமைப்பாடோ, சமய உணர்வோ, சமய விழிச்சியோ, அல்லது எழிச்சியோ அல்லது செழிச்சியோ அல்லது மறுமலர்ச்சியோ ........ ஏற்படுவது என்பது எளிதில் இயலாது! இயலாது! இயலாது! இயலவே இயலாது! இவற்றையெல்லாம் எண்ணித்தான் இமஇயின் இரண்டாவது தலைவ-ரான சித்தர் காக்கையார் எனப்படும் காகபுசுண்டர் ம பழனிச்சாமி பிள்ளை அவர்கள் எழுதிக் குவித்துச் சென்றுள்ள தொகுதிகளையும், தொகுத்து வைத்துச் சென்ற பழம் பெரும் தொகுதிகளையும் சிறுகச் சிறுக வெளியிடும் முயற்சியே இன்று நடைபெற்றுவருகிறது.

**அப்பாவித் தமிழரின் வீழ்ச்சியும் தாழ்ச்சியும்**

தமிழர்கள் தங்களுக்கே உரிய வரலாறுகளையும், இலக்கியங்களையும், சமயச் செல்வங்களையும், சமுதாயச் செல்வங்களையும், அரசியல் செல்வங்களையும் எளிதில் தங்களுடையவையல்ல என்று எண்ணவும், நம்பவும் பழகிப் போனவர்களாக இருக்கிறார்கள். இது, இந்த உலகிலேயே வேறு எந்த மனித இனத்தார்க்கும் இல்லாத அதிசயமான, ஆபத்தான பண்பாக இருக்கிறது. எனவே தான், நான்கு யுகங்களி-லும் மிகச் சிறந்த அகப்பண்பாட்டையும், புறநாகரி-கத்தையும் பெற்று இம்மண்ணில் தோன்றிய அனைத்து மனித இனங்களுக்கும் தாயாக, மூலமாக, முதலாவதாக, குருவாக, வழிகாட்டியாக, வழித்துணையாக, வழியாக, வழிப்பயனாக வாழ்ந்துவரும் தமிழர்கள்; இந்த நான்காவது யுகம் பிறந்து இரண்டாயிரம் ஆண்டுகள் கழித்தே இந்நாட்டிற்கு வந்த வடஆரியர்களைத் தங்க

-ளுக்கு வழியாகவும், வழிகாட்டியாகவும், வழித்துணையாகவும் கருதுபவர்களாக மாறிவிட்டார்கள். எனவேதான், இந்த அப்பாவி ஏமாளித் தமிழர்களை திருத்துவதோ. சீர்திருத்துவதோ இரண்டு பக்கமும் கூர்மையாக உள்ள பிடியில்லாத கத்தியைக் கையாளுவது போன்று மிகவும் எச்சரிக்கையாகவே சிரமப்பட்டுச் செய்ய வேண்டிய ஒன்றாகவே இருக்கிறது. மேலும் 'மிக எளிதில் யார் வேண்டுமானாலும் தமிழர்களுக்கு ஆச்சாரியார்களாகவும், தலைவர்களாகவும், சாத்திரிகளாகவும், கலைவாணர்களாகவும் மாறிட முடிகின்றது' என்பதை எண்ணும் போதுதான்; தமிழர்களைத் திருத்துவதும், சீர்திருத்துவதும் எளிதில் நிகழக்கூடிய ஒரு காரியமாக நம்ப முடியாமல் போய்விடுகின்றது. தமிழர்களுடைய இப்படிப்பட்ட ஏமாளித்தனமான, அப்பாவித்தனமான பண்பு நலன்களைப் பயன்படுத்திக் கொண்டுதான்; பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் மிகவும் திறமையாக நன்கு திட்டமிட்டுத் தமிழர்களுடைய கடவுள்கள் அனைவரையும் தங்களுடைய கடவுள்களாக ஆக்கிக் கொண்டார்கள்; தமிழர்களுடைய புராண இதிகாசங்களையும், வரலாறுகளையும், சமய சமுதாய அரசியல் மூலங்களையும், நாகரீகப் பண்பாட்டுப் பாரம்பரியக் கூறுபாடுகளையும் தங்களுடைய வேத மதத்தோடும் சமசுக்கிருத மொழியோடும் இரண்டறக் கலக்குப்படிச் செய்து விட்டார்கள் இவற்றிற்கெல்லாம் மேலாக, இந்திய நாட்டிற்குள் கைபர், போலன் கணவாய்களின் வழியாக கோலும் குடுவையுமாகக் குடுமியோடும், கோவணத்தோடும் ஆடுமாடு மேய்த்து வந்த வட ஆரியர்கள்; 'தங்களுடைய மொழிதான் உலக முதல் மொழி -யான தமிழ்மொழிக்கே மூலமானதென்ற கருத்தைப் பரப்பி அதை நம்பும்படிச் செய்து விட்டார்கள். இதனால் அவர்கள் 'தமிழிலக்கியங்கள் அனைத்திற்கும் பிருமணர்களின் சமசுக்கிருத மொழி இலக்கியங்களே மூலமாகவும் அடிப்படையாகவும் இருக்கின்றன' என்ற ஒரு மாயா வாதத்தைத் தோற்றுவித்து விட்டார்கள். இந்த மாயா வாதமே ஆரிய மாயை எனும் கொடிய நஞ்சு ஆகும்.

**பிருமணர்களின் சூழ்ச்சியின் வெற்றி**

இந்த நஞ்சு, தமிழர்களின் சமய, சமுதாய, அரசியல், கலை, இலக்கிய, தொழில் துறைகளில் இருந்த அனைத்து வகையான மூலக் கூறுபாடுகளையும் (The Original Sources) மங்கி மழுங்கித் தேய்ந்து இயக்கமும் வாழ்வுமற்றுப் போகுமாறு செய்து விட்டன. இவற்றால், பிருமணர்கள் நிரந்தரமாகத் தமிழர்களின் ஆச்சாரியார்களாக -வும், ஆசிரியர்களாகவும், தலைவர்களாகவும், சாத்திரிகளாகவும், கலைவாணர்களாக -வும் பொறுப்பேற்று விட்டார்கள், பொறுப்பேற்று விட்டார்கள், பொறுப்பேற்று விட்டார்கள். இந்த மாயாவலையிலிருந்து தமிழர்களை விடுவிப்பது என்பது எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!'' இம்மாபெரும் கருத்தினைத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூராரும் அவரது மகன் கருவூர்த்தேவரும், பேரன் திருமாளிகைத் தேவரும் கணக்கற்ற சான்றுகளைக் கொடுத்து விளக்குகின்றார்கள்.

**32வது ஆதிசங்கராச்சாரியார்**

காவிரியாற்றங்கரைக் கருவூராரின் திருமகன் கருவூர்த்தேவர் அவர்கள் தம்முடைய குருவாக்கு, குருவாக்கியம், குருவாசகம் என்பனவற்றின் மூலம் தெரிவிக்கின்ற வருத்தம் தோய்ந்த கருத்துக்கள்; தமிழர்களின் தாழ்ச்சி நிலை என்றென்றும் தொடர்ச்சி நிலையாகவே இருக்கும் என்ற பேருண்மையையே விளக்குகின்றன. இவர் தமது குருவாக்கில், 'தமது தந்தை காவிரியாற்றங்கரைக் கருவூரார்

அவர்கள் தாம் வளர்த்த விசயாலயனுக்கு முடிசூட்டிய பின் (கி.பி. 785) வெளிநாட்டுச் சுற்றுப்பயணம் செய்து ஆறு ஆண்டுகளுக்கு மேலாகித் தமிழகம் திரும்பியபோது சேர நாட்டில் 32 வது ஆதிசங்கராச்சாரியார் கருணீக்க சைவ வேளாளர் மரபில் தோன்றியிருப்பதை வானில் தோன்றிய புதிய விண்மீன் மூலம் அறிந்து நேரில் சென்று கண்டார். அவர் சீர்காழிச் சிவபாத இருதயர் மகனாகப் பிறந்த திருஞான சம்பந்தரின் மறு அவதாரமே என்று உணர்ந்தார். மேலும், அதே கருணீக்க சைவ வேளாளர் குலத்தில் இப்பொழுது தோன்றியிருப்பதால்; இந்த முறையாவது மனிதனுக்கு-குரிய நிறைந்த வயதான நூற்றிருபது ஆண்டுகள் வாழ்ந்து அருளுலக இருளகற்றும் பணியைச் செய்ய வேண்டும் அவர் என்று விரும்பினார். எனவே, சேர நாட்டுக் காலடியில் சிலகாலம் தங்கியிருந்து பலமுறை பாலகனாக இருந்த ஆதிசங்கராச்சாரி-யாரைச் சந்தித்து அவருடைய பழம்பிறப்பை உணர்த்தினார். அவர், திருத்தோன்ற-லாகக் குமரக்கடவுள் தோன்றியது போல் தேவகுமாரப் பதிலியாகத் தோன்றியிருந்த காரணத்தால் அவருடைய திருப்பணி பற்றி அவரையே கேட்டறிந்தார். அவர் திருஞான சம்பந்தராக இருந்து பதினாறு ஆண்டு காலம் தமிழால் மெய்யான இந்து மதத்தை வளர்த்த பணி நிறைவுறாமல் போனதால்; இந்து மதத்துக்குரிய இந்தியா முழுவதும் மதத் துறையில் இருள் பரப்பி இடர் செய்பவர்களைத் திருத்துவதற்காக மேலும் பதினாறு ஆண்டுகள் வாழ்ந்து பணியாற்றப் போவதாகத் தெரிவித்தார். அதாவது, 32 ஆண்டுகளுக்கு மேல் தன்னால் இம்மண்ணுலகில் வாழ இயலாது என்று உறுதியாகத் தெரிவித்தார். அது கேட்ட காவிரியாற்றங்கரைக் கருவூரார்; இந்தத் தேவகுமாரப் பதிலியைப் போலத்தான் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் வளர்த்த தேவகுமாரன் ஈசா; அவர் எவ்வளவோ கூறியும் 128 ஆண்டுகள் உயிர் வாழாமல் தன்னுடைய 32 வயதிற்குள் பணிகளை முடித்து நிறைந்தார்.

**32 வது ஆதிசங்கராச்சாரியார் திருஞான சம்பந்தரின் மறு அவதாரமே**

இப்பொழுது, தான் உருவாக்க நினைக்கும் இந்தத் தேவகுமாரப் பதிலியான 32 வது ஆதிசங்கராச்சாரியார்; தேவகுமாரன் ஆதிசிவன் மகன் முருகன் போலும், இசுரவேல் நாட்டு தேவகுமாரன் ஈசா போலும் 32 ஆண்டுகளே உலகியலில் உலா-வரப் போவதாகக் கூறுகிறான். இதனால் தேவர்களின் வருகையாலோ தேவகுமாரர்-களின் வருகையாலோ அருளுலக இருளகற்றும் பணிகள் முழுமையடையாமல் போகின்றன,' என்று மிகவும் வருந்தியதாகக் குறிப்பிடுகிறார். இதேபோல் குருவாசகத்தில் ''சித்தர்களின் மெய்யான இந்துமதம் தழைக்கத் தோன்றிய திருஞான சம்பந்தர் 16 ஆண்டுகளுக்குள் ஆற்றிய அரும்பெரும் பணிகளை அவருடைய மறு அவதாரமாகத் தோன்றிய 32 வது ஆதிசங்கரர், 32 ஆண்டுகள் வாழ்ந்தும்; தமிழி-லிருந்து பிராமணர்களுக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சமசுக்கிருத மொழியில் 32 ஆண்டுகள் செயல்பட்டும் முழுமையாகச் செய்ய முடியவில்லை. அதாவது, திருஞானசம்பந்தர் தமிழில் பல்லாயிரக் கணக்கான தேவாரப் பாடல்களைப் பாடித் தோத்தர, தோத்திர, தோத்திறக் கடலாகவும், சாத்திர, சாத்திற, சாத்தர மலையாகவும் நிலையான பணியினை ஆற்றினார் இந்தத் திருஞான சம்பந்தரைப் போல்; அவருடைய அவதாரமான ஆதிசங்கராச்சாரியார், சமசுக்கிருத மொழியில் முழுமையாக தோத்திர, தோத்திற, தோத்தரங்களையோ; சாத்திர, சாத்திற, சாத்தரங்களையோ உருவாக்கவில்லை. இது பற்றிக் காவிரியாற்றங்கரைக் கருவூரார்

**ஆதிசங்கராச்சாரியாரின் சமசுக்கிருதப் பணி**

அவர்கள் நேரில் பலமுறையும், கரூர் சந்தானத்தின் மூலமும் (சங்கராச்சாரியார் கூடவே வாழ்ந்த நான்கு அடியார்களுள் ஒருவர், தமிழர்) ஆதிசங்கராச்சாரி -யாருக்கு விளக்கமாக எடுத்துக் கூறித் தமிழில் உள்ள சாத்திர தோத்திரங்களைக் கூடுமான அளவு மிகுதியாகச் சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்க்குமாறு பரிந் துரைத்தார். ஆனால், அவரோ! பிறமண்ணினரான பிருமணர்களுக்கு சித்தர் நெறியான மெய்யான இந்து மதத்தின் தத்துவங்களைவிடச் செயல் சித்தாந்தங்களில் அடிப்படை -யாக இருப்பனவற்றை மட்டும் தெரிவித்தால் போதும் என்றே பதிலளித்தார். இதை, ஆதிசங்கராச்சாரியாரின் வாக்காகவே காவிரியாற்றங்கரைக் கருவூரரின் குருபாரம்பரியத்தில் ''.........தேவகுமாரனின் பதிலியாகத் தோன்றிய சீர்காழித் திருஞானசம்பந்தரின் மறு அவதாரமாகிய 32 வது ஆதிசங்கராச்சாரியார் பீடமாகத் தோன்றிய காலடி ஆதிசங்கரன்; ஆரிய மன்னன் பிரகதத்தனுக்கு சங்கப் புலவர் கபிலர் குறிஞ்சிப் பாட்டு ஒன்றே ஒன்று பாடி இந்து மதத்தின் இல்லற நெறியை விளக்கியுரைத்தது போல்; தான் விரும்பிய தோத்திரங்களையும், போற்றி அகவல்களை -யும், அருட்சினைச் சாத்திரங்களையும், சமசுக்கிருத மொழியில் மொழிபெயர்த்துக் காட்டினால் மட்டும் போதும்; அவற்றின் மூலம் பிருமணர்கள் சித்தர்களின் இந்து மதத்தை நன்கு புரிந்து செயல்பட்டு அருளை அநுபவப் பொருளாகப் பெற்று உய்வடைவார்கள்......'' என்று கூறியதாக மிகத் தெளிவாகக் குறிக்கப்படுகிறது. இதனால், 32 வது ஆதிசங்கராச்சாரியார் பீடமாகத் தோன்றிய காலடி ஆதிசங்கராச்சாரியார் தமிழிலிருந்த அனைத்து வகையான சித்தர்களின் இலக்கியங்களையும், எழுதாக்கிளவிகளையும் கற்றுத் தெரிந்தே தனது சமசுக் கிருதச் சாத்திர, தோத்திரங்களையும், போற்றிவாசகங்களையும் உருவாக்கிட்டார் என்பது தெளிவாகின்றது.

**11 வது பதினெண் சித்தர் பீடாதிபதியும் 32 வது ஆதிசங்கராச்சாரி யாராகிய காலடிச் சங்கரனும்**

கருவூர்த் தேவரின் குருபாரம்பரியத்தில், ''......எந்தை, தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரர் அவர்கள் மிகத் தெளிவாகவும், நேரடியாகவும் வானத்தில் ஒளிர்ந்த திருத்தோன்றல் பிறப்புக்குரிய விண்மீண் மூலம் ஆச்சாரி -யார் ஒருவர் பிறப்பெடுத்திருக்கிறார் என்பதைக் கண்டறிந்து தேடிச்சென்று, சேரநாட்டின் ஆலவாய்ப் புழை (இது ஆல்வாய்ப்புழை என்றும், பூர்ணா என்றும், சூர்ணா என்றும் பல பெயரால் குறிக்கப்படுவது மரபாய் இருக்கிறது) ஆற்றங்கரையில் ஆறு வயதுப் பாலகனை சங்கரனைக் கண்டுபிடித்தார்; அவனிடம், அவனே முப்பத்தி -ரண்டாவது ஆதி சங்கராச்சாரியாராக அருட் பிறப்பெடுத்திருக்கிறான் என்பதை அறிவித்தார். அவனுக்கு முறைப்படி அமாவாசை நாளிலும், மூன்றும் பிறை நாளிலும் முழுநிலவு நாளிலும் அருள் வழங்கி அனைத்து வகையான அத்திற, சாத்திற, சூத்திற தோத்திற, நேத்திற, வேத்திறங்களிலும், நேம, நியம, நிடத, நிட்டை, நீதிகளிலும், சுருதி ஆரண, ஆகம, மீமாம்சைகளிலும் அறிவு பெறுமாறு செய்தார். இந்தப் பயிற்சி இரண்டாண்டு காலத்துக்கு மேலே நேரடியாகவும், சித்தரடியான், சித்தரடியாள் சித்தடியார் மூலமும் ஆலவாய்ப்புழை ஆற்றங்கரைக் காலடி சங்கரனுக்கு வழங்கப் பட்டது அதன்பிறகு அவனுடைய அருட்பிறப்புக்கு ஏற்ப அவனுடைய பெயரை ஆதிசங்கரன, ஆதி சங்கராச்சாரியார் எனறு திருத்தம் செய்தார். இந்த ஆதிசங்கரன், தாய்ப்பாசத்திலிருந்தும், உலகியல் பந்த பாசங்களிலிருந்தும் விடுபடுவதற்காகத் தான்; முற்பிறவியில், சீர்காழித் திருஞானசம்பந்தராக அருட்பிறப்பெடுத்துப் பாடிய

தேவாரங்களைப் பயிற்சி செய்ய ஆரம்பித்தார். அப்படி அவர் உளமுருகித் தேனூறும் தேவாரப் பாடல்களை பாடிய காலத்தில் 'சிவபெருமான் நேரில் தோன்றி, நந்தி தேவனை முதலையாக அனுப்பித் தான்செய்யப்போகும் திருவிளையாடல் மூலம் ஆதி சங்கரன் உச்சிக்குடுமியனாக வெள்ளாடை மேனியனாக, தாந்தரீகச் சித்தியாளனாக, மாந்தரீக வல்லியாக எல்லா வல்லமைகளை மேலும், பெற்று ஞானசித்தராக, 32 வது ஆதிசங்கராச்சாரியாராக விளங்கிட அருளினார். மேலும், அவனதுவிருப்பம் போல்முற்பிறவியில் திருஞான சம்பந்தராக 16 ஆண்டு காலம் வாழ்ந்த அருள் வாழ்வு போல்; இருமடங்கு வாழ்வினைப் (16+16=32) பெறுவான் என்றும் வாழ்த்தினார்'. அதற்கு, சிவபெருமான், அவன், தான் ஆற்ற வேண்டிய பணிபற்றி வினவெழுப்பிய போது; ''பதினெண் சித்தர்களின் இந்துமதத்தில் இருளும், அறியாமையும், மடமையும், பயனில்லாச் சடங்குகளும் சமசுக்கிருத மொழியால் விளைந்துவிட்ட காரணத்தினால்; சித்தர்களும், நாயன்மார்களும், ஆழ்வார்களும் பல்வேறு வகைப்பட்ட சித்தியாளர்களும் தமிழ் மொழியில்வழங்கியுள்ள இந்து மதத்தின் சாரத்தைச் சமசுக்கிருத மொழியில் அருளிச் செயல்படுமாறு ஆணையிட்டார் சிவபெருமான்'' அதற்கு. 'ஆதிசங்கராச்சாரியார் தன்னை இறைவன் குறித்த காலத்தில் ஆட்கொள்ள வேண்டும் என்று வேண்டினார் இறைவனும் 32 ஆண்டுகள் திருக்கைலாயம் வந்து சேருமாறு ஆணையிட்டார்', இம். மாபெரும் சித்திச் செய்திகளைப் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார் உணர்ந்து; ஏழு

**இமயமலைச் சாரல் இருடிகளும் 32 வது ஆதிசங்கராச்சாரியாரும்**

இருடிகளை இமயமலைச் சாரலிலிருந்து வரவழைத்து ஆதிசங்கராச்சாரியாருக்குத் தேவையான அருளுலகப் பயிற்சிகளை வழங்குமாறு அனுப்பி வைத்தார். இந்த ஏழுபேர்களும் ஆதிசங்கராச்சாரியருக்கு அருவமாகவும், உருவமாகவும், அருவுருவமாகவும் இருந்து ஆரம்பம் முதல் இறுதி வரை குருமார்களாக விளங்கினார்கள். இவர்களே ஆதிசங்கராச்சாரி-யாருக்குச் சமசுக்கிருதத்தில் நிகரற்ற புலமையையும், தமிழில் உள்ள இந்துமத இலக்கியங்களில் அளப்பரிய ஆற்றலையும் உருவாக்கிக் கொடுத்தார்கள். இவற்றிற்-கெல்லாம் மேலாக; அவ்வப்பொழுது, இவர்களே அருவுருவாய் தோன்றி ஆதி சங்கராச்சாரியார் செல்லவேண்டிய இடங்களையும்,செய்யவேண்டிய பணிகளையும் பற்றி விளக்கியுரைத்தார்கள். இறுதியில் ஆதிசங்கராச்சாரியார் திருக்கைலாயத்திற்குச் செல்லும் போது; இவர்கள்தான், அவரோடு துணையாகச் சென்றார்கள். இந்த ஏழு (7) பேர்களும் ஆதிசங்கராச்சாரியாரை அறுபது(60) ஆண்டுகாலம் நிறை வாழ்வு வாழக்கேட்டுக் கொண்ட போது கூட; தான் அடுத்தடுத்து வரும் பிறப்புக்களில் ஒவ்வொரு பிறப்பிலும் 16 ஆண்டுகால வாழ்வை அதிகரித்துச் செயல்படப்போவதாக வழக்கம்போலத் தன் விருப்பப்படி அறிவித்தார். அதாவது, அடுத்துத் தோன்றக் கூடிய ஆதி சங்கராச்சாரியார்கள் 48, 64, 80, 96, 112, 128, 144...என்று வாழ்ந்து அருட்பணியாற்றப் போவதாகக் கூறினார். அதாவது, 48 பதினெண்சித்தர் பீடாதிபதி-களும் ஒருவர் பின் ஒருவராகத் தோன்றித்தான் வெவ்வேறு கால அளவு வாழ்ந்து அருட்பணியாற்றுகிறார்கள் என்பது போல்; ஆதிசங்கராச்சாரியார்களும், சங்கராச் சாரியார்களும் இந்த யுக முடிவு வரை தேவையான காலக்கட்டங்களில் தோன்றிச் செயல்படுவதுதான் அருளுலகிற்கு நலம் பயக்கும் என்று கூறினார். இந்த வாதத்தை முழுமையாக ஏற்றுக் கொள்ளாததால்தான்; பதினோராவது பதினெண் சித்தர் பீடாதி பதி, அதிகமாக, நேரடியாக ஆதிசங்கராச்சாரியாரின் வாழ்வில் ஈடுபடவில்லை.

இவரைப்போலவே இவரால் ஆதிசங்கராச்சாரியாருக்கு ஆசிரியர்களாகவும்,

வழிகாட்டிகளாகவும், துணைவர்களாகவும் நியமிக்கப்பட்ட ஏழு இருடிகளும் ஆதிசங்க -ராச்சாரியாரின் விருப்ப வாழ்வில் அதிகம் குறுக்கிடாமலும், எந்தவிதமான திருத்த அறிவுரைகளைக் கூறாமலும் ஒதுங்கி விலகியே செயல்பட்டிட்டார்கள் அதாவது,

**32-வது ஆதிசங்கராச்சாரியாரின் சிறப்பு மாணாக்கர் கரூர் சந்தானம் பற்றிய செய்திகள்**

பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் குருவாணைப்படி இசுரவேல் நாட்டு ஈசா செயல்படாமல் வாழ்ந்ததால் துன்புற்றது போல் இந்தத் தேவகுமாரப் பதிலி ஆதிசங்கராச்சாரியாரும் பதினோராவது பதினெண்சித்தர் பீடாதி -பதியின் குருவாணைப்படி செயல்படாததால் துன்புற நேரிட்டது. அதே சமயத்தில் ஆதிசங்கராச்சாரியாரின் செயல்கள் சிறக்க வேண்டுமென்பதற்காக அமராவதியாற்றங்கரைக் கருவூரிலிருந்து சித்தர் காகபுசுண்டர் பாரம்பரியத்திற்குரிய சந்தானத்தை (இவரை ஆதிசங்கராச்சாரியார் சந்தானா என்றும், சநந்தனா என்றும் செல்லமாக அழைத்துத் தன்னுடைய சிறப்பு மாணாக்கனாக வைத்துக் கொண்டார்) வட நாடு சென்று காசியிலிருந்த சங்கராச்சாரியாரைச் சந்தித்து அவருக்குத் துணையாக இருக்குமாறு அனுப்பினார். இந்தச் சந்தானம் ஆதிசங்கராச்சாரியாருக்குப் பாதுகாப்பாக அனுப்பப்பட்டதால் காத்தற் கடவுளான மாயோனை (திருமால், பெருமால், நெடியோன்)யும், அவனுடைய சிறப் -பான பேராற்றல் மிக்க அருள் வடிவான நரசிம்ம வடிவத்தையும், அவ்னுடைய இராமாவதாரப் பாதுகாவலனான ஆஞ்சநேயரையும், 36 திருக்கரம் கொண்டருளு ஆத்தாள் தேவிகொற்றவையையும்சித்திப் பூசையில்வழிபடுமாறு ஆணையிடப்பட்டார். இதன்படியே, இவர், இறுதிவரை ஆதிசங்கராச்சாரியாருக்கு அருளுலக பொருளுலகப் பாதுகாப்பாக விளங்கினார். ஆனால் இவர் எவ்வளவோ முயன்று எடுத்துக் கூறியும் கூட; ஆதிசங்கராச்சாரியார் 32 ஆண்டுகளுக்கு மேல் வாழ மறுத்து 32 ஆண்டுகள் நிறைவுற்றதும் திருக்கயிலாயம் சென்று விட்டார். அப்படித் திருக்கயிலாயம் சென்ற ஆதிசங்கராச்சாரியாரின் முழுமையான வாழ்க்கையினைப் பற்றியும், அவருடைய எளிய போதனை விளக்கங்கள் பற்றியும், சாதனைகள் பற்றியும் நெடுங்காலம் விளக்கியுரைத்தார் இந்தச் சந்தானம். இப்படி, இவர், ஆதிசங்கராச்சாரியாரோடு வாழ்ந்த பெரியவராகத் திகழ்ந்தும் கூட; இவருடைய காலத்திலேயே பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள் சூழ்ச்சியாக தமிழரான ஆதிசங்கராச்சாரியாரைத் தங்களுடைய குருவாக, ஆச்சாரிய பீடமாக, வேதமதத் தலைவராக அறிவித்துப் போற்றித் தங்களுடையவராக ஆக்கிக் கொண்டார்கள். அப்பாவித் தமிழர்களும் இதனை நம்பி ஏமாந்தார்கள்.

**பிருமணச் சூழ்ச்சியும் வேதமதச் செழிச்சியும்**

அதாவது, முதல் யுகத்தில் வாழ்ந்த தமிழர்களான சிவன், முருகன், பிள்ளையார், கணபதி, விநாயகர், திருமால், பிறமண், நாரதர், ஐயப்பன், குபேரன், இந்திரன் தேவேந்திரன்முதலிய......சித்தர்களையும், முனிவர்களையும், இருடிகளையும், பத்தியாளர்களையும், சத்தியாளர்களையும், சித்தியாளர்களையும், முத்தியாளர்களையும்; இதேபோல் இரண்டாவது மூன்றாவது யுகங்களிலும், நான்காவது யுகமான கலியுகத்திலும் தமிழினத்தில் தோன்றிய அனைத்துவகையான சித்தர்களையும், பத்தியாளர்களையும், சத்தியாளர்களையும், சித்தியாளர்களையும், முத்தியாளர்களையும், இருடிகளை -யும், முனிவர்களையும், தங்களுடைய ஆரிய இனத்துக்கும், சமசுக்கிருத மொழிக்கும் வேதமதத்துக்கும், ஆரிய நாகரீகத்திற்கும் உரியவர்களாகச் சூழ்ச்சியாக அறிவித்து ஏமாற்றி விட்டார்கள், இந்தப் பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள்

இவற்றையெல்லாம் அப்பாவிகளான தமிழர்கள் ஏமாளித்தனமாக ஏற்றுக் கொண்டிட்ட காரணத்தினால்தான்; தங்களுடைய மொழியும், இனமும், மதமும், பண்பாடும், நாகரீகமும் நான்குயுகங்களாக வாழ்ந்து வளர்ந்து வந்திருக்கின்றன என்ற பேருண்மையை உணரவோ, நினைக்கவோ, நமபவோ, எண்ணிப்பார்க்கவோ முடியாதவர்களாகிவிட்டார்கள். அதாவது, 'ஆலமரம் போல் ஆழமாக மதம், மொழி, இனம், பண்பாடு, நாகரீகம் என்கின்ற வேர்களையும், விழுதுகளையும் பெற்று நிலைத்துநிற்க வேண்டிய தமிழர்கள்; நீர் மேல் வேரில்லாமல் படர்ந்து கிடக்கும் பாசி போல் சிதைந்தும், நைந்தும், பிய்ந்தும் நீரலைகள் மேல் காற்றுக் கேற்ப மிதந்து கிடப்பவர்களாகி விட்டார்கள்.' தமிழர்கள், இப்படி வேரற்ற பாசி போல் வாழ ஆரம்பித்ததால்தான்; பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியர்கள், தமிழர்களுடைய சமயம், சமுதாயம், அரசியல், கலை, இலக்கியம், தொழில் முதலிய அனைத்துத் துறைகளிலும் வேரும் விழுதும் உடைய ஆலமரம் போல் நிலைத்துவிட்டார்கள். எனவே, தமிழகத்தில் தோன்றிடும் சீர்திருத்த வாதி -களும், சிந்தனையாளர்களும், அருட்பணி விரிவாக்கத்திட்டக் கலைஞர்களும் இந்த ஆலமரத்தின் இலைகளையும், கிளைகளையும் அகற்றுகின்ற அல்லது அழிக்கின்ற பணி -யில் மட்டுமே ஈடுபட்டதால்தான்; பிருமணர்களின் பொய்யான ஹிந்து மதத்தைத் தாக்கித் தகர்த்துத் தமிழர்களின் மெய்யான இந்துமதத்தை மறுமலர்ச்சியடையச் செய்ய முடியவில்லை. எனவே, ஆலமரத்தை ஆணிவேரோடு அகற்றிடும் மாபெரும் பணியை நன்கு திட்டமிட்டு நிறைவேற்றியேயாக வேண்டும். அப்பொழுது தான், தமிழினத் தாழ்ச்சி நிலை தொடர்ச்சி நிலையாகிடாது '' என்று கருவூர்த்தேவர் இக் கருத்தைப் பல இடங்களில் குருபாரம்பரியத்தில் குறிக்கிறார். அதில் குறிக்கப்பட்டுள்ள வாசகங்களும், சொற்களும் இங்கு சில இடங்களில் மாறியிருக்குமே தவிர இதிலுள்ள கருத்துக்கள் மாறவில்லை. மேன்மேலும், ஆழமாகவும், தெளிவாகவும், வலிவாகவும் தான் விளக்கப்பட்டிருக்கின்றன அதாவது, ''தமிழினத் தாழ்ச்சி நிலை ஏன் தொடர்ச்சி நிலையாகிறது?'' என்ற வினாவைத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்தான் மிக நேரடியாகவும், தெளிவாகவும், பச்சையாகவும் எழுப்பி விடை தேடுகிறார்.

ஏனெனில், கி.மு. முதலாம் நூற்றாண்டில் தோன்றிய பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்கள்தான், முதன்முதல், கலியுகத்தில் இந்தியாவுக்குள் வந்திட்ட பிற மண்ணினரான பிருமணர் எனப்படும் வட ஆரியரை எதிர்த்துப் போராட நேரிட்டது.

**பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் பிருமண எதிர்ப்புப் போராட்டம்**

அதாவது, இவர் மிகத் தெளிவாக, மற்ற ஒன்பது பதினெண் சித்தர் பீடாதிபதிகளும் சித்தர் நெறியெனும் இந்து மதத்தில் காலப்போக்கில் ஏற்பட்டிட்ட தேய்வு நிலைகளையும், ஓய்வுநிலைகளையும், தேக்கநிலைகளையும், மடக்க முடக்க அடக்க ஒடுக்க நிலைகளையும், வீக்க நிலை களையும், இயல்பான மானுடக் கற்பனை நிலைகளையும், புரியாமையால் விளையும் அறியாமை நிலைகளையும், பயிற்சியின்மையால் விளையும் மடமைகளையும் அகற்றுகின்ற பணியில் மட்டுமே ஈடுபட்டிட்டார்கள் என்றும்; ஆனால், தாமோ, வட இமயமலையின் கணவாய்களின் வழியாகக் குடும்பம் குடும்பமாக ஆடுமாடு களை ஒட்டிக் கொண்டு குடுமியும் கோவணமும் கோலும் குடுவையும் கொண்டு நாகரீகச் செழுமைமிக்க இந்துமத இந்தியாவுக்குள் நுழைந்த பிறமண்ணிரான பிருமணர்

வட ஆரியர்கள் செய்திட்ட சூழ்ச்சிகளால் விளைந்திட்ட திரிபுகளை, மாற்றங்களை, சிதைவுகளை, சீரழிவுகளை, காட்டுமிராண்டிக் கற்பனைகளை, பயனற்ற பழக்க வழக்கங்களை, மூடநம்பிக்கைகளை, சுரண்டலுக்குரிய சாத்திரச் சம்பிறதாயச் சடங்குகளை, ஆரிய வேதநாகரீகக் கலப்பினை மிகுதியாகப் பெற்ற புராண இதிகாசங்களை, எவ்வித அருளாற்றலும் அற்ற சமசுக்கிருத மொழியின் ஆட்சியை...முழுமையாக அகற்றும் மாபெரும் போரட்டத்தை மாபெரும் போராகவே நிகழத்த வேண்டிய அவசியம் நேரிட்டுவிட்டது என்று தெளிவாகக் குறிக்கிருர். இம்மாபெரும் போரட்டப் போரிலேயே இவர் தமது (251) இருநூற்று ஐம்பத்தோராண்டுகளைகளையும் [கி.மு.100 முதல் கி.பி. 150 முடிய] கழிக்க நேரிட்டது பற்றிப் பலவாறு புலம்பலாகவே வெளியிடுகிருர் தமது குருபாரம்பரியத்தில். அதாவது, மற்ற ஒன்பது பதினெண் சித்தர் பீடாதிபதிகளுக்கும் ஏற்படாத ஒரு புதிய அனுபவம் இவருக்கு மட்டும் ஏற்பட்டது. அதாவது, முற்றிலும் இந்திய மண்ணுக்கும், இந்திய மனிதர்களுக்கும் இந்தியப் பண்பாட்டுக்கும், இந்திய நாகரீகத்திற்கும், மதத்திற்கும் புறம்பான, வேருன, மாருன அன்னியமான, எதிரான, எதிரியான, பிறமண்ணுக்குரிய பிற மண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியரை எதிர்த்துப் போராட வேண்டிய அவசியமும் அவசரமும் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி, குருமகா சன்னிதானம், ஞாலகுரு சித்தர் அமராவதியாற்றங்கரைக் கருவூரார் அவர்களுக்கு ஏற்பட்டது என்பதை; அவரே நூற்றுக்கணக்கான இடங்களுக்கு மேல் குறிக்கின்ருர். இந்தச் செய்திகளுக்கெல்லாம் தலையாய செய்தியாக; 'அதாவது, வடஇமயமலையின் கணவாய்களின் வழியாக இந்தியாவிற்குள் வந்த பால்வண்ண மேனியரான வட ஆரியர்களின் அழகும், குறுகிய கோணல் சிந்தையும், நெஞ்சமும் தான்; நான்கு யுகங்களாக வாழ்ந்து வரும் பதினெண் சித்தர்களின் இந்து மதத்தை நலிந்து மெலிந்து நோயுறச் செய்தது என்ற செய்தி இவரால் தெளிவாக வலியுறுத்தப்படுகிறது. எனவே, இவர் தன்னுடைய வாழ்நாளான (251) இருநூற்று ஐம்பத்தோராண்டுகளையும் பதினெண் சித்தர்களின் இந்துமதத்தைக் கெடுத்திட்ட பிறமண்ணினரான பிருமணர் எனும் வட ஆரியரை எதிர்த்துப் போரிடுவதிலேயே கழித்திட்டார். அதாவது, ''பிருமணர்களின் வேதமதமும், சூழ்ச்சியான சுரண்டல்மிகு சாத்திறச் தோத்திறச் சம்பிறதாயச் சடங்குகளும், சமசுக்கிருத மொழியும் தமிழர்களை வீழ்த்தி ஆழ்த்தித் தாழ்த்தியே வைத்துக் கொண்டிருக்கின்றன'' என்ற பேருண்மையைக் கண்டறிந்த பத்தாவது பதினெண்சித்தர் பீடாதிபதி; 'தமிழர்களின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சி நிலையாகக் கூடாது' என்று தலைப்பிட்டே எழுத்துப்பணிகளையும், பேச்சுப்பணிகளையும்,

**பிருமணர்களின் சூழ்ச்சியும் மூன்ருவது மதுரையின் அழிவும், பாண்டியப் பேரரசின் சிதைவும்**

செயல்நிலைப் பணிகளையும் ஆற்றினர். ஆனல், விழிப்புற்ற வடஆரியர்கள்; தமிழ்மொழியின நாற்றுப்பண்ணையாக, விதைப்பண்ணையாக, உலைக்கூடமாக, கலைக்கருவூலமாக, ஆவணக்காப்பகமாக, பாடிவீடாக, பாசறையாக இருக்கும் தமிழ்ச்சங்கம் இருக்கும் மதுரை மாநகரையும், பாண்டியப் பேரரசையும் மிகப்பெரிய சதித்திட்டங்களால் பூண்டோடு ஒழித்தார்கள்.

அதாவது, சிலப்பதிகாரம் கூறும் கோவலனின் கொலை நிகழ்ச்சியை நன்கு பயன்படுத்திக் கொண்டிட்ட வடஆரியர்கள்; இமயமலைச்சாரலில் இருந்த பிராகிருத மொழி பேசும் களப்பிறர்களையும், கங்கை கடலோடு கலக்குமிடத்தில் இருந்த

பாலிமொழி பேசும் கலப்பிறர்களையும் முறையே நிலவழியாகவும், கடல்வழியாகவும் வரச்செய்து; 'பைந்தமிழ் காத்த பாண்டியப் பேரரசை குரங்குக் கூட்டம் புகுந்த கனி மலர்ச் சோலையைப் போல்ச் சிதைத்துச் சீரழித்து விட்டார்கள்.' இந்த மாபெரும் வரலாற்று நிகழ்ச்சியை மிக மிக விரிவாகச் சித்தரிப்பதோடு அழிந்த மதுரையிலிருந்து தாம் காப்பாற்றிய தமிழிலக்கியங்களைப் பற்றியும் விரிவாக விளக்குகிறார் பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி. இப்படி, இவர் எழுதிய குருபாரம்பரியத்தின் இறுதியில் 'தமிழர்களின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சி நிலையாகக் கூடாது' என்ற வேண்டுகோளை விடுத்திருக்கிறார். இந்த வேண்டுகோள் வாசகமே பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதியை மிகுதியாகச் சிந்திக்கவும், பல உலகச் சுற்றுப்பயணங்களைச் செய்யவும் செய்தது. மேலும், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி; தமிழர்கள், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியின் வேண்டுகோளை தெரிந்திருந்தும் அதனடிப்படையில் சிந்தித்துச் செயல்பட்டுத் தங்களின் தாழ்ச்சி நிலையைத் தொடர்ச்சி நிலையாக ஆக்காமல் ஏன் விழிச்சியும் எழிச்சியும் பெற்றுப் புரட்சி செய்து செழுச்சியடையவில்லை என்று எண்ணியெண்ணி வருந்தினார். அந்த வருத்தத்தினால்; தாம் செய்ய வேண்டியவைகளையெல்லாம்

**11 வது பதினெண்சித்தர் பீடாதிபதியின் அருட் பேரரசும் அதன் வீழ்ச்சியும்**

திருத்தமாகப் பட்டியலிட்டுக் கொண்ட பிறகே செயலில் இறங்கினார். அதாவது, பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்களுடன் நேரடியாக மோதாமலும்; நாட்டிலுள்ள மக்களிடையில் புதிய கருத்துக்களைக் கூறிக் கருத்துப் புரட்சியை உண்டாக்கி மோதல்களை விளைவித்து கொள்ளாமலும்; சிறியவர் முதல் பெரியவர் வரை சமசுக்கிருதத்திற்கும், வடஆரிய வேதத்துக்கும், பிருமணர்களுக்கும் அடிமையாக இருப்பதைத் தடுக்கவோ திருத்தவோ முற்பட்டுக் கசப்புக்களை வளர்த்துக் கொள்ளாமலும்; திறமையாகத் திட்டமிட்டுப் புதியதோர் புரட்சித் தலைமுறையை உருவாக்கினார். அதாவது, தான் தேர்ந்தெடுத்த ஆணுக்கும் பெண்ணுக்கும் வாரிசை உண்டாக்கி; அதைத் தனது விருப்பம் போல் வளர்த்துப் புதிய அரச பரம்பரையை உண்டாக்கி அருட்பேரரசை நிறுவினார். ஆனால், அவர், அப்படி அரும்பாடுபட்டு உருவாக்கிய அருட்பேரரசே சூழ்ச்சி மிகு பிருமணர்களால் தங்களுடைய அடிமைப் பேரரசாக மாற்றப்பட்டுவிட்டது. அதுகண்டு மிகவும் வேதனைப்பட்டு வீரிட்டுப் போருக்குக் கிளம்பினார். ஆனால், வெளிப்படையான போரினால் விளையும் சேதத்தாலோ, வெற்றியாலோ தமிழர்களின் அப்பாவித்தனமான, ஏமாளித்தனமான போக்குகள் மாறப்போவதில்லை. ஏனென்றால், தமிழர்களின், புதுமைக்கும் இன்பத்துக்கும் அடிமையாகும் பண்பாலும், கலையுணர்ச்சியின் வெறியாலும் தான் கூத்தாடிகளான வடஆரியர்கள்; நாட்டாட்சியையே தங்களுடைய விருப்பம்போல் நிகழச் செய்யும் வல்லமையைப் பெற்றிட்டார்கள் இதனால், இந்தத் தமிழர்களுக்கு எத்தகைய தத்துவம்மிகு சமய சமுதாய அரசியல் துறையை அமைத்துக் கொடுத்தாலும்; அவர்கள், அதனை அன்னியர்களிடம், அறிவற்ற கூத்தாடிகளிடம், சூழ்ச்சி மிகு சுரண்டல்காரர்களிடம், சதிகாரச் சந்தர்ப்பவாதிகளிடம் அடமானம் வைத்திடுவார்கள். எனவே, தமிழர்களின் போக, மோக வெறியுணர்வுகளாலும்; கண்மூடித்தனமான அடிமையுணர்வுகளாலும்; புதுமை நாட்ட வெறியாலும்; இனப்பற்றுணர்வோ, ஒற்றுமையுணர்வோ, மொழியுணர்வோ இல்லாமையாலும்; எப்பொழுதும் இந்தத் தமிழர்களை அன்னியர்கள்தான் ஆள முடியும். இந்தத் தமிழர்கள் எப்பொழுதும் அன்னியர்களுக்கு அடிமையாக இருந்து குற்றேவல் செய்பவர்களாகவும் தான் வாழ நேரிடும். எனவே, இவர்களுடைய தாழ்ச்சிநிலை தொடர்ச்சி

நிலையாகவே இருந்திடுவதைத் தவிர வேறுவழியில்லை. இதனைத் தடுப்பதற்கும், தவிர்ப்பதற்கும் பெருவாரியான பொதுமக்களிடையில் தத்துவப்புரட்சியை, கருத்துப் புரட்சியை, எண்ணப் புரட்சியை, சிந்தனைப் புரட்சியை, உணர்வுப் புரட்சியை, கலைப்புரட்சியை, இலக்கியப் புரட்சியை தமிழ் மொழியின் அடிப்படையில் பண்பாட்டுப் புரட்சியாக மலரச் செய்திடல் வேண்டும் அதற்காகத் தமிழர்களில் முக்கால் பகுதியினர்களாவது மொழி வளவளர்ச்சிக்காகவும், ஆட்சிமீட்சிக்காகவும், இன ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும், தனிமனிதத் தன்மானத்திற்காகவும், தன்னம்பிக்கைக்காகவும், ஒட்டுமொத்தமாகத் தமிழினத்தின் சுயமரியாதைக்காகவும், விடுதலைக்காகவும் உயிரையும் விலையாகக் கொடுத்துப் போராடக்கூடிய நிலையினைப் பெறுமாறு செய்திடல் வேண்டும்.

அதாவது, தமிழர்களில் கால் பகுதியினர் இனத் துரோகிகளாகவும், விரோதி-களாகவும், போலிகளாகவும், அன்னியரின் கூலிகளாகவும், கங்காணிகளாகவும், எடுபிடிகளாகவும், தரகர்களாகவும் வாழ்ந்தாலும் பாதகமில்லை; முக்கால் பகுதி-யினரைத் திருத்தி விட்டால் ஒரு முழுமைப் புரட்சியைச் செய்து விடலாம். இதற்-குரியனவற்றைச் செய்வதற்காகவே; புன்னாட்டுப் பன்னேக்குப் பல்கலைக் கழகத்தையும், பாலகர் பள்ளி, இளைஞர்பள்ளி, கருகுலம், குருகுலம், தருகுலம், திருகுலம் முதலியவைகளையும், தமிழ்ச் சங்கங்களையும், புலவர் பேரவைகளையும், பட்டிமன்றங்-களையும் முழுமையாகக் கலைத்து விட்டு நாட்டுக்கு ஆற்ற வேண்டிய பணிகளையும் தனிமனிதனுள் தம்மிடமே ஒப்படைத்துச் சென்றிட்டார், பதினோராவது பதினெண் சித்தர் பீடாதிபதி...'' என்ற குறிப்பு கருவூர்த் தேவரின் குருபாரம்பரியத்தில் இருக்கிறது.

கருவூர்த் தேவரின் குருபாரம்பரியத்தில் காலடி ஆதி சங்கராச்சாரியார் பற்றிய மிகப் பெரிய அரிய குறிப்பொன்று இருக்கின்றது. இக் குறிப்புக்கள் ஆதிசங்கராச்சாரியாரையும், சங்கராச்சாரியாரையும் பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்யுமாறு கண்டப்ப கோட்டைச் சித்தர் ஏனனம் பட்டியாரைத் தூண்டியிருக்கிறது. இது பற்றி அவரும், அவருடைய தந்தை உருத்திரம்பிள்ளையும், முன்னோர் சித்தர் கைகொட்டி நாதரும், காளாங்கிநாதரும் தொண்டர் சீர் பரவும் பண்டாரமும், விக்கிரமாதித்தக் இந்து மதத்தின் மூல குருக்களும், காகபுசுண்டர் வழிவந்த சித்தர் நாகப்பத் ஆச்சாரியார்கள் எண்மர் தீட்சதரும், அருங்குள இலிங்கம் கொண்ட தேசிகரும் ...பல ஆய்வுக் கட்டுரைகள் எழுதியிருக்கிறார்கள். சிலர் தனி நூல்களும் எழுதியிருக்கிறார்கள். இவற்றின் அடிப்படையில்தான், இ.ம.இ-யின் இரண்டாவது தலைவர் எட்டுவகை ஆச்சாரியார்களையும் பற்றிப் பல ஆராய்ச்சிக் கட்டுரையை எழுதினார். 1) சிவாச்சாரியார், 2) ஆதிசிவாச்சாரியார் 3) ஈசுவராச்சாரியார் 4) ஆதிஈசுவராச்சாரியார் 5) பரமாச்சாரியார் 6) ஆதிபரமாச்சாரியார் 7) சங்கராச்சாரியார் 8) ஆதிசங்கராச்சாரியார் என்ற எண்மரைப் பற்றி-யும் 'இந்துமத மண்டபத்தின் எட்டுத்தூண்கள்' என்ற தலைப்பில் சிறப்புக் கட்டுரைகள் பல எழுதியுள்ளார். இவற்றிற்கு ஆதாரமாக உள்ள கருவூர்த்தேவரின் குருபாரம்பரிய வாசகமொன்றை இங்கு குறிக்க விரும்புகின்றோம்.

''எந்தை, பதினோராவது பதினெண்சித்தர் பீடாதிபதி சிந்தை நொந்து

பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியரின் விந்தைமிகு திறமையின் விளைவுகளால் தமிழர்கள் எப்படியெல்லாம் மிகஎளிதாக ஏமாற்றப்பட்டு விட்டார்கள் என்பதை விளக்கிக் கூறியனவற்றை நினைத்து நினைத்துத்தான் நான், அரிய பெரிய பணிகளைத் தொடர்ந்து ஆற்றி வருகிறேன். அதாவது, பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதி இசுரவேல் நாட்டு தேவகுமாரனை வளர்த்தது போல் எந்தை சேர நாட்டுத் தேவகுமாரப் பதிலி ஆலப்புழையாற்றங் கரையில் (சூர்ணூ, பூர்ணூ, ஆலவாய்ப்புழை) உள்ள காலடியில் தோன்றிய ஆதிசங்கராச்சாரியாரை அருளாளராகத் தயாரித்தார். ஆனால், இசுரவேல் நாட்டார்கள் தேவகுமாரன் ஈசனை (ஈசுவரன் —> ஈசா —> ஏசா —> ஏசு) உலகம் என்றென்றும் நன்கு நினைவுபடுத்திக் கொள்ளுமளவு அவனுடைய வாழ்வியல் தொடர்பான இடங்கள்; அவனுடைய தோற்ற வடிவமைப்பு; அவன் உதிர்த்த வாய் வார்த்தைகள்; அவன் காலத்திய மனிதர்கள், இடங்கள், பழமையான நிகழ்ச்சிகள் முதலிய அனைத்தையும் குறித்துத் தொகுத்து வைத்துள்ளார்கள். அவர்களைப் போல், பத்தாவது பதினெண் சித்தர் பீடாதிபதியைப் பற்றிய வாழ்நாள் குறிப்புக்களைத் தமிழர்கள் தொகுத்துக் காத்து வைக்கவில்லை. அது கூடப் பாதகமில்லை; எத்தையார் இந்தியா முழுதுமுள்ள பிறமண்ணினரான பிருமணர் எனப்படும் வடஆரியர்களைத் திருத்துவதற்காக உருவாக்கப்பட்ட காலடி ஆதிசங்கராச்சாரியாரின் தோற்ற வடிவம், வாய் வார்த்தைகள், வாழ்வியல் தொடர்பான சிந்தனைகள், மனிதர்கள், இடங்கள், நிகழ்ச்சிகள் முதலியவைகளையெல்லாம் குறித்துத் தொகுத்துப் பாதுகாத்து வைக்காமல் போய்விட்டார்கள். இதற்கு என்ன செய்வது?! உச்சிக் குடுமியராக, குறுந்தாடி முடியுடையவராக, வெள்ளாடை மேனியராக இமயம் முதல் குமரி வரை இரண்டு முறைகளுக்கு மேல் நாடறிய ஞானஉலா வந்த ஆதிசங்கராச்சாரியாரையே புத்தபிட்சு போல் மொட்டையடித்துக் காவிகட்டி முக்காடிட்ட கோலத்தராக்கிப் பிருமணகுல ஆச்சாரியாராக்கி விட்டார்களே இந்த வட ஆரியர்கள். இவர்கள், துணிந்து இப்படி மாபெரும் பொய்மைகளை உருவாக்கியதை எண்ணி வியப்பதா?; அல்லது இவர்கள் எதைக் கூறினாலும் அதை அப்படியே நம்பி ஏற்றுக் கொள்ளும் தமிழர்களை எண்ணி வேதனை யடைவதா? என்றே புரியவில்லை. தமிழிலுள்ள சாத்திர தோத்திர அத்திறங்களைப் பிருமணர்களும் புரிந்து கொள்ளுமாறு ஆதிசங்கராச்சாரியாரைச் சமசுக்கிருத மொழியில் சுருக்கமான பத்தி இலக்கியங்களை எழுதக் கட்டளையிட்ட தாம் உயிர் வாழும் பொழுதே இந்தப் பிருமணர்கள், ஆதிசங்கராச்சாரியார் சமசுக்கிருதத்தில் எழுதியவை அனைத்தும்; வடஆரிய வேதங்கள், உபநிடதங்கள், சுருதிகள் ஆகம ஆரண மீமாம்சைகள் முதலியவைகளிலிருந்து எழுதப்பட்ட சாரமேயாகும் என்று துணிந்து புனைந்து பொய் கூறுவதை எதிர்த்துப் போராடுவதோ போரிடுவதோ எளிதல்ல! எளிதல்ல! எளிதல்ல! எளிதேயல்ல!.

**கருவூர்த் தேவரின் 32 வது ஆதிசங்கராச் சாரியார் பற்றிய செய்திகள்**

மேலும், இந்தப் பிருமணர்களில் ஒவ்வொருவரும் தங்களுடைய இன ஒற்றுமைக்காகவும், ஒருமைப்பாட்டுக்காகவும், உயர்ச்சிக்காகவும், ஆட்சிக்காகவும் எத்தனை பெரிய தியாகத்தையும் செய்ய தயாராக இருக்கிறார்கள் என்பதை எண்ணும் போது; இவர்களின் பிடியிலிருந்து தமிழர்களைக் காப்பது அரிது! அரிது!

அரிது! அரிதினும் அரிது!. அதாவது, இந்தப் பிருமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள்; எதை விலையாகக் கொடுத்தாவது தமக்குத் தேவையான தமிழினத் துரோகிகளையும் விரோதிகளையும் மிக எளிதில் தயாரித்து விடுவார்கள். எனவே, தமிழர்களில் முக்கால் பகுதிக்கு மேலாவது தமிழின, விடுதலை, ஒற்றுமை, ஒருமைப்பாடு. சுயமரியாதை, தன்மானம் தன்னம்பிக்கை முதலியவற்றைப் பற்றோடும், பாசத்தோடும் சிந்தித்துச் செயல்படு பவராக உருவாக்கப்படல் வேண்டும். அப்பொழுதுதான், தமிழினத்தின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சிநிலையாகிடாது...'' என்று மிகத் தெளிவாகக் குறிக்கின்றார். ஆனால், இக்குருபாரம்பரிய வாசகப்படி எந்தையாலேயே செயல்பட முடியவில்லை; மற்றவரா-லும் செயல்பட முடியவில்லை...''இந்தக்குருபாரம்பரிய வாசகத்தைக் கருவூர்த்தேவர் தமது குருபாரம்பரியத்திலே திருத்தமாகவும், விளக்கமாகவும் பல இடங்களில் குறிப்பிடுகிறார். எனவே தான், தமிழினத்திற்கென்று தமிழினத்திலேயே ஓர் ஆச்சாரி-யாரோ, பீடமோ தலைவரோ தோன்ற முடியவில்லை!. தோன்ற முடியவில்லை! தோன்றவே முடியவில்லை!.

**கருவூர்த் தேவரின், தமிழின மீட்சிக்குரிய திட்டங்கள்**

கருவூர்த்தேவர், தமது குருபாரம்பரியத்தில், எந்தை, சமக்கிருத வெறிபிடித்த பிருமணர்கள், தமிழ் மொழியை வளர்க்கும் பௌத்தர்களிடமிருந்தும், சமணர்களிடமிருந்தும் தமிழ் மொழியைப் பிரித்துத் தனிமைப்படுத்தி அழித்தொழிக்கும் பணியில் ஈடுபட்டிருப் பதைத் தடுத்து தமிழ்மொழியைக் காப்பதற்காகவும்; தமிழ்மொழியின் அருமை பெருமைகளையும், அரிய பயன்களையும் பிருமணர்களே உணருமாறு செய்வதற்-காகவும்; சமசுக்கிருத மொழியில் பல புதிய மத இலக்கியங்களை உருவாக்கிடு-வதற்காகவுமே உருவாக்கப்பட்ட கருணீக்கச் சைவ வேளாளக் குலத்துச் செல்வன ஆதிசங்கரனையே தங்களுடைய ஆச்சாரியாராக ஆக்கிக் கொண்ட இந்தப் பிருமணர்களை யாராலும் வெல்ல இயலாது. அப்படி யாரேனும் வென்றிட நினைத்தால் மானுடக் குருதி மழைபெய்யவே நேரிடும். அதாவது இந்தப் பணியைக் குருதியாறு ஓடவிடாமல் நிறைவேற்ற யாராலும் முடியாது. எனவேதான், முதல் யுகத்திலிருந்து இன்றுவரையுள்ள சமய சமுதாய அரசியல் கலை இலக்கிய தொழில் துறைகளின் மெய்யான வரலாறுகளையும், சாதனைகளையும், போதனைகளையும் எளிமையாக விளக்கியுரைத்து எண்ணற்ற இலக்கியங்களை இருபத்தேழு வண்ணங்-களிலும் எழுதியேயாக வேண்டும்! எழுதியேயாக வேண்டும்! எழுதியேயாக வேண்டும்!......என்று வலியுறுத்திக் கூறுகிறார்'' — இந்தக் கருவூர்த் தேவரின் குருபாரம்பரிய வாசகந்தான்; இவரையொட்டித் தோன்றிய எண்ணற்ற சித்தர் குடும்பத்தவர்கள் இ.ம.இ.யின் மறுமலர்ச்சிக்காக கடந்த பல நூற்றாண்டுகளாய் எதுவுமே செய்ய இயலாமல் செய்து விட்டது.

**12வது பதினெண் சித்தர் பீடாதிபதி பற்றிய கருவூர்த்தேவரின் குருபாரம்பரிய வாசகம்**

கருவூர்த்தேவர் தமது குருபாரம்பரிய வாசகத்தில், ''எந்தை உருவாக்கியவர்-களிலேயே மிகச் சிறந்தவர், தலையாயவர் என்று கருதப்பட்ட ஆதிசங்கராச்சாரியார்-தாம் முப்பத்திரண்டாவது ஆதிசங்கராச்சாரியாராகத் தோன்றியவர் என்பதற்கறிகுறியாகத் தமது 32-வது வயதிலேயே அனைத்துச் சாதனைகளையும் போதனைகளையும் முடித்துச் சென்றடைந்த இமயமலைப் பகுதிக்கே நானும் சென்றடைய விரும்புகிறேன். என்னுடைய பணிகள்

அனைத்துமே ஏட்டளவிலும், நாட்டளவிலும் சித்தர்களின் மெய்யான இந்துமதம் முற்றிலும் பட்டுப்போய்விடாமல் பாதுகாக்கக் கூடிய நிலையைத்தான் பெற்றிருக்கின்றன. அதிலும், இவை எல்லாம் அடுத்துத் தோன்றப்போகும் பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதியின் கைக்கு முழுமையாகக்கிடைத்திடுமோ! கிடைத்திடாதோ! என்று கவலையுறவே செய்திருக்கின்றன என்னை. எனவே எல்லாச் சூழ்ச்சித் திறனும படைத்த பிறமண்ணினரான பிருமணர் எனும் வடஆரியர்கள் கையில் சிக்கிக் கொள்ளாதவாறு வாழையடி வாழையாக அனைத்தையும் மறைகளாக, முறைகளாக, நெறிகளாக வேதங்களாக, சித்தங்களாக, நாதங்களாக, போதங்களாக, ஓதங்களாக. இலைமறைகாயாக வாழச் செய்வதே எமது கடமையாகிவிட்டது. மேலும் சீர்காழிச் சிவ பாத இருதயர் மகன் திருஞான சம்பந்தன்தான் அதே கருணீக்கசைவவேளாளர்மரபில் சேர நாட்டுக் காலடியில் ஆதிசங்கரனுகத் தோன்றிச் செயல்பட்டிட்டான் என்ற ஒரே ஒரு பேருண்மை மட்டும் அடுத்துத் தோன்றப் போகும் 12-வது பதினெண்சித்தர் பீடாதிபதிக்கு முழுமையாகக் கிடைத்தால் போதும்! போதும்! போதும்! அதைக் கொண்டு அவர் மற்ற அனைத்துப் பேருண்மைகளையும் கண்டுபிடித்து விடுவார்! கண்டுபிடித்து விடுவார்! கண்டுபிடித்து விடுவார்! அவற்றின் அடிப்படையில் அவர் கடலாழத்து முத்துச் சிப்பி போல் தமது செயல்திட்டங்களை உருவாக்கிடுவார். தனது வாழ்வையும் அடர்காட்டிடைச் சந்தனமாக ஆக்கிடுவார்...'' என்று குறிக்கிருர். இப்படி ஆதிசங்கராச்சாரியார் பற்றிக் கருவூர்த்தேவர் குறிக்கும் குறிப்புகள் மெய்யான இந்துமதத்தின் மலர்ச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும், வளர்ச்சிக்கும், வள வளர்ச்சிக்கும், ஆட்சிமீட்சிக்கும் பேருதவி புரிவனவாக இருக்கின்றன. எனவேதான் 'தமிழர்களின் தாழ்ச்சிநிலை தொடர்ச்சி நிலையாவது ஏன்?' என்ற தலைப்பின் கீழ் யார் எதைச் சிந்தித்தாலும் அதில் கருவூர்த்தேவரின் குருபாரம்பரிய வாசகங்கள் முதன்மையான இடத்தைப் பெறுகின்றன.

**திருமாளிகைத் தேவர் பற்றிய செய்திகள்**

திருமாளிகைத் தேவரின் குருபாரம்பரியத்தில் காட்டாறுபோல் வேகமான போக்கும் வெடித்துச் சிதறும் எரிமலை போன்ற கருத்துச் சீற்றமும் காணப்படுகின்றன. இது அவருடைய இளமையின் வேகத்தாலும்; தாத்தாவும், தந்தையும் மிகப்பெரிய தோல்விகளையே சந்தித்திட்டார்கள் என்ற முடிவால் விளைந்திட்ட வருத்தத்தாலும்; தான் தொடர்ந்து இந்தியாவிற்குள் இருக்காமல் தனது விருப்பப்படி இம்மணுலகிலேயே சிறந்த இயற்கை வளம் கொழிக்கும் புதிய கண்டமான நில்வுக் கண்டத்திற்கு ஆசுத்திரரேலியா (AUST-RALIA) சென்று விடுவதற்கு முடிவு செய்திட்ட காரணத்தாலும் ஏற்பட்ட ஏக்க மிகு எரிச்சலாலும் பிறந்திட்ட மொழிநடையாகும். இவரது தந்தை கருவூர்த்தேவர் எவ்வளவோ தடுத்தும் கூட; இவர், தமது 96வது வயதில் (கி.பி.1137), விக்கிரம சோழன் ஆட்சி முடிந்து 2-ஆம் குலோத்துங்கனுடைய ஆட்சி துவங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட காலத்தில் சோழநாடு முழுவதும் அதிர்ச்சியிலும் கவலையிலும் தவித்திடும் வண்ணம் திருமாளிகைத் தேவர் நாகைக் கடற்கரையிலிருந்து நில்வுக் கண்டம் நோக்கிப் பயணமானுர். இதனுல்தான் விக்கிரமசோழன் கி.பி. 1136 ல் இறந்தும் இரண்டாம் குலோத்துங்கன் கி.பி. 1138 இல்தான் முடிசூட்டிக்கொண்டு அரியணையில் அமரவும் முடிந்தது அதாவது, ஓராண்டு கால இடைவெளி; திரு மாளிகைத் தேவர் நில்வுக்கண்டம் சென்றதால் விளைந்த கவலையாலும், கலக்கத்தா

-லும் கழிந்தது. மற்றொரு குறிப்பு திருமாளிகைத் தேவர் புறப்பட்டுச் சென்ற ஒன்றிரண்டு மாதங்களுக்குள் வைணவ சித்தாந்தத்தை உருவாக்கிய 'உடையவர்' எனப்படும்எம்பெருமானர் திரு இராமானுஞ்சாச்சாரியார் இயற்கை எய்தினர் என்ற செய்தி குறிக்கப்படுகிறது இந்த உடையவருக்குத் திருவரங்கத்தில் கருவூர்த் தேவரே முன்னின்று சமாதுக்கோயில் கட்டினர். அதுவும் இக்கோயிலை திருமாளிகைத் தேவரின் நினைவாகவே கட்டினர். ஏனென்றால், திரு மாளிகைத்தேவர் திருஇராமானுஞ்சாச்சாரியார் அவர்களிடம் மிகுந்த மதிப்பும் அன் -பும் உடையவராக இருந்தார். காஞ்சிபுரத்து முதலியார்களின் பெருமதிப்பிற்குரிய தலைவராகவும்,முதலியார் சமூகத்தின் புகழ்மிக்ககுடும்பத்தில்தோன்றியவராகவும் திரு இராமானுஞ்சர் விளங்கியதால் காஞ்சிபுரத்தில் தங்கியிருந்த திருமாளிகைத்தேவர் இராமானுஞ்சாச்சாரியாரின் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும், சொந்தக்காரர் -களுக்கும் மிக நெருக்கமுள்ளவராக விளங்கினர். அதாவது காஞ்சிபுரத்திலும், மாமல்லபுரத்திலுமிருந்த சிற்ப ஓவியப் போர்ப் பயிற்சிக் கலைக்கல்லூரியில் பலகாலம் தலைமை ஆசிரியராகவும், உத்திரமேரூரில் இருந்த படையின் படைத்தளபதியாகவும் திருமாளிகைத்தேவர் பணியாற்றிய காலத்தில் காஞ்சிபுரத்து முதலியார்களிடம் நெருக்கமான தொடர்பு ஏற்பட்டிட்டது. திருமாளிகைத் தேவர் பணியாற்றிய காலத்தில் காஞ்சிபுரத்து முதலியார்களில் உலகப்புகழ் பெற்ற அரசியல் வித்தகன், சாணக்கியன் தோன்றியதற்கு அடுத்து அவனுடைய மறு அவதாரமாகத் தோன்றிய -வரே திரு இராமனுாஞ்சாரியார் என று குறிக்கின்றார். கல்வியிற் சிறந்த காஞ்சியிற் தோன்றிய சிறந்த கல்விமான் ஆன சாணக்கியன் அர்த்த சாத்திரத்தையும், வானி யல் சாத்திரத்தையும், வாழ்வியல் சாத்திரத்தையும், மருத்துவ சாத்திரத்தையும்...... எழுதிச் சாதித்த சாதனைகளைவிட; அவருடைய மறு பிறப்பாகத் தோன்றிய எம் பெருமானர் திருஇராமானுஞ்சாச்சாரியார் அவர்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந் -தத்தின் மூலமும்; தான் உருவாக்கிய வைணவ சித்தாந்தத்தின் மூலமும் சாதித்த சாதனைகளே அரியவை, மிகப் பெரியவை, பயன்மிக்கவை என்று திருமாளிகைத் தேவர் குறிக்கின்றார்.

